THE MADURA TAMIL SANGAM

UNIVERSITY OF TRAVANCORE.
TAMIL SERIES No. 3.

# HARISCANDRA VENBA.

(FROM AN ANCIENT MANUSCRIPT)

EDITED BY
**Rao Sahib**
**M. RAGHAVA AIYANGAR,**
**Professor of Tamil,**
**University of Travancore.**

PUBLISHED BY
THE UNIVERSITY OF TRAVANCORE.

1949.

*Price Rs. 1-12.*

THE MADURA TAMIL SANGAM

ஸ்ரீ:

# அரிச்சந்திர வெண்பா

[முன்னோர் பாடியது]

திருவாங்கூர்ச்
சருவகலாசாலைத் தமிழ்ப்பேராசிரியர்
ராவ்ஸாஹிப்
மு. இராகவையங்கார்
பழைய சுவடிகொண்டு
பரிசோதித்தது

திருவாங்கூர்ச் சருவகலாசாலைத்
தமிழ்ப் பதிப்புத் தொடர்—3

கொல்லமாண்டு 1124] [விலை ரூ. 1—12—0

திருவனந்தபுரம்
பாஸ்கர அச்சுக்கூடத்தில்
நா. பத்மநாப ஐயங்காரால் அச்சிடப்பெற்றது.
1949.

THE MADURA TAMIL SANGAM

# உள்ளுறை


| | | பக்கம் |
|---|---|---|
| 1. | முன்னுரை | i |
| 2. | அரிச்சந்திரவெண்பா | |
| | க. சுயம்வரகாண்டம் | 1 |
| | உ. சலம்வருகாண்டம் | 25 |
| | ங. யாககாண்டம் | 46 |
| | ச. மிருகயாத்திரைக்காண்டம் | 56 |
| | ரு. விசுவாமித்திரப் பிரவேசகாண்டம் | 95 |
| | சு. இராச்சியதானகாண்டம் | 114 |
| | எ. காசியாத்திரைக்காண்டம் | 141 |
| 3. | குறிப்பு | 159 |
| 4. | செய்யுண் முதற்குறிப்பகராதி | i |
| 5. | பொருட்குறிப்பகராதி | v |
| 6. | பிழையுந் திருத்தமும் | |

ஸ்ரீ

அரிச்சந்திர வெண்பா

# முன்னுரை.

THE MADURA TAMIL SANGAM

சூரியவமிசத்தில் உதித்து அயோத்தியாபுரியிலிருந்து ஆண்ட பழைய பேரரசர்களுள், சத்தியநீதிநெறிகளில் தலைசிறந்த அரிச்சந்திர மகாராஜனைப் பற்றி அறியாதார் யாவர்? இவ்வேந்தனது உண்மை வரலாறுகள் யாவும் உலகம் அறிந்து போற்றுவனவாகும். ஐதரேயப் பிராம்மணம்போன்ற வேதப் பகுதிகளும், இவனையும்* இவன்மகன் ரோஹிதனையும் எடுத்துரைப்பன— எனின் இவனது பழைமை பெருமைகளைப் பற்றி வேறுகூறவும் வேண்டுமோ?

இவ்வேந்தர்பிரான் கடைப்பிடித்து ஒழுகிய சத்திய சீலசரிதத்தை மகாபுராணங்கள் வாயிலாகவும் நாம் அறியலாம். ஸ்ரீ வேதவியாஸபகவான் அருளிய ஸ்காந்தபுராணத்தில் இவனது உபாக்கியானம் தனியாக விரித்து ஓதப்பட்டுளது.† இப்

---

* இப்பகுதியில், அரிச்சந்திரவரசன் குமாரன் ரோஹிதனுக்குப் பிரதியாக யூபஸ்தம்பத்திற் கட்டப்பட்ட சுனச்சேபன் என்பான், வருணனைத் துதித்து ஆபத்திலிருந்து விடுவிக்கப்பட்டான் என்ற வரலாறு வருணிக்கப்பட்டுள்ளது [ஸ்ரீ P. S. சுப்பிரமணியசாஸ்திரிகள் இயற்றிய 'வடமொழி நூல் வரலாறு' பக். 144.]

† 'அரிச்சந்திரன்சரிதை' என்ற தமிழ்வசன நூலொன்று இந்த உபாக்கியானத்திலிருந்து பெரும்பாலும் மொழிபெயர்க்கப்பட்டதாம். இதனை மொழிபெயர்த்து அச்சிட்டுவெளியிட்டவர், சென்னைராஜதானி வித்யாசாலைத் தமிழ்ப் பிரதமபண்டிதராயிருந்த திருவல்லிக்கேணி சுதர்சனம் ஸ்ரீ கிருஷ்ணமாசாரியர் என்பார்.

பரதகண்டத்தே பலபிரதேசங்களிலும் அரிச்சந்திரசரிதையைக் கற்பதும் கேட்பதும் ஒரு புண்ணியப் பொழுதுபோக்காகவே கொண்டு மக்கள் கடைப்பிடித்து வருகின்றனர். இந்தச் சரிதையின் உள்ளீடான வரலாறுகளிற்சில, தேசந்தோறும் வேறுபட்டுக் காணப்படுகின்றன. நம் தமிழ் நாட்டவரும் இப்புண்ணிய கதையை அவாவுடன் அறிந்தும், நாடகமாக நடித்தும் போற்றி வந்தவர்களே. சத்தியநெறியானது நாட்டு மக்கள்மனங்களில் ஊன்றிவந்ததற்கு இக்கதையின் பிரசாரம் ஒரு சிறந்த காரணமென்றே சொல்லத்தகும். தமிழில் இச் சரிதம் செய்யுளுருவாகவும் முன்னோராற் பாடப்பட்டுள்ளது. *நல்லூர் வீரை ஆசுகவிராசர் என்பார் பாடிய 'அரிச்சந்திர புராணம்' என்ற காவியத்தின் சொற்பொருணயங்களைத் தமிழறிஞரெல்லாம் நன்கறிவர். அவ் வாசுகவிராசர்காலத்துப் புலவரொருவரால் அப்புராணநூன்முகப்பிற் பாடப்பட்ட பாயிரக் கவிகள் இங்குக் குறிப்பிடற்குரியன. அவை:—

"தண்கவிகைக் குருகுலரிச் சந்திரன்றன்
சரிதமதைத் தாரணியோர் விருப்ப மெய்த
வண்கவிஞர் வகைவகையே வகுத்துரைத்த
வடமொழியுந் தென்மொழியில் வழுவி லாத
வெண்கவியுங் கண்டரங்கின் மாத ராடல்
விதங்கேட்டு மழையெனவே வெகுண்டு சோலைக்
கண்கவிகள் குதிபாயும் நல்லூர் வீரைக்
கவிராச னேவிருத்தக் கவிசெய் தானே."

---

* 'நெல்லூர்வீரன் ஆசுகவிராசன்' என்பது பிற்காலத்துப் பாடம். 'நல்லூர் வீரை' என்பதே பழம்பாடமாகும். இவ்வீரை, சேதுநாட்டு விசுவனூர்ச் சேகரத்துக் குலோத்துங்கசோழ நல்லூரை அடுத்த ஊராகும். சேதுநாட்டுத் திருப்புல்லாணியில் இந்நூல் அரங்கேற்றப்பட்டிருத்தலும் ஆசுகவிராசரது ஊர் அந்நாட்டகத்ததே என்பதை வலியுறுத்துவதாம். (சேதுநாடும் தமிழும், பக். 12—பார்க்க)

"விதியினர சிழந்தவரிச் சந்தி ரன்றன்
வியன்கதையாம் வெண்கவியை விருத்த மாக்கி
அதிவிதமாங் கலியுகத்தில் வருச காத்தம்
ஆயிரத்து நானூற்று நாற்பத் தாறில்
சதுமறைசேர் புல்லாணித் திருமால் முன்னே
சக்கரதீர்த் தக்கரைமேன் மண்ட பத்துள்
சுதிதருசீர் நல்லூர்வாழ் வீரை யாசு
கவிராசன் கவியரங்க மேற்றி னனே."

இப்பாடல்களில், ஆசுகவிராசர் பாடிய அரிச்சந்திர சரிதைக்கு மூலமாயிருந்தவை:—

1. வண்கவிஞர் வகைவகையே வகுத்துரைத்த வடமொழி.
2. தென்மொழியில் வழுவிலாத வெண்கவி.

என்ற இருவகை நூல்களுமே என்பதைப் பாயிரக்கவிகள் கூறியிருத்தல் காணலாம். இவற்றால், அரிச்சந்திரசரிதங்கூறும் வடநூல்கள் பலவாயிருந்தன என்பதும், அவ்வாறே வெண்பாயாப்பில் அமைந்த தமிழ்நூலொன்றும் பழமையாகவே நாட்டில் வழங்கிவந்ததென்பதும் நன்கறியப்படும். இவற்றுள், பின்னதான தமிழ்நூலையே ஆசுகவிராசர் பெரிதும் தழுவியவராவர். இதனை:— "அரிச்சந்திரன்றன் வியன்கதையாம் வெண்கவியை விருத்த மாக்கி" எனவரும் அடுத்த பாடற்றொடரே விளக்குகின்றது. ஆனால், இவ்வாறு பழைய வெண்பாநூலொன்று உண்டு என்றசெய்தி தமிழறிஞர்களால் இதுவரை அறியப்பட்டதில்லை. இப்போது சேரநாட்டிலிருந்து புதியதாக இந்நூற்பகுதியை நாம் பெற நேர்ந்திருப்பது பெரிதும் மகிழ்ச்சிக்குரியதன்றோ?

திருவனந்தபுரம் வலியகொட்டாரத்து (பெரிய அரண்மனை)ப் புத்தகநிலயத்துள்ள தமிழேட்டுச் சுவடியொன்றனுள், அரிச்சந்திரசரிதங் கூறும் வெண்பா நூலொன்றும் அடங்கியிருந்தமை சிலகாலத்துக்குமுன் கண்டறியப்பட்டது. இதனைத் திருவாங்கூர்ச் சர்வகலாசங்கத்தைச் சார்ந்த கையெழுத்துப்

புத்தகசாலைத் தலைவர் பெற்றுக் காகிதத்திற் பிரதிசெய்வித்து வைத்திருந்தனர்.* இச் சர்வகலாசங்கத்துத் தமிழ்ப் பேராசிரியனாக நான் நியமனம்பெற்ற பின்பு, அப்பிரதியுடன் மூலச் சுவடியையும் பெற்றுச் சோதித்துவரலானேன், மூலச்சுவடி, சீதாளவிதழ்களில் வரையப்பெற்றதாகவும் பழைமை வாய்ந்ததாகவும் உள்ளது. ஆனால் நூலின் முற்பகுதியும் பிற்பகுதியும் அதனிற் காணப்படவில்லை. இது பெரிதும் வருந்தத்தக்கதாம். அதனால், நூல்முழுதையும் அறியவேனும் நூலாசிரியர் வரலாறு கால முதலியவற்றைத் தெரியவேனும் இடமில்லையாயிற்று. சுவடியில் இடையிடையே முறிந்தும் சிதைந்தும்போன பகுதிகளும் உண்டு. இப்பிரதிமூலம் கிடைத்துள்ள இந்நூலின் காண்டங்கள் ஏழாகும்; வெண்பாவின் தொகை முந்நூற்றுநான்கு.

இந்நூல் 'உரையிடையிட்ட பாட்டுடைச் செய்யுள்' எனப்பட்ட இலக்கியப் பகுதியைச் சார்ந்தது. பெருந்தேவனார்பாரதம், தகடூர் யாத்திரை, ஜீவசம்போதனை முதலிய நூல்கள் இத்தகையனவே. இதன் வெண்பாக்கள்யாவும் இனிய செந்தமிழ் நடையும் செப்பலோசைத்திறமும் சொல்வளம் பொருள்வளங்களும் உடையன. ஒவ்வொரு வெண்பாவையும் அடுத்து உரைநடை அமைந்துள்ளது. இது, பாடற்கருத்தையும் கதைத்தொடர்ச்சியையும் விளக்குவதாகும். இந்நூல், பெருந்தேவனாரது பாரதவெண்பாவின் போக்குடையதாயினும், இதன் நடைப்பகுதி மோனையெதுகைகளுடன் சொற்சீரடியில்† அமைக்கப்பட்ட உரைப் பாட்டாகும். சிலப்பதிகாரத்திற் கண்ட உரைப்பாட்டு மடையையும் சாஸனங்களிற் கண்ட

* இப்பிரதியைக் கவிமணி: ஸ்ரீ S. தேசிகவிநாயகம் பிள்ளையவர்களும், ராவ்ஸாஹிப்: S. வையாபுரிப்பிள்ளையவர்களும் பார்த்தும் படித்தும் மகிழ்ந்தவர்களே.

† சொற்சீரடியின் இலக்கணம், தொல்காப்பியம் செய்யுளியல் 123-ம் சூத்திரவுரையிற் காண்க.

மெய்க்கீர்த்திகளையும்* ஒத்தமைந்தது இதன் நடை. இவ்வாறுள்ள இதனமைதியை நோக்கும் அறிஞர்கள், மேலேகூறிய படி அரிச்சந்திரபுராண வாசிரியர்க்கு முதனூலாகவிருந்த 'வழுவிலாத வெண்கவி' (நூல்) என்பது இந்த அரிச்சந்திர வெண்பா என்றே கொள்வர் என்பது திண்ணம். இக் கருத்துக் கேற்ப;— அருந்துதி, நெதி, மனித்தர், தார் (தா—என்னேவல்) என்பவை போன்ற பழஞ்சொற்கள் இதனுட் பயில்வதும் ஈண்டுக் குறிப்பிடற்பாலது.

அரிச்சந்திரபுராண ஆசிரியர் இந்நூலின் கதாபாகங்களையே சிலவிடங்களில் விரித்தும் சுருக்கியும் செல்கின்றார். வேறுபட்ட கதைக்கூறுகளும் அவர் கூறியதுண்டு. இவ்வேறுபாடுகள், வடநூல்கள் பலவும் ஆராய்ந்து அப்புராணவாசிரியர் பாடியவர் என்பதனால் அமைந்தனபோலும். ஆயினும், இவ்வெண்பாநூலிற் காணும் சொற்பொருள்களையும் கதைகளையும் பெரும்பாலுந் தழுவியே தம் காப்பியத்தை இயற்றியவர் அக்கவிராசர் என்பதிற் சிறிதும் ஐயமில்லை.

இந்நூலின் ஆசிரியரது பெயர்வரலாறுகளில் ஒன்றும் தெரியவில்லை. ஆயினும் சைவசமயத்தவர் என்பதும் விநாயகக் கடவுள்பால் பத்தித்திறம் படைத்தவர் என்பதும் சிவபிரானைச் சிறப்பித்து இவர்பாடிய தொடர்களாலும், காண்டமுகப்புத் தோறும் அமைத்த விநாயகமூர்த்தியின் துதிப்பாடல்களாலும் தெளிவாம். இவரது நூலுக்கு முதனூலாயிருந்தது இன்னதென்பதும் தெரிந்திலது. இவ்வாசிரியர் நாஞ்சினாட்டவர் போலும். இஃது, ஏட்டிலமைந்துள்ள இலிபியின் அமைதியாலும், பகர்தல் (பெயர்தல்), புதைத்தல் (போர்த்தல்), தம்பிரான் என்பனபோன்ற சொல்வழக்காலும், வேறோரிடத்தும் காணப்படாமல் திருவனந்தபுரக் கொட்டாரப்புத்தகசாலையில்

---

* "தொழிலார்ந்த மெய்க்கீர்த்தி சொற்சீரடியால், எழிலரசர் செய்தியிசைப்பர்" [வச்சணந்திமாலை, 34] என்பது மெய்க்கீர்த்தியிலக்கணமாகும்.

இப் பழம்பிரதி அகப்பட்டிருத்தலாலும் ஊகிக்கப்படுகின்றது. இந்நூலாசிரியர் அரிச்சந்திரபுராணம் பாடிய ஆசுகவிராசர்க்கு இரண்டுமூன்று நூற்றாண்டேனும் முற்பட்டவராதல் வேண்டும். ஆயின், இவர் காலம் 13, 14- ஆம் நூற்றாண்டாகக் கொள்ளலாம்.

இந்நூற் சுவடியெழுதியவர் சிறந்த தமிழறிஞர் என்று சொல்வதற்கில்லை. இப்பிரதியில்

"எழுதினர் பிழைப்பும் எழுத்துரு வொக்கும்
பகுதியின் வந்த பாடகர் பிழைப்பும்
ஒருங்குடன் கிடந்த ஓவ்வாப் பாட(மும்)"

பலவாக உள்ளன. இவற்றுடன், ஏட்டின் சிதைவால் அறிய வாராத இடங்களும், பொருள்தெரியப்பெறாத சொல் தொடர் வழக்குக்களும் உள. மோனை, எதுகை, தளை முதலிய வெண்பா அமைதிகளைக் கொண்டும், உரைப்பாட்டிற் கண்ட சொற் பொருள்களின் விளக்கங்கொண்டும் பாடல்களிற்பல திருத்தம்பெற நேர்ந்தன. இவ்வாறு ஊகித்துத் திருத்தியவற்றை [ ] இக்குறியீட்டுள் அமைத்துக் காட்டியுள்ளேன். தமிழ் நாட்டு அறிஞர்களிடங்களிலும், பற்பல புத்தகசாலைகளிலும் வேண்டியவளவு விசாரித்தும், இந்நூற்கு வேறுபிரதி கிடைக்க இடமில்லையென்றே தெரியவந்தது. அதனால், கிடைத்துள்ள இவ்வரிய சுவடியையேனும் தவறவிடாது போற்றிக்கொள்வது நலமென்று எண்ணி, உள்ளவாறே சோதித்து இதனை வெளியிடலானேன். வேறு தக்க பிரதி இனிக் கிடைக்கக் கூடுமாயின், நூன்முழுமையும் வெளிவந்து அறிஞர்க்கு மகிழ்வூட்டக்கூடும். செந்தமிழ்மக்கள் அம் முழுப்பிரதியும் பெறுதற்கு முயல்வார்களாக. நம் காலத்தே அரிச்சந்திரசரிதையை வெண்பாவிற் பாடிய புலவர்களுண்டு.* இவை ஆசுகவிராசரது

* இராமநாதபுரஞ்சீமை முதுகுளத்தூரில், ஆறுமுகம்பிள்ளை என்பார் இயற்றிய அரிச்சந்திர வெண்பா என்ற நூல் ஒன்று அச்சிடப்பட்டுள்ளது.

அரிச்சந்திரபுராணத்தை முதனூலாகக் கொண்டு பாடப்பட்டவை.

இந்நூலை அச்சிட்டு வெளியேற்றும் கடமை திருவாங்கூர்ச் சர்வகலாசங்கத்தார்க்கே உரியது. அக்கடமை என்மூலம் நிறைவேறுவதற்கு வேண்டிய உதவிகள் யாவும் அச்சங்கத்தாரால் அன்புடன் எனக்களிக்கப்பட்டன. இது பெரிதும் கொண்டாடத்தக்கதாகும். இந்நூற் பதிப்புக்கு இன்றியமையாத பணிகளைப் புரிந்துதவியவர், தமிழாராய்ச்சித்துறையில் எனக்கு உதவியாளராக உள்ள ஸ்ரீ டி. என். கிருஷ்ணையங்காரவர். இவர்க்கும், இப்பதிப்பு நன்கமைதற்கு வேண்டுவன புரிந்த திருவனந்தபுரம் "பாஸ்கர" அச்சுக்கூடத் தலைவர் ஸ்ரீ. என். பத்மநாப ஐயங்காருக்கும் என் நன்றி உரியவாகுக.

திருவாங்கூர்ச் சர்வகலாசாலை,
திருவனந்தபுரம்,
30-4-1949.

இங்ஙனம்,
மு. இராகவையங்கார்,
தமிழ்ப் பேராசிரியர்.

# அரிச்சந்திர வெண்பா

## முதலாவது

## சுயம்வர காண்டம்.*

[உரைப்பாட்டு]

.........இ[ர]தஞ் செகதலத்தி லே[றும்] படி
யாவராலும் தரிக்கவொண்ணா தென்கின்ற வெண்ணா......
[க]ல்லாகச் சாபித்தென் கரங்காட்டிக் கொடுக்காநின்ற
மல்லாருந் தடந்தோளா[னு]ம்† ஒருவரத்தைக் கூறினன்;

*இந்நூலின் தொடக்கமான பகுதி இதன் பிரதியில் காணப்படவில்லை. சிதைந்துள்ள தொடருடன் இப்பிரதி தொடங்குகின்றது. இதன் வழிநூலாகத் தெரியும் அரிச்சந்திர புராணத்திற் கண்ட ஆரம்பவரலாறு பின்வருமாறு:—

அயோத்திமாநகரில் அரிச்சந்திரன் என்ற அரசன் சிங்காதனமேறி ஆண்டுவருங்கால், கன்னோசி நாட்டினின்றும் வந்த முனிவர் சிலர், அவன் திருவோலக்கத்தை அணுகி அக்கன்னோசியரசனை 'மதிதயனுடைய திருமகள் சந்திரமதி என்பாளே உனக்குத் தேவியாகத் தக்கவள்' என்று கூறினர்.

† இவ் வுரைப்பாட்டில் வரும் 'மல்லாருந்தடந்தோளான்' என்ற தொடர் வருணனைக் குறிப்பதென்பது, இதன்வழிநூலால் தெரிகின்றது.

*சத்தியத்தாலும் தன்மத்தாலும் தானத்தாலும் வீரத்தாலும்*
*உத்தமனு யிருக்கின்ருன் யாவனொருவன் சந்தித்தால்*

---

அதுகேட்ட அரிச்சந்திரன் அகமகிழ்ந்து, அச்சந்திரமதியைத் தனக்கு மணம்பேசி முடிக்க அம்முனிவர்களைவேண்டி அவள் தந்தையிடம் அன்னுரையே அனுப்பினன். அவர்களும் அப்படியே சென்று, மதிதயனுக்கு அரிச்சந்திரனது அருமை பெருமைகளையெல்லாம் விரிவாக அறிவித்தார்கள். அதுகேட்ட மதிதயன் "தன் புத்திரிக்குரிய வரன் இன்னுன் என்பது பற்றிச் சிவபிரான் முன்பு தன்னிடம் அருளிச்செய்த தேவ ரகசியமொன்று உண்டு; அரிச்சந்திரமகாராசனை நேரில் இங்கு அழைத்து வாருங்கள்; அவன் என் மகட்குக் கணவனுதற் குரியவனுயின் அதனை நேரில் அறிவேன்" என்று கூறி, அம் முனிவரை அயோத்தி செல்லும்படி திருப்பி அனுப்பினன். அன்றியும், இற்றைக்கு ஏழாம் நாளில் சந்திரமதிக்கு சுயம்வர விழாவைத் தான் சிறக்க நடத்தப்போவதாகவும் எல்லாநாட் டரசர்க்கும் தூதுவரை விடுத்தான். முதலிற்சென்ற முனிவர் கள் அரிச்சந்திரனுக்கு மதிதயன் கூறியவற்றைத் தெரிவித் தனர். அவனும் அகமகிழ்ந்து தன் பரிவாரங்களுடன் கன் னேசிநாட்டுத் தலைநகரைநோக்கிப் புறப்படலானுன். இவ்வாறு அரிச்சந்திரன் பலநாடுகளையுங் கடந்து வருங்கால், பெரிய பாலைவனம் ஒன்று இடைப்பட்டது அதனுள் அவன் புகுந்த போது, பூதகணங்கள் சூழ்ந்த துர்க்காதேவியின் திருக்கோயில் ஒன்று அங்கே தோன்றி விளங்கியது. அது கண்டதும் தன் படை பரிவாரங்களை வெளியே நிறுத்திவிட்டு, அத்தேவியை வழிபடவேண்டி அரசன் தன்குலகுருவான வசிட்டர் முதலிய சிலருடன் அவ்வாலயத்துட் புகுந்து முன்வாயிலை அடைந்தான். அடைந்ததும் அங்கே கற்குதிரைகள் பூட்டியதும், கல்வில்லும் கல்லம்பும் உடையதுமாகக் கற்றேர் ஒன்று முன்னே நிற்பதை அரிச்சந்திரன் கண்டனன். அவன் பார்வை அவற்றில் விழுந்த

சிவனருளால் சாபம்நீங்கித் திவ்வியரூப மவைகூடின்
அவனருளால் அவன்றனக்கே அருள்கநீயே வரனென்று *

பின்னும் யாது சொன்னாள் கற்பகாளி

1 ஆர்க்குங் கழலாய்[நீ] அவ்வரைக ளப்படியே
பார்க்கவிவை சாபம் பறிந்தவால்—போர்க்குத்
தெருளாத தேருஞ் சிலைகளைக ளாமென்
றருளா லளித்தா ளவள். (க)

என்பது

[உரைப்பாட்டு]

சிலைபோலும் நெடுஞ்சிலையும் தேரும்திவ் யாஸ்திரமும்
நிலவேந்தே! உன்னைக்கண்டபின் நெடுஞ்சாபம் நீங்கிற்றுதலின்

---

அளவிலே, அக்கற்றேர் முதலியன பொற்றேர் முதலியனவாக மாறிவிட்டன. இவ்வாறான செயலைக்கண்டதும் அரிச்சந்திரன் பெரிதும் அதிசயித்து நின்றபோது, ஆங்குக் கோயில்கொண்டுள்ள துர்க்காதேவி அரசன்முன் பிரசன்னமாயினள். அதனால் அரசன் பரவசமுற்றவனாய்த் தேவியின் திருவடிகளில் வீழ்ந்து துதித்து, திருக்கோயின் முன்னின்ற பொற்றேரும் பிறவும் கற்றேர் முதலியனவாக மாறியதன் காரணம் யாதோ என்று அத்தேவியை உசாவலாயினன்— என்பதே.

---

* இவ்வரலாறுபற்றி அரிச்சந்திரபுராணத்திற்கண்ட செய்யுள்களாவன:—

"உவராழி மன்னரைசை ஒழித்தகலும் அடல்வருணன் உலகில் யாரும்
கவராது பொற்றேரைக் கற்றேரா கச்சபித்துக் கண்முன் காட்டி
எவரானும் இதுநோக்கின் இவ்வுருப்போய்ப் பண்டையுரு எய்து மாகில்
அவரவர் இதற்குரியோர் அவர்தமக்கே கொடுப்பதெனை அளித்துப் போனான்

மன்னாகேள் என்னுடைய மணிவாயில் தனில்வருணன் வைத்துப் போன
அந்நாள்தொட் டிந்நெடுநா ளளவாகக் கல்லாய்நின் அருட்கண் நோக்கப்
பொன்னான செழுந்தேர்நீ கொடுபோவென் றுவந்தளிக்கப் புகழ்ந்த யோத்தி
நன்னாடன் தான்வாங்கி நவமணித்தே ரதிலேறி நடத்தி னானே.

(விவாககாண்டம் 20, 21.)

அருணவண்ணன்* வரப்படியே அள்கையுனக் காகுமென்று
பெருநட்டுஞ்செய் பெண்கொடுப்பப் பெற்றுநின்ற அரிச்சந்திரன்

மற்று யாது [செய்]தானோவெனில்

2 நீலியை யங்கே விடைகொண்டு நீர்நுகரும்
காலியை மூசும் களிவண்டு—சாலவே
தென்னேசி† பாடிச் சிறக்குஞ் செழுந்தடஞ்சேர்
கன்னேசி நாடணைந்தான் கண்டு (உ)

என்பது

[உரைப்பாட்டு]

கற்பகாளியை விடைகொண்டு அவளருளாற் கொடுக்கப்பட்ட
அற்புதமா தேரேறி ஆயுதங்களும் உடன்கொண்டு
தென்னேசி வண்டிரங்கச் செழுந்தடத்தில் மேதிபாயுங்
கன்னேசித் திருநாட்டைக் கண்டு பிரியப்பட்டான் எ–று.

3 நாடு முதலாக நண்ணார் மருமத்திற்
பீடுபல தங்கள் பெயரா[ரும்]—ஓடை§
வருக்கத்து நன்னுடன் [வந்தான் பளிங்கின்]
உருக்குத்து¶ மண்டபத்தே யுற்று. (ங)

என்பது

[உரைப்பாட்டு]

தருமநெறியான்$ சந்திரதயன் தன்னுட் [...முதல்]
வருகின்ற வழிகளெல்லாம் வகுத்தபாடி வீடுதங்கிப்

---

* அருணவண்ணன்—சிவபிரான்.

† தென்னேசி—ஒருபண்; தன்யாசி என்பதன் திரிபுபோலும்.

§ ஓடைவருக்கம்—நெற்றிப்பட்டம் அணிந்த களிற்றினம்.

¶ உருக்குத்துதல்—வடிவங்கள் வகுத்தல்; "கையாற் புனைதல்வல்ல உருக்குத்துகின்றவனுலே அழகுபெறப் பண்ணின" என்பர் நச்சினார்க்கினியர் (நெடுநல்வாடை, 57, உரை).

$ சந்திரதயன், மதிதயன் என்பன கன்னேசியரசன் பெயர்கள்.

பளிங்கினாலே உருக்குத்து பணியுடைய மண்டபத்தின்
விளங்க வேயுட்ப[ா]யன்* மேவினான் அரிச்சந்திரன் எ—று.

இப்பால் மதிதயன் யாதுசெய்தானோ வெனில்

4 மாநகரிக் கோட்டை... வண்டார் அரசருடன்
கோநகரி விட்டுக் கொடியோங்கி—வானக்
கதிர்கொள்ளும் வேலானைக் காட்சியால் மிக்கோன்
எதிர்கொள்ளப் போனான் இறை. (௪)

என்பது

[உரைப்பாட்டு]

நகரெல்லாஞ் சிங்காரித்து நாற்றிசையும் அலங்கரித்து
இகலிலைவேற் கொற்றவரும் இராச[சேனையும்] புடைசூழக்
கன்னபுரி மிகக்கடந்து கடிமலர்க்காப் பலகழிந்து
நன்னெறிய...து...மண்டபநாடி நடந்தான் எ—று.

5 பொருகடல்கள் [தம்]மில் பொருந்துவன போல
இருவர் பெருஞ்சேனை எய்த—இருவரும்
செங்கதிரோர் தாமிருந்தார் என்னச் சிறந்திருந்தார்
அங்கவா[க்] கூட அவர். (௫)

என்பது

[உரைப்பாட்டு]

தென்கடலும் வடகடலும் சேரவந்து சிறந்ததுபோல்
மின்பயிலும் படையிரண்டும் மிகஇனிமையின் வந்துகூட
ஆதித்தியர் இருவர் என்ன அல்லவென்ன ஆமென்னப்
பேதிக்க மாட்டார்கள் பிறைசை......யத?
வருகின்ற அரிச்சந்திரனும் மற்றவரை எதிர்கொண்டு
பொருகதிர[வரிரு]வரும் பொருந்தினர்கள் எ—று.

---

* வேயுட்பாயல்—மாளிகையில் அமைந்த படுக்கை. வேயுள்—மாளிகை.

6 திசையெல்லாம் வாள்வீரர் சேனை கழிய
மிசையெல்லாம் பொற்றுவசம் மே[வி]—அசையவே
அந்நகரி வேந்தும் அரிச்சந் திரவேந்தும்
பொன்னகரி யுட்புகுந்நார் போய். (சு)

என்பது

[உரைப்பாட்டு]

திக்கனைத்தும் படைமறைப்பத்
[திகாந்] தமெலாம் துகில்மறைப்பக்
கைக்களிறும் நெடுந்தேரும்
கனகமாவும் இடை [மிடைய]
இரண்டுசேனையும் கூடியதால்
இந்திரலோகமும் வியப்பெய்தத்
திரண்டதிறல் வயவேந்தர்
[சிறு] முறுவல் முகத்தரும்ப
இருந்த நகரிசெனம் [யாவரும்]
பிரியப்பட்டு இருந்தார்கள் எ—று.

7 ஆடாத நெண்டேர் அரிச்சந் திரவேந்தன்
வீடாம் பெருங்கோயில் மேவினன்—தோடவிழும்
பூக்கோதை மார்பன் புகழும் மதிதயனும்
மாக்கோயில் புக்கான் மகிழ்ந்து. (எ)

என்பது

[உரைப்பாட்டு]

வயிரத்தைக் கொடுங்கைகோத்து
மாணிக்கத்தை ஆணிகுத்திப்
பயில்முத்தைக் கைநாற்றி
பச்சையினற் பலகை கோத்துக்
கோமேதகத்தார் போதிகையிற்
குளிர்ந்தநீலத் தூண்பதித்துப்
பூமேவிய புருடராகம்
புகளங்கும் நிலைநிறுத்திப்

*பவளத்தாற் சுவர்.........*
*பளிங்கத்தால் நிலஞ்செறித்துச்*
*சுடர்மிகுந்த [மரதக]த்தாற்*
*றுலாமெங்கும் துலங்கவைத்துப்*
*பொங்குசுடர்க் கணத்தர...*
*பொலிந்தஉத்தர மிடைபோக்கிச்*
*சங்கரைத்து மேல்வழித்துச்*
*[தளம்படு]த்ததோர் பாடிவீட்டில்*
*அரசர்தொழும் பதயுகளத்*
*தரிச்சந்திரனைப் புகவிடுத்து*
*வரைசெய்[பெருங்] கோயில்புக்கான்*
*மதிதயன் என்றவாறு.*

*இப்பால் சந்திரமதி நிலைமை யாதாயிற்றோவெனில்.*

**8 மாமயிலின் றோழி வசந்த மதியென்பாள்**
**தாம முடியான் றனைக்கண்டு—கோமகன்றன்**
**நன்னிலைமை யெல்லாம் நளிர்பூங் குழலாளுக்**
**கந்நிலையே சொன்னா ளவள். (அ)**

**என்பது**

[உரைப்பாட்டு]

*மதர்விழியாள் உயிர்த்தோழி வசந்தமதி என்கின்றாள்*
*கதமலியும் களிற்றானைக் கண்டுநின்று கடந்துபோந்தவள்*
*வண்ணவளை [வ]ரிநெடுங்கண் மாதுறையுங் கோயில்புக்குத்*
*தண்ணளியான் திறமெல்லாம் தனியுரைத்தாள் தடங்குழலி;*
*அஃது எவ்வண்ணமோவெனில்*

**9 சீர்பயிலுங் கண்கண்டார் சிந்தை தனைக்காணார்**
**மார்பகலங் கண்டார் மனங்காணார்—பேரிசையின்**
**பண்பறித்த தாரான் பணைத்தோ ளிணைகண்டார்**
**கண்பறிக்க மாட்டார்கள் காண், (கூ)**

*அன்றியும்*

10 நாவிருக்கு மின்பமாம் நல்ல மொழிகள்செவி
மேவிருக்குங் கற்ருேர் மிகுதமிழ்காண்—காவலான்
கண்ணிருக்கும் நல்லவருள் கையிருக்கும் அஞ்சுதருப்
பண்ணிருக்கும் நன்மொழிக்கே பார். (கம)

அன்றியும்

11 வேலவனும் வெ[ற்படுத்து] வேளும் உருவிலியாய்
மாலவனும் ஓடி வனம்புகுந்து—[வே]லையும்போய்
அவ்வாறு பட்ட தரிச்சந் திரன்வடிவை
ஒவ்வாம லன்ருே உரை. (கக)

அன்றியும்

12 அந்த வழகும் அ[ரு]ம்பிரச [மாமொழியும்]
சிந்தைகுடி கொள்ளும் திருநகையும்—பைந்தேன்
பருத்திருக்கும் [தோள்களும்] பற்ருருங் கண்டால்
தரித்திருக்க வல்லவரார் தாம். (கஉ)

அன்றியும்

13 [ம]ருவா[ர்] இளமையால் மல்லாரும் [தோளால்]
திருவால் திறம்பாத் திறத்தால்—கருதுங்கால்
ஆனே றனைய அரிச்சந் திரபூபன்
தானே தனக்கொப்பான் தான். (கங)

அன்றியும்

மற்றும் யாதுசொன்ஞள் வசந்தமதி

நாளை யறியலாங் கண்டாய் நலஞ்சிறந்த
காளைதிரு மங்கலநாண் கண்டக்கால்—கேளாது
பண்ணிசைத்து வண்டிருக்கும் பைங்குழலாய் உன்னுடைய
புண்ணியத்தி லுள்ள பொருள். (கச)

என்று

*இவ்வண்ணமே வசந்தமதி சொல்லக்கேட்ட*
*சந்திரமதி நிலைமை யாதாயிற்றென்றெவெனில்*

15 குளித்தாள் பசலையெலாம் கொங்கையின்மேற் றண்ணீர்
தெளித்தாள் இருந்தாள் திகைத்தாள் —ஒளிக்கத்
தடமுண்டோ ஐங்கணையோ[ன்] தாக்கா திருக்கும்
இடமுண்டோ என்றாள் எடுத்து. (கரு)

16 வீசும் பனிநீரும் மேனிபடில் வெந்நீராம்
பூசும் களபம் பொரியாகும்—வாச
முருகார் அணையும் முகிழ்நகைதான் [சேரிற்]
சருகாகும் என்செய்வாள் தான். (கசு)

*அன்றியும்*

17 மன்றலணை என்னில் மதனன் கொடுஞ்சாமே
தென்ற லெனிலவன்றன் திண்டேரே—நின்று
கருக்கு மதியுமவன் காழ்[ப்]படா* மாறல்
இருக்குமிடம் எங்கே இனி. (கஎ)

*அன்றியும்*

18 ஊழிவாய் கூடி ஒருகங்கு லானதோ
கோழிவாய் மண்கூறு கொண்டதோ—ஆழி
மடங்காதோ வெண்கதிர்க்கும் வாரிவாய் கெட்டேன்
அடங்காதோ என்னும் அவள். (கஅ)

*அன்றியும்*

---

* *காழ்ப்படாம்— காம்பைக் கொண்ட மேற்கட்டுச் சீலை: என்றது குடை; 'காமபடாம்' என்று சுவடியில் காணப்படுகிறது.*

19 நீளுங் கயல்விழியும் நித்திலஞ்சேர் கொங்கைகளும்
தோளும் இடந்துடிக்கும் தோற்றத்தால்—வாழி
இழைத்திருந்த மாரவேள் எய்கையெலாம் இன்று
பிழைத்திருந்தாள் செங்கமலப் பெண் (௧௯)

*அன்றியும்*

20 பங்கில் ஒருத்தி படர்சடையின் மேலொருத்தி
தங்குமவ னுன்னைவீண் தள்ளான்காண்—[மங்கல]நாண்
காட்டும் அரசனுக்கே என்றுவி† கட்டுரைப்பக்
கேட்டு மகிழ்ந்தாள் கிளி (௨௰)

*இவ்வண்ணமே*

[உரைப்பாட்டு]

*விரைகுழல் தானிருந்தவள் விரகாதி சயமெய்த*
*அரசர்பிரான் அங்கிருந்தவன் [அநே]கசிந்தா குலஞ்கை*
*நடக்கின்ற பேரியாமம் நன்னுதலாள் பொருட்டினுலே*
*சடக்கெனவே போனதன்மை எங்ஙனம் சார்ந்ததோவெனில்*

21 [நிகரி லவர்கள்] இருவரையும் நே[ரே]
[அ]கலவி[ட] லாகாதென் றஞ்சி—மிகவும்
அறிந்ததே போல அகன்மதியைக் கொண்டு
பிறிந்ததே தங்குலாம் பெண். (௨௧)

என்பது

---

* *ஆவி—அசரீரி; சந்திரமதியின் கழுத்தில் மங்கலநாண் இருந்தமை கண்டு மயங்கின்ற அரிச்சந்திரனுக்கு 'இவள் கன்னிகையே; தெய்வத்தின் அருளால் மாங்கலியத்தோடு பிறந்தனள்' என்று அசரீரி கூறியதாக, வடமொழி ஸ்காந்தபுராணப் பகுதியான அரிச்சந்திர உபாக்கியானம் கூறும். வழிநூலான தமிழ் அரிச்சந்திர புராணத்தில் இச்செய்தி காணப்படவில்லை.*

[உரைப்பாட்டு]

ஒண்டொடியாள் தன் துயரமும்
ஒலிகழலான் [உறு]ந்துயரமும்
கண்டுதங்க மாட்டாரபோலக்
கங்குல்யாமம் போனபின்பு
யாது செய்தான் மதிதயன்

22 கோத்த இரத்னக் கொடுங்கைப் பலகையோர்
வாய்த்த [சுயம்வர] மண்டபத்தே—ஏத்த
இலங்காரந் தூக்கி இமகரனைப் போல
அலங்காரஞ் செய்தார் அவர். (உஉ)

என்பது

[உரைப்பாட்டு]

சித்திரத்திலும் எழுதவொண்ணாத்
தெள்ளமுதை வதுவைசெய்ய
வத்திரத்தாற் புடைகட்டி
வகுத்த [சுயம்வர] மண்டபத்தைக்
கன்னபுரிச் சித்திர[கார]ரும்
கைவித்தாரிகளும் பலர்கூடி
வன்னிக்க வொண்ணாதபடி
மகாஅலங்கிருதமாக அலங்கரித்துப்
பாவாடையும் மேலாடையும்
பக்கவாடையும் கொடியாடையும்
தேவாங்கும் மகரவாளியும்
வயிரவல்லியும் திருக்குமாக்கிப்
பொழுதறிந்து மாலை தூக்கிப்
பூங்கொடியார் பலர்கூடி
எழுதவொண்ணா வடிவினளை
எவ்வண்ணம் அலங்கரித்தாரோவெனில்

23 கற்புடைய மாமயிற்குக் கண்ணேறு வாராமல்
பொற்புடைமை யெல்லாம் புதைப்பார்போல்—பொற்
[கலன்கள்
அந்நிலைகண் டந்நிலைகட் கான படியணிந்தார்
மின்னிலைவேற் கண்ணார் மிக. (உ௩)

என்பது

[உரைப்பாட்டு]

*பாதாதி கேசமெலாம் பருத்தமுத்தின் பணியாலே*
*பேதாதி பேதமாகப் பேசுதற்கும் அரிதாகக்*
*கண்ணேறு கூடாமல் காரிகையை மறைப்பார்போல்*
*வண்ணமெலாந் தாம்புதைத்து மகிழ்ந்திருந்தார் கைத்தாயர்*

*அக்காலத்து யாதுசெய்தான் அரிச்சந்திரன்*

24 பூணிக்கச்* சேடன் பொருமற் றிறைகொடுத்த
மாணிக்கப் பூணின் வகையணிந்து—காணில்
இலங்குங் கதிரோன் இவனெனவே சேர்ந்தான்
வலங்கொள்மணி மண்டபத்தே வந்து. (உ௪)

என்பது

[உரைப்பாட்டு]

................................
*கதிரோன் இவனெனவே*
*புலிகிழித்துப் புடைபுகுந்து*
*பொலன்கொள்சேடன் மணிபறித்து*
*ரவிமறைக்கும் புதியமாணிக்க*
*ரத்தினப் பணியை எடுத்தணிந்து*
*சிந்தையினாற் பாரிகந்த*
*தினகரனே இவனென்ன*

---

* *பூணித்தல்—பிரதிஞ்ஞை செய்தல்.*

வந்து[மணி] மண்டபத்தே
வாழ்வுபெற்றான் என்றவாறு.

அவ்விடத்துச் சந்திரமதி யாதுசெய்தாளோ வெனில்

25 சந்தாப நுண்மருங்குல் தாங்கித் தமர்சூழ
வந்தாள் மணியணிசேர் மண்டபத்தே—வந்து
மறைநின்று தன்கழுத்தை வைத்தாள் படிமேல்
இறைநின்று பார்த்தான் எதிர். (உரு)

என்பது

உரைப்பாட்டு]

பாதார விந்தத்தே
பரிபுரங்கள் இடந்தரற்றச்
சூதாகும் இடையெண்று
தோழிமார் அருகுவரப்
பல்லியங்கள் புறம்பரற்றப்
பனிமொழியார்க் கருள்கொடுப்ப
வல்லி[யும்] சுயம்வர
மண்டபத்தே வந்தேறி
மணியுரைத்து மயன் இட்ட
............... ...............
சித்திரமா[கிய] மண்டபத்துத்
திருக்கழுத்துத் தோன்றநிற்றலும்
உத்தமரிற் பிரதானனை
வேந்தனும் உற்றுநோக்கி

யாதுகண்டானோ வெனில்

26 உரைத்த நவமணிகள் ஒன்பதையும் சேர
நிரைத்தயன் கையால் நிறைக்க—வரத்தினாற்
சங்கரனார் தந்த தருணி யுடன்பிறந்த
மங்கலநாண் கண்டானம் மன். (உசு)

என்பது

[உரைப்பாட்டு]

பதினாலு லோகத்தையும் பலமணியையும் சருவத்தையும் விதமாக நிமிஷத்தில் நினைத்துவிட்ட வேதமூர்த்தி ஆகிய பிரமாதன் அத்தத்தினாற் பிடித்தருளிப் பேதித்து நவரத்னத்தாற் பிரயாசப்பட்டுப் பணியாக்கிச் சருவசனமும்*காண[வில்லாது] தன்[புருஷனே]காண்பதென்று பருவதநாதன் தலைநாளில் பணிக்கப்பட் [டு]தயமாகிய பெருங்கற்பாள் சந்திரமதியுடன் பிறந்த அற்புதமான திருமங்கல்யத்தை அரிச்சந்திரன் கண்டருளலும்

சந்திரமதி யாதுகண்டாளோ வெனில்

27 வரபதிதான் கண்டன்று மண்டலத்தோர் காணாத்
தரமுடைய மங்கலநாண் தன்னைப் — புரிகுழலாள்
காட்டும் படிமக் கலந்தனிலே கண்டறிந்தாள்†
வாட்டுஞ் செழுங்கூந்தல் மான். (உஎ)

என்பது

மங்கலநாண் கண்ட இருவர்நிலைமையும்

எத்தன்மையா யிருந்ததோ வெனில்

---

* 'காணவில்லைத் தன்னுருஷியே' என்று சுவடியில் உள்ளது, காணவில்லாது தன்புருஷனே' என்றிருந்தது மாறியதோ என்று கருத இடமுண்டு.

மஞ்சனச் சடையினன் வரத்தின் வந்தநாள்
கஞ்சன நீழலிற் காண்ப தன்றியே
அஞ்சனக் கண்ணிக்கும் அங்கைக் கெய்திடா
தெஞ்சலில் யாவரும் யானுங் கண்டிலேம். (விவாக. 243)

என்று சந்திரமதிதந்தையின் கூற்றாக அரிச்சந்திரபுராணங் கூறுவது இங்கு ஒப்பிடத்தக்கது. படிமக்கலம், கஞ்சனம் என்பவை, முகக்கண்ணாடி என்னும் பொருளன.

28 முத்தணிந்து நின்ற முகிழ்நகையும் மாணிக்கக்
கொத்தணிந்து நின்ற குலபதியும்—சுத்த
மதியும் கடலெழுந்த வான்கதிரும் போன்றார்
பதியும் ப[ரி]யும் படி (உ அ)

என்பது

[உரைப்பாட்டு]

*சந்திராதித்தியர் இருவரும்*
*தலத்திழிந்த தோற்றம்போல*
*[இந்த]நிலம் எதிரிருப்ப*
*இருவரும் நின்ற அப்பொழுது*

*இருந்த நகரிசனம் எவ்வண்ணம் பிரியமெய்தினரோவெனில்*

29 பூங்கொடிக்குத் தக்கவனே போர்வேந்தும் பொற்பினால்
ஆங்கவற்குத் தக்கவளே யாமிவளும்—நீங்கா
திருவரையும் நோக்கில் இறைமையே நோக்கும்
அரு[வு]ருவ ராமாகில் ஆம், (உ கூ)

என்பது

*இவ்வண்ணம்இருந்த நகரிசனம் பிரியப்பட்டு*
*யாதுசெய்தாரோ வெனில்*

30 நெல்லும் பொரியும் நிறையும் நறுநெய்யும்
புல்லும் சமித்தும் பொலிவெய்த—மல்லலணி
பூமறையோர் தாமென்னப் பொங்குமணி மண்டபத்தே
மாமறையோர் வந்தார் மகிழ்ந்து. (ங ய)

என்பது

[உரைப்பாட்டு]

*விரத சு[மிதை]களும் முன்கொணர்ந்து*
*விப்பிரசனம் மிகக்கூடி*
*விவாகயஞ்ஞும் [எங்ஙனம்] செய்தாரோவெனில்*

31 மாதும் அரசும் வலமுமிட முஞ்சிறப்ப
வேதநெறி யெல்லாம் மிகச்செய்து—போதில்
*அருந்துதியுங் காட்டி அருமறைநூல் தன்னல்
இருந்துதியு மிட்டார் எடுத்து, (௩௧)

என்பது

[உரைப்பாட்டு]

*பிரமசமயம் மிகத்திரண்டு*
*வேதபுருஷன் சொன்னபடியே*
*கருமமான தொழிலெல்லாம்*
*கடவாத படியாக*
*அக்கினிதேவனை மிகவளர்த்து*
*ஆகுதிகள் பலகொடுத்துப்*
*பத்தினியுடன் பர்த்தாவுக்குப்*
*பாணிக்கிரணஞ் செய்துகொடுத்துச்*
*[சத்த]தானம் மிகநடத்தித்*
*தாரகையை மிகக்காட்டி*
*உத்தமமான மந்திரத்தை*
*ஒளிபெறவே கொடுத்தார்*
*மகாசனங்க ளென்றவாறு.*

32 சாத்திரத்தி லுள்ள தொழில்சமைத்துத் தானமெலாம்
ஏத்தும் மறையோர்க் கினிதளித்துக்—கோத்தமணி
ஏந்திழையுந் தானும் இருங்கோயி லுட்புகுந்தார்
பூந்திருவுங் கோமாலும்† போன்று. (௩௨)

என்பது

---

* ‘அருந்ததி காணுமளவும்’ என்றார் வாதவூரடிகளும்
(திருக்கோவை, 300.)

† ‘கோமானும்’ என்றும் பாடம் படிக்கவேரும்.

[உரைப்பாட்டு]

*திறமுடைய சாத்திர[வித]ஞ்*
*சிக்கெனவே செய்தபின்பு*
*மறையவர்கள் தணியும்வண்ணம்*
*மகாதானம் பலகொடுத்து*
*எண்ணரிய பிராமணரை*
*எழுந்தருளு மெனவிடுத்துப்*
*புண்யமூர்த்தி விட்டுணுவும்*
*இலக்குமியும் போற்பொலிந்து*
*அரிச்சந்திரனும் சந்திரமதியும்*
*அநேகம்பிராணி புடைசூழத்*
*தரித்ததங்கள் பாடிவீடு*
*தனிற்புகுந்தார் என்று.*

33 கோயில் புகுந்து குலவு நவரத்ன
வாயில் அமைத்த மணியறையில்—நேயம்
கரையழிய இன்பக் கடல்வீழ்ந்தார் வீழ்ந்தார்
விரைகமழ்ந்த மெல்லமளி மேல்.

*அன்றியும்*

34 கங்குற் குழல்சரியக் காலிற் சிலம்பரற்றக்
கொங்கைக் குவடு குவிந்தசையத்—திங்கள்
அரும்பு வியர்முத் தணிமார்பிற் பூணத்
திருந்தும் பயன்விளைத்தாள் தேன். (௩௪)

*அன்றியும்*

35 ஒருவர் உடலில் ஒருவர் ஒடுங்கி
இருவ ரெனுந்தோற்றம் இன்றிப்—பொருவரிய
கோவும் மடமானும் கூடியுறப் புல்லினர்
பூவுமண மும்போற் பொலிந்து. (௩௫)



*அன்றியும்*

36 எத்தரிய ஆசை இருகொழுந்தும் மேற்படர
வார்த்தை பெருகி வரம்பழியப்—பூத்தொளிரும்
பொன்பட்ட தோளானும் பூங்கொடியும் பூவணையும்
என்பட்ட தென்றறியேன் யான். (௩௬)

37 இரவு பகலறியார் இன்பம் பெருக
ஒருவரை விட்டொருவர் உய்யார்—விரவு
கருந்தாரை வேலானுங் காரிகையும் ஆங்கே
இருந்தார் மிகவா றிரா. (௩௭)

என்பது

[உரைப்பாட்டு]

அன்புமிகப் பாராட்ட அநுராகம் கொழுந்துவிட
இன்பமிகு பயிராக இனியகாமந் தனைவிளைத்து
மதிதயன் தலைமையெய்த மங்கையர்கள் கண்களிப்பப்
பதியுள்ளார் பிரியமெய்தப் பரிவார[முட்னே]யவ்
ஆறிராத்திரி கன்னபுரி [யழகு]பெற அமர்ந்திருந்து
பேறுடையான் தன் இராச்சியத்து[க்கு]ப்
பெரும்பயணம் செய்தான் எ—று.

38 மாநகரி வேந்தும் மடவாரும் மன்னவரும்
கோனகரி யுந்தொடர்ந்து கூடிவரப்—போனவரை
நில்லுமெனச் சொல்லி நெடுங்குழலும் தானுமவண்
எல்லைவிட்டுப் போனான் இறை. (௩௮)

என்பது

[உரைப்பாட்டு]

வருந்திமிகு மதிதயனும்
மங்கைமாரும் மகாசேனையும்
பெரு[ம்]பதியி லுள்ளாரும்
பிரியமாட்டாது பின்தொடர

ஆங்கவரைத் தாளிறுத்தி
அநேகஉப சாரம்சொல்லிப்
பூங்கொடியை மெலக்கொண்டு
புதுமணித்தேர் மிசையேறிக்
காடுநாடு பலகடந்து
காட்சியாக அவர்அமைத்த
பாடிவீடு பலகடந்து
பருவதங்கள் பலநீங்கி
.... ....
.... ....

39 .... .... .... ....
.... .... .... ....
**மன்னனுக்குக் காட்டி வயவேந்தே இங்கிதுதான்**
**என்னடுக்கு மென்றுள் எடுத்து.** **(௩௯)**

**என்பது**

[உரைப்பாட்டு]

வரும்வழியில் புதுமைகளை
மடமானுக்கு மன்னன் காட்டியும்
திருமடந்தை வேந்தனுக்குத
திறம்படவே சிலகாட்டியும்
போதெல்லாம் மிகக்க[ளி]த்துப்
புனல்ஆடியும் சூதாடியும்
மாதினுடன் வந்துசேர்ந்தான்
மகாராசன் எ —று.

40 **போதாடு சோலைப் புனலாடி யுந்தம்மிற்**
**சூதாடி யும்போழ்து தோன்றுமற்—கோதை**
**மணநாம் குழலாளும் மன்னவனும் கூடி**
**அணைந்தார் அயோத்தி அருகு.** **(௪0)**

41 **மல்லல் வளநாடு பார்த்து வழிவந்த**
**மெல்லியலும் சேனைசூழும் வேல்வேந்தும்—அல்லிமலர்**
**தன்வாசம் வீசும் தட[ஞ்சூழ்] அயோத்திநகர்த்**
**தென்வாசல் விட்டணைந்தார் சென்று.** **(௪௧)**

**என்பது**

[உரைப்பாட்டு]

*அடல்வேலான் அரிச்சந்திரனும்*
*அருங்கற்பாள் சந்திரமதியும்*
*திடமதில் அயோத்திநகர்*
*சேர்ந்திருப்ப மகாநகரியை*

*எவ்வண்ணம் அலங்கரித்தாரோவெனில்*

42 **தோரண மெங்கும் நிரைத்துச் சுடர்மணித்தார்**
**பூரண கும்பம் பொலிவித்துச்—சீரணியும்**
**பூமாலை நாற்றிப் பொலியக் கொடிநிரைத்தார்**
**மாமாட வீதி மறுகு.** **(௪௨)**

**என்பது**

[உரைப்பாட்டு]

*தோரணங்கள் மிகநாட்டித்*
*துலங்குகொடி மிக எடுத்துப்*
*பூரணகும்பங்கள் பலசமைத்து....*
*தையலார் நின்றாட*
*வகைவகையே துறைதுறையில்*
*மணித்த[ா]ர்தம்மை யடைவுசேர்த்துப்*
*புக[ல்] கமுகும் கன்னிவாழையும்*
*பூங்கரும்பும் [கை]செய்து*
*நவரத்தினப் பிரபைவிளக்கி*
*நாறும்நறு நீர்தெளித்துத்*

*தமனியத்தைத் தா[ள்]சேர்த்துச்*
*சங்கமெங்கும் முழக்கெடு[ப்ப]த்*
*தோற்கருவி துளைக்கருவி*
*கஞ்சக்கருவி எனச்சொல்லும்*
*வாச்சியங்கள் பலமுழங்க*
*மகாஉற்சாகம் தலைக்கொள்ள*
*அமராபதி இதுவென்ன*
*அயோத்தியாபுரி விளங்கிற்று எ—று.*

**43 மாப்பதியி லுண்டான மந்திரமுந் தந்திரமும்**
**கோப்புடைய வாசலெதிர் கொண்டுசெலக்—காப்புடைய**
**வாயில் கடந்து மடமானும் மன்னவனும்**
**கோயில் புகுந்தார் குறித்து. (சங)**

**என்பது**

[உரைப்பாட்டு]

*சருவசேனையும் புடைசூழத் தம்பதியர் பிரியமெய்தக்*
*கெருவமுடன் மகாராசனும் கிளிமொழியும் மகிழ்வெய்தத்*
*தம்முடைய கோயில்புக்கார் எ—று.*

**44 பொற்புடைய கோயில் புகுந்து பொலிவாகச்**
**சொற்புடைய தானத் தொழில்புரிந்து—கற்பம்**
**மருவிளங்கு தாரானும் வாணுதலும் வாழ்ந்தார்**
**திருவிளங்க இன்பஞ் சிறந்து. (சச)**

**என்பது**

[உரைப்பாட்டு]

*மிகலரிய கோயில்புக்கு*
*வேண்டுந்தானத் தொழில்முடித்துச்*
*சகலசுகமும் அனுபவித்துச்*
*சகிருதயராய் நடந்தகாலத்துச்*
*சந்திரமதி வயிறுவாய்த்தாள்*
*அது எவ்வகையோவெனில்*

45 கொங்கை [முகம்]கருகக் கோல நிறம்வெளுப்பத்
தங்குமிடை ஈதென்று தானறிய—அங்கே
உருவுயர உந்தி உரோமநெறி காட்டத்
திருவயிறு வாய்த்தாளத் தேன். (சரு)

என்பது

[உரைப்பாட்டு]

*மன்களபக் கொங்கை*
*முகங்கறுத்து மடைவிரியப்*
*பொன்புனையுந் திருமேனி*
*நிறம்வெளுத்துப் பொலிவெய்தக்*
*காணவொண்ணு இடைகாணக்*
*கடைஅல்குல் மிகப்பெருகப்*
*பூணரிய திருவயிறு*
*உரோமத்தாற் பொலிவெய்த*
*மருவிரியும் தடங்குழலாள்*
*வயாநோய் மயக்குற்றுத்*
*திருவயிறு வாய்த்தாள்*
*ஒரு சிரீகுமாரனை எ—று.*

46 தடந்தாளால் ஒன்னார் தவழத் தவழ்ந்தான்
நடந்தான்தன் ஆணை நடக்க—அடைந்தார்
நிலையேற ஏறினான் நீள்மா இரண்டும்
மலையேறுந் தோளான் மகன் (சசா)

என்பது

[உரைப்பாட்டு]

*மன்னவர்கள் கருமம்விட*
*வயிற்றில்வந்து கருவித்[தாய்]*
*அன்னவர்கள் [நி]லமிழக்க*
*அணிநிலத்தே [த]ான்பிறந்து*

*மற்றவர்கள் தவபூம்வண்ணம்*
*மண்ணிடையே தான்தவழ்ந்து*
*பொற்புடைய தன்ஆணை*
*புவிநடக்கத் தான்நடந்து*
*பேணலர்கள் முன்போட*
*.... ஓடக்கற்றுக்*
*காணுமவர் [களிப்பெய்தக்]*
*கரிதுரகம் ஏறக்கற்று*
*ஒன்னார்தம் புரம்பிடிக்க*
*ஒளிர்வாள்[தன்] கைப்பிடித்துத்*
*தன்னுடைய கீர்த்திவளரத்*
*தான்வளர்ந்தான் லோகிதாக்ஷன்* எ—று.*

**47 கோமகனும் ... குலக்கொடியும் தம்முடைய**
**மாமகனும் நீங்காத மந்திரியும்—நாமக்**
**கதிருருவின் வண்ணமே காசினியைக் காத்தார்**
**எதிரொருவர் இல்லார் என. (சஎ)**

**என்பது**

[உரைப்பாட்டு]

*அரிச்சந்திர ராசனும்*
*அருங்கற்பாள் சந்திரமதியும்*
*தரித்தபுகழ் லோகிதாக்ஷனும்*
*சத்திய கீர்த்தியும் உடனாக*
*அனைவர்க்கும் கருணைபொங்க*
*அனைவர்க்கும் மொழிகொடுத்து*

---

* 'லோகிதாசியன்' என்று ஸ்காந்தபுராணப் பகுதியான அரிச்சந்திர உபாக்கியானம் கூறும். தமிழ்—அரிச்சந்திரபுராணவாசிரியர் 'தேவதாசன்' என்பது பெயராகக் கூறுவர் (விவாககாண்டம், பாட்டு, 305).

ஆதித்த கிரணம்போல்
யாவர்க்கும் தாய்தந்தையாய்
இராச்சியத்தை முழுதுமாண்டு
.... ....
ஒருமனையே காப்பான்போல்
உலோகமெல்லாங் குறைதீர்த்துத்
திருவுடைமையால் நெறிகாத்துத்
திக்குவிசயந் தான்செலுத்திப்
பூதலத்தைப் பொதுநீக்கி[ப்
போந்த]ருளினால் தானெடுத்து
மாதனத்தின் அளகேசுரன்
வரும்வாரா னென்னும்படி
பூவேந்தனேயாகிப் பொலிந்திருந்தான் எ—று.

சுயம்வரகாண்டம் முற்றும்.

## இரண்டாவது

# சலம்வரு காண்டம்.

48 ஏது நிலையென் றறியாமல் எப்போதும்
ஊதைதனிற் பூளைபோல் ஓடியே—பேதைமைக்
கொண்டி வயிற்றிற் குறுகாதே நெஞ்சமே
பண்டிவயிற் றுளைப் பணி. (க)

49 மண்ணுலகை யாண்டோன் வழுவா மொழியதனால்
விண்ணுலகிற் றேவர் விளங்கவையுள்—எண்ணுமல்
ஆமுனியும் கோசிகனும் ஆனபடி மாறுரைத்தார்
தாமுனிந்து போந்தார் தலத்து. (உ)

*இப்பால், இந்திரனது தெய்வசபை எவ்வண்ண மிருந்ததோவெனில்*

50 சிந்தா மணிமுன்றிற் சேர்கல்லுச் சீருடைய
ஐந்தாரு வேயினிய ஆராமம்—முந்து
கமலமுஞ் சங்குமும் கண்ணார் நெதியாம்
[அமுதம் அமரர் அயில்வு] (ங)

*அன்றியும்*

51 பொன்னுலகே தன்னுலகாம் புத்தேளிர் [போற்றிசெய]
அந்நிலையிற் கன்னியரோ ஆடுவாராம்—மன்னும்
அயிரா வதமேதன் ஆனையாம் வேகம்
பயில்கா ரினம்[மா]ம் பரி. (ச)

*என்பது*

*தாவுகடல் தந்த சுரபி[யே] †தன்னுயம்
வாவிவரும் வச்சிரமே வான்படையாம்—தாவாத
கின்னரர் கிம்புருடர் கீதமாம் மேனகை[போன்]
மின்னனையார் கூத்தின் விகற்பு. (ரு)

[உரைப்பாட்டு]

புருடராகமே‡ அங்கணத்திற்
[புகு]த்தடுக்குங் கல்லாகவும்
தருவைந்துமே தோப்பாகவும்
சங்கபத்மநெதி[கள்] சிரீபண்டாரமாகவும்
அமுதமே அடிசிலாகவும்
அளிக்கு[லமாரா ம]துவே மதுவாகவும்
தமனியஞ்சேர் தெய்வலோகமே
தன்னுடைய படைவீடாகவும் $
தேவர்களே படையாகவும்
தெய்வத்திரீகளே போகத்திரீகளாகவும்
மேனகை அரம்பை உருவசி
திலோத்தமை என்னும்
மணம்நாறுங் குழலியரே
நடம்பயிலும் மடவாராகவும்
கின்னர கிம்புருடர்களே
கீதவாத்தியப் பிரதானராகவும்

---

* "அரசர்பதிதன்னில் அமராபதியும் தரமுடைய தெய்வத் திரீகளும் வீரியமும்" என்றகுறைத்தொடர் இவ்வெண்பாவுக்கு முன்னும், "மும் தன்னுடைமையுடைய அயிராவதத்தோன் சமையம் மிக வீற்றிருந்தான். எ—று" என்ற குறைத்தொடர் பின்னுமாகச் சுவடியில் சிதைந்து அமைந்துள்ளன.

† சுரபியே தன்னுயம்—காமதேனுவின் இனமே தன் பசுநிரை எ—று.

‡ புருடராகம்—புஷ்பராகமணி.

$ படைவீடு—இராசதானி.

நன்னிலைசேர் பிருகற்பதியே
நல்லமந்திர பதியாகவும்
பாகர்ஏருத அயிராவத[மாம்]
பகட்டரசே யானையாகவும்
மேகராசனே பரியாகவும்
விடும்இடியே படையாகவும்
வடிப்பரிய வச்சிராயுதமே
வலமாகவும் திடமாகத்
தடுப்பரிய தெய்வலோக
மானதன் படைவீட்டில்
சப்தரிஷிகள் தண்டேந்தச்*
சந்திராதித்தர் கிழ்போக
உத்தமமான தேவலோகத்து
ஒளியுடைய தேவேந்திரன்
இராசசபை இருந்தவிடத்து யாவர் இருந்தாரெனில்

53 துன்னும் படைக்கைச் சுரரும் அசுரர்களும்
கின்னார கிம்புருட கேசரரும்—மன்னும்
சரரும் அசரரும் சாரணரும் சித்த
புரரும் இருந்தார் புடை. (கூ)

என்பது

[உரைப்பாட்டு]

சுரரும் வித்தியாதரரும் கின்னரர் கிம்புருஷர்
[சித்த கௌரவ] கந்திருவரும் [திசாக்கிரரும்] [மயூரகரும்]
புடைசூழ இருந்தவிடத்து யாவர்யாவ ரிருந்தாரோவெனில்

---

* தண்டு—சிவிகைவகை.

54 சனக சனந்த சனற்குமா ரீசன்
[அனக] முனிக ளமர்ந்தார்—வினவியசீர்
காசி முனிவன் கவுசிகன் நாரதன்
வாசவன்முன் னேயிருந்தார் வந்து. (எ)

என்பது

[உரைப்பாட்டு]

*சனக சனந்த சனற்குமா ரீசன்*
*அனகமுனி சமதக்நி பிருகு நகுஷன்*
*அத்திரி வான்மீகி ஜைமினி வசிஷ்டன் விசுவா*
*மித்திரன் பரத்துவாசன் உரோமரிஷி நாரதன்*
*கௌதமன் இரணியகேசி கவுணியன் அகத்தியன் [ள்ள*
*புலத்தியன் க[ா]திமார்க் கண்டன் புதன் போதாதிபன் முதலாயு*
*மகரிஷிகளும் புடைசூழ இருந்த தேவேந்திரன்*
*வசிட்டனை நோக்கி யாதுசொன்னானென்னில்*

55 மேதினியைக் காக்கும் விடியற் குலத்தோருள்*
நீதிநிலை தப்பா நெறியுடைமை—போதக்
கொடுத்தருள்கை யுள்ளாரைக் கோமுனியே யாரென்
றெடுத்தருள்க என்றான் இறை (அ)

என்பது

[உரைப்பாட்டு]

*கன்மலோகந் தனைக்காக்கும் கதிரவர்தங் குலத்தாரில்*
*தன்மநீதியும் தயாநீதியும் சத்தியநீதியும் தப்பாமல்*
*மாசின்றியே பொதுநீக்கி மண்ணுள்வா ருண்டாமாகில்*
*இராசகுருவும் நீயேயாதலால் எடுத்துரைக்க வேணுமென்று*

---

* *விடியற்குலம்—சூரியகுலம்; விடியல் சூரியனுக்கு ஆகுபெயர்.*

*அருகிருந்த வசிட்டன்மீதில் ஆயிரங்கண் சிறந்துநோக்கி*
*விரிவுடைய தேவேந்திரன் வினவ வசிட்டன் யாதுசொன்னான்*

56 வெய்ய கதிர்க்குலத்து வேந்தர் முடிவிளங்க
வைய முழுதும் மகிழ்வெய்தப்—பொய்யை
மறந்தானும் கூறாத மாறாத கீர்த்தி
சிறந்தான் அரிச்சந் திரன். (௯)

*என்பது*

*[உரைப்பாட்டு]*

*இக்குவாகுவமிசத்து வேந்தரிற் பிறவேந்த ... ...*
*[ஆது]லர்க்குத் தாய்தந்தையாய் அற்றார்க்குப் பற்றிடமாய்*
*நான்மறையை நிலைநிறுத்தி நடக்கின்றான் அரிச்சந்திரன்*

*என்று பின்னும் யாதுசொன்னான் வசிட்டமுனி*

57 ஆதுலர்தஞ் செல்வம் அடைந்தோர் புகலிடநல்
மாதவஞ்சேர் பற்றற்றார் வாழுமிடம்—போதம்
விரித்த உலகோர்க்கு மிக்காய நற்றாய்
அரிச்சந் திரனென்பான் ஆம். (௰)

*என்று இவ்வண்ணமே வசிட்டமுனி புகழ்தலும் கேட்ட*
*விசுவாமித்திரன் யாதுசொன்னான்*

58 தன்னை முதல்வினவாத் தாபத்தால் தான்வசிட்டன்
சொன்ன மொழியழிக்கும் சூதினால்—மன்னும்
கரையழிந்த கோபமுடன் கௌசிகர்கோன் நேரே
உரையழிந்து சொன்னான் உடன்று. (௧௧)

*அன்றியும்*

59 தேவர் சபைநடுவே தேவேந் திரன்முன்னே
யாவனெவன் என்றுமல் இப்பொழுதே—ஓவாத
பொய்யுடையான் றன்னைப் பொறைநெறியிற் காவானை
மெய்யுடையான் என்பதே வீண். (௫௯)

மற்றும்

60 செல்வ முடையவனுந் தேவேந் திரன்முன்னே
சொல்வதெனின் வேண்டா எனச்சொல்லேம்—நல்ல
நிசத்திறங் கூறின் நெறியொன்று மில்லா
அசத்தியனே கண்டாய் அவன். (௬௰)

என்பது

[உரைப்பாட்டு]

தேவதேவன் றன்னைவிட்டுச் சீறிவசிட்டனை முகம்நோக்கி ......மேவி[க] லுரைக்கையாலும் மேற்பகலே முதலாக ஆமுனிவ னுரைத்தசொல்லை [அழி]ப்ப[துதன்] பாஷையாலும் மாமுனிவன் விசுவாமித்திரன் மனங்க[றுத் து]டன்றெழுந்து அசத்தியத்துக்குப் பிரதானன் அநீதிமார்க்கன் அதிலே[ாபி] [விநயசற்]குண மொன்றில்லாதவன் விரதப்பிரட்டன் விட... புத்தேளிர் சபைநடுவே புரந்தரன்றன் திருமுன்பே சத்தியவாதி என்றுரைக்கத் தகாது ஆதலால் சொல்லவேண்டின் அந்நியாயத்தால் அகன்றீட்டிய அத்தபதி அவனல்லது சந்நிதி தனக்கில்லை சத்தியவாக்கிய மவற்கில்லை என்று விசுவாமித்திரன் வெகுண்டுரைப்பக் கேட்டு

வசிட்டன் யாதுசொன்னான்

61 சிவசிவா நல்லோரைத் தீங்குரைக்கை என்றும்
கவுசிகா உன்றன் கடனே—அவனிமான்
வாதை கெடத்தரித்த தோளானை வானோர்முன்
நீதிகெடச் சொல்லுவதோ நீ (கச)

*என்று பின்னும் சொல்லும் வசிட்டன்*

62 அறநெறிநின் றோங்க அகன்றகுடி போற்ற
மறைநெறியே வல்லோர்கள் வாழ—நெறியுடனே
தப்பேதும் இல்லானைத் தாரணியின் நீ[சருக்கிங்]
கொப்போ[தல்] நேரோ உரை. (கரு)

*என்பது*

[உரைப்பாட்டு]

*மறைகிளர் நெறிநடப்ப மனுவோங்கக் குடிதழைக்க*
*அறம்வளரக் க[லி]மடிய அநீதிகுன்ற ஆக்கியாபனை செல்ல*
*சத்தியவாக்கியம் தலைநின்று தன்மநீதி நிலைநிறுத்தி*
*உத்தமரிற் பிரதானனாகி உலகடங்க ஒளிநிறுத்தி*
*அவமதியொன் றில்லாத அரிச்சந்திரனை அசத்தியனென்கை*
*சிவசிவா தகாதென்று சிரீவசிட்ட முனியுரைக்க*
*கவுசிகர்கோன் கனன்றெழுந்து கண்ணற்றங்கு*

*யாதுசொன்னான்*

63 துந்நீதி துன்மார்க்கம் துற்சரிதை யல்லாது
நன்னீதி யில்லா நடையோனை—எந்நிலையும்
பாராட் டிலானைப் பலகா லுரைக்கின்றாய்
[தா]ராட்டும்* உன்னளவோ தான். (கசு)

*என்பது*

---

* 'சாராட்டம்' என்று சுவடியில் உள்ளது.

[உரைப்பாட்டு]

*துற்சரிதையும் துன்மார்க்கமும்*
*துர்நீதியும் தலைநின்று*
*சற்சனமென் றறியாமல்*
*தன்மநீதி மறந்தானை*
*அசத்தியத்துக்குப் பிரதானனானவனை*
*அஞ்ஞானியை அநீதிமார்க்கனை*
*பிரசித்தியொன்று மில்லானை*
*பிரம்மதெய்வ சபைநடுவே*
*அற்பனென் றுணராதே*
*அனேகமாகப் புகழ்கின்றாய்*
*சற்பாத[வினை] நீயென்று*
*சந்தோஷித்து விசுவாமித்திரன் சொல்லக்*
*கேட்டிருந்த தெய்வசபையைநோக்கி*
*யாதுசொன்னான் தேவேந்திரன்*

**64 அப்பாரிற் றப்பாதார் ஆரென்று கேட்டவதே**
**தப்பாக மாமுனிவர் தம்முள்ளே—இப்போ**
**துரையழிந்த கோபம் உணர்மினிர் என்றான்**
**வரையரிந்த வச்சிரத்தார் மன். (௬௭)**

*என்பது*

[உரைப்பாட்டு]

*கன்மலோகந் தனைக்காக்கும்*
*கதிரவர்தங் குலத்தாரில்*
*தன்மவாதியும் சத்தியவாதியும்*
*யாரென்றதே தப்பாக*
*[ஆ]முனிக்கும் விசுவாமித்திரற்கும்*
*அனேக சம்பாஷணை மாயிற்றென்று*

தேமலியும் தேவருடன்

தேவேந்திரன் மொழியக்கேட்டு

யாதுசொன்னான் வசிட்டன்

65 எத்தனையே யாக இவனிழிவு சொன்னாலும்
சத்தியமும் தண்ணருளும் தப்பாதான்—உத்தமருள்
மிக்கான் அரிச்சந் திரனென்று மீண்டுரைத்தான்
தக்காயு மாமுனியுந் தான். (கஅ)

அன்றியும்

66 பாரிழிந்து திங்கள் கொதித்துப் பரிதியொளி
நேரழிந்து மேரு நிலைதிரிந்து—வாரி
வறண்டு கனலெழுந்து வந்தாலும் நேரே
அறந்தவருன் கண்டீர் அவன். (கக)

என்பது

[உரைப்பாட்டு]

வேகத்தால் அனேகமாக

விசுவாமித்திரன் பழித்துரைத்தாலும்

நாகத்தீர் அவன்வார்த்தை

நாத்திக[மென்ப] தொன்றில்லை

பூமிகீழே இழிந்தாலும்

புணரிமிக வற்றினாலும்

மாமதியம் வெச்சென்றாலும்

வடவைகோபித் தெழுந்தாலும்

மேருவரை சலித்தாலும்

*மித்திரனிடை இருண்டாலும்

* மித்திரன்—சூரியன்.

*அரிச்சந்திரன் தப்பான் என்று*
*ஆமுனிவன் சொல்லக்கேட்டு*
*விரிக்கின்ற கோபமுடன்*
*விசுவாமித்திரன் யாதுசொன்னான்*

67 ஆற்றல் பெரிதில்லோன் அற்பன் அதி[லோ]பி
சிற்றனெனக் கோசிகன்றான் செப்புதலும்—மாற்றாமல்
நீமொழிந்த வண்ணமே தப்பாது நி[ற்பனென]
ஆமுனிவன் பேர்த்துரைப்பா னங்கு. (௬௭)

*என்பது*

*[உரைப்பாட்டு]*

*அற்பருக்குப் பிரதானமானவன் அநீதிமார்க்கன் அதிலோபி*
*நிட்கருணையன் விநோதார்த்தன் நினைவில்லோன் என்றுசொல்லி*
*வெம்மொழியே பாடாகப் பலபிதற்றிக் கூறுதலும்*
*அம்மொழியே பாடாக ஆமுனிவன் யாதுசொன்னான்*

68 வாதியர்க்கு நேரே மகாமூர்க்கன் மாறாத
வேதியர்க்கு நேரே மிகவெளியன்—நீதிகெடத்
தக்கவரைக் கண்டாற் றளர்வானால் நீசொன்ன
தொக்குமெனச் சொன்னா னுடன்று. (௬௮)

*என்பது*

*[உரைப்பாட்டு]*

*சத்துருக்க[ளிடை] மூர்க்கத்தையும்*
*சகாயத்தோர்க்கு மிகஎளிமையையும்*
*மித்திரரிடை மிகச்சிறுமையையும்*
*வேதியர்பால் மெய்த்தன்மையையும்*

பாவலர்பால் விநோதார்த்தத்தையும்
பரவனிதையர்பால் [சோதரத்துவ]த்தையும்
மேவரிய துட்டரிடை
மிக்கெழுந்த மகாகோபத்தையும்
படைப்பதன்றி அரிச்சந்திரன்
பக்கல்வேறொன் றில்லையென்று
பின்னும் யாதுசொன்னான் வசிட்டமுனி

69 **பொன்னின் மணமும் புதுமல ரிற்சுவையும்**
**மன்னும் மணிமுத்தின் [மார்த்தவ]மும்*—உன்னுது**
**தேடுமா றொக்குமே செய்யோன் குணகுணங்கள்**
**நாடுமா றென்றான் நகைத்து.** **(உஉ)**

என்பது

[உரைப்பாட்டு]

கனகத்திடைப் பரிமளத்தையும்
கதிரவனிடைச் சைத்தியத்தையும்
இன்மணியிடை மகாரசத்தையும்
இமகரனிடை வெச்சென்மையையும்
முத்தினிடை மெத்தென்மையையும்
முழுமலரிடை [யி]ரசத்தையும்
சித்தமாக இப்புவியில்
தேடிமறுகை தானொக்கும்
சத்தியாதி அரிச்சந்திர[ன் தன்]னிடையிற் குணகுண
சித்தமாக ... ... ... சிரிப்புறலும் [த்தைச்

விசுவாமித்திரன் வசிட்டனை நோக்கி யாதுசொன்னான்

---

* 'மாரசமும்' என்றும் படிக்க இடமுண்டு.

70 அந்தரத்தோர் முன்னே அரிச்சந் திரன்புகழை
முந்துரைத்தான் ஆவின் முனியென்று—சந்தி[த்தே]
இன்றுரையும் மாமுனிவீர் ஈங்கிவன்றன் ஆங்கவன்பாற்
சென்றுபெறும் நேரே சிறப்பு. (உ௩)

என்பது

[உரைப்பாட்டு]

அமரர்கோன் திருமுன்பே
அரிச்சந்திரன் சத்தியவாக்கியம்
தமதருளால் வசிஷ்டன்சொல்லுஞ்
சொல்கூ நீங்கள் தவமுனிவீர்
ஆராயினும் சென்றுரைமின்கள்
அரிச்சந்திரன்பால் ஆமுனிவன்
பேராத நெடுஞ்செல்வம்
பெறும்பேறும் பெரிதாமென
ஆக்ஷேபித்து விசுவாமித்திரன்
ஆபாஷித் துரைப்பக்கேட்டு
நோக்கரிய பெருங்கோப நோக்கு[டன்]
வசிட்டன் யாதுசொன்னன்

71 நன்னெறியை விட்டு நரர்தங் கபாலத்தே
துன்னிய கள்ளைச் சுவைகொண்டு—புன்னெறியே
தெற்காகப் போவன் திறலோன்பாற் பொய்யென்னுஞ்
சொற்காணில் என்றன் துணிந்து. (உ௪)

என்பது

[உரைப்பாட்டு]

அரிச்சந்திரன் மறந்தாகிலும்
அசத்தியம்சொன்ன னமாகில்

தரித்தசுருதி குலஞ்சார்ந்த
தன்மமார்க்கந் தனைத்துறந்து
மனித்தர்தம் கபாலத்தில்
வார்த்தசுரை தன்னையள்ளித்
தெரிபடவே மிகக்குடித்துத்
தெற்குநோக்கிப் போவனென்று
அதிபாஷை வசிட்டன்கொடுக்கையில்
அமரர்சபை எவ்வண்ணம் இருந்ததோவெனில்

**72 பாரும் விசும்பும் பகைத்துப் பொரும்போது**
**நேருங் கிரிகள் நிறுத்துமோ—பாரை**
**எரிப்பித்து மீண்டும் எடுக்கவல்லார் கோபம்**
**தரிப்பிக்க வல்லவரார் தாம். (உரு)**

அன்றியும்

**73 இருக்கவொண்ணு மீறி எழுந்திருக்க வொண்ணு**
**நெருக்கவொண்ணு நிற்கவொண்ணு நேரே—உரைக்கும்**
**நெறியற்று வானோர்கள் நேரே இருந்தார்**
**பொறியற்ற சித்திரமே போல். (உசு)**

என்பது

[உரைப்பாட்டு]

பூலோகமும் ஆகாசமும்
புகமலைந்து பொரும்போது
[மேலாரும்] சராசரங்கள்
விலக்கமாட்டாத் தன்மைபோலப்
பாரும்விண்ணும் நொடிப்பளவில்
அழித்துமீண்டும் படைக்கவல்லவர்
நேரரிய மகாமுனிவர்
இருவர்தங்கள் நெடுங்கோபத்தை

*அல்லவெனச் சொல்லமாட்டார்*
*ஆகுமெனப் பேசமாட்டார்*
*நில்லுமென விறுத்தமாட்டார்*
*நெருக்கிமிக உரைக்கமாட்டார்*
*இருக்கமாட்டார் போகமாட்டார்*
*எழுந்திருந்து விலக்கமாட்டார்*
*ஒருத்தர்முகம் ஒருத்தர்நோக்கார்*
*உகாந்தம்வந்த தெனநடுங்கிப்*
*பொறியற்ற சித்திரம்போல்*
*புத்தேளிர் இருக்குமெல்லையில்*

*தேவேந்திரன் எவ்வண்ணமிருந்தானோவெனில்*

74 **ஒருவரை நோக்கின் ஒருவரிதன் என்பார்**
**இருவரையும் நோக்கா திருக்கிற்—பெருமையெனா**
**எண்ணாது சாபம் இடுவர் எனவழிந்து**
**விண்ணாடன் நொந்தான் மிக. (உஎ)**

*என்று*

*இவ்வண்ணம் வசமழிந்திருந்த தேவசபையைக்கண்டு*
*நாரதபகவான் கவுசிகன்முகம்நோக்கி*

*யாதுசொன்னாரோவெனில்*

75 **மாற்றரிய பாடை வசிட்டன் மொழிந்தக்கால்**
**தோற்றமுடன் பாடைநீ சொல்லாதே—சீற்றம்**
**கலக்குமோ என்று கவுசிகனை நோக்கி**
**விலக்கினான் நாரதனும் மேல். (உஅ)**

*என்பது*

[உரைப்பாட்டு]

*வசிட்டமுனிவர் பாஷைசொன்னால் மற்றதற்கு எதிர்ப்பாஷை*
*விதிப்பதன்றிப் பொங்குகை மிக்ககுரோதம் ஆகாதென்று*

*கடுத்துநாரதன் மொழியக் கேட்டுக் கவுசிகமுனி யாதுசொன்னன்*

76 **அமையாத சீரான் அயனூழி காலம்**
**இமையோர் பதிதன்னில் எய்தேன்—சமயத்**
**திருந்து கவிகையான் தேசமெலாங் காணப்**
**புரிந்திரண்டு சொல்லாத போது.** (உகூ)

*என்பது*

[உரைப்பாட்டு]

*முத்தணியும் வெண்குடையான்*
*மூன்றுலோகமும் காணும்வண்ணம்*
*சத்தியவாக்கியம் தனில்நிலைநின்று*
*தப்பாதே இருந்தானகில்*
*அயனூழி காலமெல்லாம்*
*அமராபதியி லெய்தேன் என்று*
*வியனகப் பிரதிக்கினைதன்னை*
*விசுவாமித்திரன் கொடுத்தருளலும்*

*அதுகேட்ட வசிட்டமுனி யாதுசொன்னனேவெனில்*

77 **உதரம் மிகநோவ ஓதிதனைக் கொய்யும்**
**சதுரன் கதையுமிது தானே—கதிரோன்**
**குலத்தான் ஒருமொழியே கூறினல் நேரே**
**நிலத்தாழ்வன் என்ற நெறி.** (ஙம)

*என்று*

*இவ்வண்ணமே வசிட்டன் சரசவாக்கியஞ்*
*சொல்லி நகைக்க மீட்டும்*
*விசுவாமித்திரன் எவ்வண்ணம் பிரதிக்கினை*
*பண்ணினனேவெனில்*

78 காமமதங் கோபம் கடிந்த[ஞ்சு மோதி]யே
தாமரையின் ஆசனத்தே தானிருந்து—நாமச்
சிவன்றனக்கா யானிருந்து செய்தவத்தே பாதி
அவன்றனக்கா கென்றான் அவண். (௭௧)

என்பது

[உரைப்பாட்டு]

காமக்குரோத லோபமோக
மதமாற்சரியந் தனைக்கடிந்து
சேமமிக அஞ்செழுத்தையுஞ்
சிக்கெனச்சிந்தையில் உறவழுத்திப்
பஞ்சாக்கினி மத்தியத்திலே
பத்மாசனத் துடனிருந்து
நெஞ்சாரவே நான்செய்த
நிலையுடைய மகாதபசின்
ஒன்றுபாதி யான்கொடுப்பன்
உண்மைமார்க்கத்து அரிச்சந்திரன்
நின்றானகில் எனஉரைத்த
விசுவாமித்திரன் நிலைமைகண்டு
வாழ்வுபெற்ற மனத்தனகி
வசிட்டமுனி யாதுசொன்னான்

79 விண்ணோர் [சபையின்] மிகவே சபதத்தை
எண்ணாமல் நீகொடுத்தாய் இப்போது—நண்ணரிய
தப்பேது மில்லானைத் தாரணியில் நீபோகி
எப்போது சோதிப்பாய் என்[று] (௭௨)

என்று

[வசிட்டமுனி சொல்லைக்கேட்டு விசுவாமித்திரன்
யாது சொன்னான்]

80 என்றுபோய்ச் சோதிப்பாய் என்றென்னைக் கேட்பதுநீ
அன்றுபோய்ப் புத்திசொல்வ தாகவோ—என்று
தவமுனிவர் முன்னே சலமுனிவன் றன்னைக்
கவுசிகனும் சொன்னான் கனன்று. (௩௩)

*என்பது*

*[உரைப்பாட்டு]*

*கவுசிகனும் பிரதிக்கினைகூறக் கண்டிருந்த வசிட்டனும்நீ*
*அவனிவேந்தைப் பரீட்சிப்பதற் கனுகும்நாள் ஏதெனக்கேட்ப*
*... ... ... மற்றந்தக் கவுசிகனை முகம்நோக்கி*
*வசிட்டமாமுனி யாதுசொன்னான்*

81 திங்களுக்குத் தண்ணெனவும் செங்கதிர்க்குப் பேரொளி
பொங்கு மலர்க்குப் புதுமணமும்—அங்கே [யும்.
பிறந்துடைய வாறுபோற் பெம்மானுக் கன்பு
சிறந்துடைய னென்றான் தெளிந்து. (௩௪)

*என்பது*

*[உரைப்பாட்டு]*

*மாமதிக்குச் சைத்தியமும் வண்கதிர்க்கு மகாதேசசும்*
*பூமலர்க்கு நறுநாற்றமும் போகாத படியாகப்*
*போதிப்பா ருண்டாமாகில் பூபதிக்கு மகாசத்திய*
*நீதிக்கே நிறுத்தும்வண்ணம் நினைப்பிப்பார் வேணுமென்று*

*வசிட்டமகாமுனிசொல்ல மகரிஷி யாதுசொன்னான்*

82 *இடிவிழும்போ[ழ்] கைக்குடைதான் ஏந்துமோ நேரே
படிவிழும்போ[ழ்] தாங்கப் படுமோ—கடுவினையாற்
சாதிக்க என்று தொடங்கினாற் றப்பாதுன்
போதி[ப்பா]ல் என்னும் புகல். (௩௫)

*என்பது*

---

* 'இடிவிழும்போ, படிவிழும்போ' என்று சுவடியில் காணப்படுகின்றன.

[உரைப்பாட்டு]

காரிடிதான் விழும்போது
கைக்குடைதான் காத்துநிற்குமோ
பாரிடந்தான் விழும்போது
பலரும்ஓடித் தாங்கவல்லரோ
விசும்புமேலே விழும்போது
வெற்பிடைதான் தடுத்துநிற்குமோ
அசும்படைய வாரிபொங்கினல்
அணைகள்கட்டி ஆவதுண்டோ
யானேசென்று அரிச்சந்திரனை
இரண்டுசொல்வா னக்கும்போதில்
நீயேதான் போதித்தாலும்
நிறுத்தவல்லையோ முனியேஎன்று சொல்ல
விசுவாமித்திரன் தனைநோக்கி வசிட்டமுனி
யாதுசொன்னுன்

83 கண்டவை நேரே திரிந்து கவுசிகற்குப்
பண்டை யரசொழுக்கம் பட்டதால்—கொண்ட
குலத்தளவே யாகுங் குணமென்று முன்னேர்
நிலத்தளவே சொன்ன நெறி. (௩௬)

என்பது

[உரைப்பாட்டு]

குலமளவே குணமென்று
முன்புநல்லோர் கூறியதை
நிலைபெறவே விசுவாமித்திரன்
நீதியாலே அறிந்தோம்இன்று
எப்படியோ ரிஷித்துவமாயும்
இராசவுட்டணம் நீங்காதென

*அப்போது வசிட்டன்கூறலும்*
*அந்தமொழி செவிதா[க்]க*
*விசுவாமித்திரன் நிலைமை யாதாயிற்றோவெனில்*

84 கைநடுங்கக் கால்நடுங்கக் கையிற் குடைசரிய
மெய்நடுங்க உள்ளம் வெதுப்பெடுப்பத்—துய்ய
விழிசிவப்ப வாரி விடுங்கனலே போல
மொழிபதற நின்றான் முனி. (கஎ)

*அன்றியும்*

85 கண்ணிற் பொறிகலங்கக் கையிற் கமண்டலநீர்
விண்ணில்விழ விண்ணோர் மிகநடுங்க—வண்ணம்
பொருப்பென்ன [ந]ங்கையிடம் புல்லினோன் கண்ணில்
நெருப்பென்னக் கோபித்தான் நின்று. (கஅ)

*இவ்வண்ணமே*

*[உரைப்பாட்டு]*

*சொல்லரிய கோபமுடன் சுரருலகு நடுங்கும்வண்ணம்*
*வல்லியொரு பாகத்தான்றன் மத்தகஞ்சேர் அக்னிபோலவே*
*வலியனாய்க் கோபஞ்செய்யும் விசுவாமித்திரன் மீண்டும்*

*யாதுசொன்னான்*

86 என்றன் இராச விருதுத் தனங்காண
உன்றனையும் நேரே உறைவழித்—துன்றன்
அடிப்பாடன் பாரில் அசத்தியனே யாக
முடி[ப்பேன்யான்] என்றான் முனி. (கக)

*என்பது*

[உரைப்பாட்டு]

தேவ சபைநடுவே ராசரிஷி எனச்சொல்லிய
உன்னைத்தானப் பிரட்டனாக்கி உன்னுடைய சிஷ்யனாகிய
அரிச்சந்திரனையும் அசத்திய னாக்கிய அப்பொழுது
இராச ரிஷித்துவமதை விரித்தல்செய்வேன் யான்என்று
விசுவாமித்திரன் மற்றும் [வெகுண்டு]

யாது சொன்னானோவெனில்

87 பார்பார் எனமொழிந்து பாரி னிடைநோக்கி
மாரி யசனிவிழு மாறேபோல்—போராத
மீச்சுரனை விட்டகன்று மேதினியிற் றானிருந்த
ஆச்சிரமம் புக்கான் அவன். (அ௭)

என்பது

[உரைப்பாட்டு]

விண்ணிடையில் மகாரிஷியும்
வசிட்டனும் கலகமாகியே
எண்ணரிய தேவர்களும்
இருஷிகளும் நடுங்கும்வண்ணம்
பிரதிக்கினை[கள்] பலமொழிந்து
பிருதுவிநோக்கி விசுவாமித்திரன்
முகிற்குலத்தின் இடிபுவிமேல்
முழங்கிக்கொண்டு விழுவதுபோல்
வந்திழிந்து தன் ஆசிரமம்
புகுந்தபின்பு வசிட்டமுனி

யாது செய்தானோவெனில்

88 மன்னும் கவுசிகன்றன் வானின்றும் போந்ததற்பின்
பொன்னுலகி லுள்ளோர்கள் போற்றிசெய—அந்நிலையே
மீதலத்தை விட்டு விளங்கும் பசுமுனியும்
பூதலத்தைச் சார்ந்தான் புக. (சுக)

என்பது

[உரைப்பாட்டு]

புத்தேளிர் உலகத்தினின்று
விசுவாமித்திரன் போந்தபின்பு
அத்தலத்தி லுள்ளாரெல்லாம்
அனேகமாகப் போற்றிசெய்ய
ஆமுனியும் புவியில்வந்து தன்
ஆசிரமம் புக்கான் என்றவாறு.

சலம்வருகாண்டம் முற்றும்.

மூன்றாவது

# யாக காண்டம்.

89 நாநனைந்து போற்றித் தொழுமனமே நாடோறும்
நீநினைந்த வெல்லாம் நிறைவேறும்—மாநாகத்
துத்தி முகத்தாமஞ் சூடுஞ் சிவன்பெற்ற
அத்திமுகத் தான துடி. (க)

*இப்பால் விசுவாமித்திரன் எவ்வண்ணம் வினைநினைந் தானோவெனில்*

90 காய்ந்த வெகுளி யதனாற் கவுசிகர்கோன்
வேந்தை அழிக்க வினைதேடி—ஆய்ந்தே
பழிப்பினால் நல்யாகம் பண்ணும்வகை கூ[ட்]டி
அழிப்பனால் என்றெழுந்தான் ஆங்கு. (உ)

*என்பது*

[உரைப்பாட்டு]

*விழிப்பரிய கோபமுடன்*
*விசுவாமித்திரன் வேந்தர்வேந்தனை*
*அழிக்கவெண்ணிய மனத்தனாகி*
*அனேகவிசாரம் விசாரித்தபின்பு*
*வேட்டல்வேணும் [வெகு]சுவன்ன*
*யாகம்என்ன வேல்வேந்தனைப்*
*பூட்டுவித்து அதுமூலமாகப்*
*புகுந்துவினை செய்வோமென்று*
*விசாரித்து எழுந்திருந்து*
*விசுவாமித்திரன் யாதுசெய்தான்*

91 எண்ணம் இஃதென் றெழுந்திருந்து கூத்தாடி
விண்ணிடைப் புக்க விசேடத்தைத்—திண்ணம்
அறியாத வேதியரை ஆங்கழைத்துக் கொண்டான்
முறியாத கோப முனி. (கூ)

என்பது

[உரைப்பாட்டு]

வசிட்டனுடன் பிரதிக்ஞைபண்ணி
வந்ததனால் வேல்வேந்தனை
அசத்திய னாக்கும்புத்தி
யறிந்தனம் என்று...ரமித்து
மண்ணிலிடைக் கூத்தாடி
வசிட்டனுடன் சலவாசகம்
விண்ணிடையில் [நிகழ்ந்த]தறியாத
வேதியரை அழைத்துவிட்டு
யாதுசொன்னான் விசுவாமித்திரன்

92 அகமன்னுஞ் செல்வத் தரிச்சந் திரன்றன்
வெகுசொன்ன யாகமது வேட்க—வகையினால்
மந்திரமுஞ் சொல்லி மனங்கொளுத்தி வாருமென
அந்தணரை விட்டான் அவன். (சா)

என்பது

[உரைப்பாட்டு]

வேதியர்க்கு மிடிநீங்க
வெகுசுவன்ன யாகந்தன்னைப்
பூதலத்தில் வளர்ப்பதற்குப்
பூபாலரிற் பிரதானனாகிய
அரிச்சந்திரன் அல்லாதில்லை
ஆங்கவன்பால் நீங்கள்சென்று

*விரிக்கின்ற மகாளக்ஞம்*
*விளக்கும்வண்ணம் உடன்படுத்தி*
*வாருமென முனியுரைக்க*
*மாமறையோர் யாதுசொன்ஞர்*

93 **மாமுனிவன் சொன்னமொழி வஞ்சனையென் றோராதே**
**நாம மறையோர் நடந்தெய்தித்—தேமலிபூங்**
**காவேய்ந்த சோலைக் கட்நாடு தாங்கடந்து**
**பூவேந்தைக் கண்டிருந்தார் போய்.** (ரு)

*என்பது*

[*உரைப்பாட்டு*]

*வஞ்சனையால் விசுவாமித்திரன்*
*வகுத்துவிட்டவா றறியாராய்த்*
*தஞ்சமா[க அயோத்தியா]*
*ராச்சியம் [தனை]ச்சார்ந்து*
*அரிச்சந்திரனைக் கண்டவர்தாம்*
*ஆசீர்வாதம் பலகூற*
*[விருத்த]வேதியர் தமைநோக்கி*
*வேந்தர்வேந்தன் யாதுசொன்ஞன்*

94 **தக்கார் வரவேது சாற்றுமெனச் சாத்திரத்தின**
**மிக்காய தொன்றுண்டு வேல்வேந்தே—அக்கருமம்**
**சொல்லுகைக்கு வந்தோம் எனவுரைக்கச் சொல்லு**
**வில்லுகைக்குந் தோளான் மிக.** [மென்ருன் (சு)

*என்பது*

[*உரைப்பாட்டு*]

*வேதியரை வரவுகேட்க*
*மீட்டுஅவரும் வேதசாத்திரத்து*

ஆதியான யாகமொன்றை
அறிந்தணைந்தன மெனக்கூறக்
கொற்றவேந்தனும் உரையுமெனக்
குலமறையோர் யாதுசொன்னர்

95 **மன்னவனே சொல்வோம் மருதே யிருக்கிலென**
**அந்நிலையே வேந்துரிமை ஆணையிட—முந்நூல்**
**விரிகின்ற தோளார் வெகுசொன்ன யாகம்**
**புரிகென்று சொன்னர் புகழ்ந்து** (எ)

என்பது

[உரைப்பாட்டு]

மறையவரை வந்தவாறு
சொல்லுமென மற்றவரும்
குறையதனைக் கூறுமல்
செய்கிலன்றே கூறுவோம்என
நகைமுகிழ்த்து வசிட்டனுணை
நாம்செய்வோம் உரையும்என
வெகுசுவன்ன யாகம்என்பது
வேள்விக்கெல்லாம் மிகப்பெரியது
ஆங்கதனை வளர்க்கவல்லா
ருன்னையன்றி யில்லைஆதலால்
நாங்கள்வந்தோம் உனக்குரைக்க
நடத்தவேண்டும் [யா]கம்என
அரிச்சந்திரன் யாது சொன்னன்

96 **முத்தீயுந் தப்பா முதுகு[ல]த்தீர் நீருரைத்த**
**அத்தீயின் செய்தி அருள்கென்னக்—கொத்தீ**
**விரைத்தாரான் கேட்டருள வேதியரும் அப்போ**
**துரைத்தார்கள் செய்தி யுற.** (அ)



என்பது

[உரைப்பாட்டு]

வேதியரே நீங்கள்சொல்லும்
யாகத்தை வேட்கில்அதற்
காதியான திறமெல்லாம்
அநுக்கிரகிக்க வேணுமெனப்

பிராமணர் யாதுசொன்னாரோவெனில்

97 தங்கும் மறையவர்கள் கேட்டதனைத் தப்பாமல்
அங்கருள்கை வேள்வி அடைவென்றார்—செங்குவளை
ஆமென்று போதும் அயோத்தியர் கோமானும்
ஓமென் றுடம்பட்டான் உற்று. (கூ)

என்பது

[உரைப்பாட்டு]

வேண்டியதை வேண்டினார்கள்
வேண்டுவதன் முன்கொடுப்பது
ஆண்டகையே வெகுசுவன்ன
யாகம்என்ப தெனஉரைத்தலும்
வேதியரோடு உடம்பட்டு
வெகுசுவன்னயாகம் விளைக்கத்துடங்கினான்.

அஃது எவ்வகையோவெனில்

98 கோமுனிபாற் சென்றழைத்துக் கொண்டு குவலயத்தின்
மாமுனிவர் எல்லாரும் வாழ்வெய்தத்—தாமத்துப்
பூவேட்டு வண்டு புணரும் திருநாடன்
தீவேட் டிருந்தான் சிறந்து. (கஅ)

என்பது

THE MADURA TAMIL SANGAM

[உரைப்பாட்டு]

*வசிட்டனையும் அழைத்துக்கொண்டு*
*மறையோரெல்லாம் வாழ்வுகூர*
*விசிட்டமாக வெகுசுவன்ன*
*யாகந்தான் விளைக்குங்காலை*
*வந்தவேதியர் யாதுசெய்தாரோவெனில்*

99 விடுத்த தவமுனிபால் மீண்டுபோய் வேதம்
படித்து மொழிவார் பகர்ந்தார்— ....
... .... குறித்தபடி வேள்விதனைச்
செய்தனனு லென்னச் சிறந்து. (கக)

என்பது

[உரைப்பாட்டு]

*விசுவாமித்திரன் விடப்போந்த*
*வேதியர்கள் மீண்டுபோகிக்*
*கையாலே மகாமுனியைக்*
*கண்டுதொழு திருந்தபின்பு*
*வீரவேந்தன் ...*
*வெகுசொன்ன யாகந்தன்னை*
*ஆரம்பித்து நடத்துகின்று*
*னென்றடைய அவற்குரைத்தலும்*
*வேதியர்கள் சொல்லக்கேட்டபின்*
*விசுவாமித்திரன் யாதுசெய்தான்*

100 சாலை தனில்வசிட்ட மாமுனிவன் தங்காத
கால மறிந்து கவுசிகனு—மாலைக்
கொழுந்திறைஞ்சும் திண்புயத்துக் கோமானைக் காண]
எழுந் திறைஞ்சி நின்றுன் இறை. (கஉ)

என்பது

(உரைப்பாட்டு)

வசிட்டமுனி இல்லாத
வன்னிசாலையில் அரசன்பக்கல்
விசிட்டனாகிய விசுவாமித்திரன்
மேற்படவே எழுந்தருளலும்
வரவுகண்ட அரிச்சந்திரன்
மகாமுனிவனை எதிர்சென்று
பரிவுடனே அர்க்கிய[மொடு]
பாத்தியாசமனம் மிகக்கொடுத்துக்

கைதொழுதுநின்று யாதுசொன்னான்

**101 தவமுனிவீர் வேண்டுமது சாற்றுகெனத் தானும்**
**இவுளிமத யானைமேல் ஏறிக்—கவணை**
**எடுத்தெறிந்த தூரத் திருநிதியுஞ் சேரக்**
**கொடுத்துவிடு கென்றான் குறித்து. (கக)**

என்பது

(உரைப்பாட்டு)

மாமுனி[நீர்] வேண்டியதை வகுத்துரையும் எனமுனியும்
காமமத யானையேறிக் கடுங்கவணைமிக விடைபோக்கி
எடுத்தெறிந்த தூரம்வத்து ராசிஎனக்கு அளிக்கஎன்று
திவ்வியவேத முனியுரைக்கத் தேர்வேந்தன்

யாதுசொன்னான்

**102 அந்தப் படியே அருள்வன்பொன் கொள்கென்று**
**முந்தச் சொரிய முனிதானும்—செந்தேன்**
**வருக்கை சொரியும் வளநாட நின்பால்**
**இருக்கவெனச் சொன்னான் எடுத்து. (கஉ)**

என்பது

(உரைப்பாட்டு)

*இரிஷிசொன்ன அப்படியே இலங்குபொன் ... சொன்ன*
*வரைபொருவச் சொரிவித்தலும் ... ... சோபமுடன்*

*விசுவாமித்திரன் யாதுசொன்னனெனில்*

103 **இவனுடைய வண்மையினை எண்ணுமல் விண்ணேர்**
**அவைநடுவே யாதுரைத்தோம் ஐயோ—சிவசிவா**
**என்றுரைத்து [நெஞ்சம்] இளைத்தான் இளைப்பளவில்**
**நின்றுரைத்த சின்னம் நெறி. (கரு)**

*என்பது*

(உரைப்பாட்டு)

*சத்தியகீர்த்தி அரிச்சந்திரனைச்*
*சருவதா பேதித்தாலும்*
*உத்தமமான குணந்தவிரான்*
*உரைதவறுன் அதனல்*
*மேதகுசாந்தி வர்க்கத்திலே*
*விண்ணவர்கோன் திருமுன்பே*
*ஏதோபிரதிஞ்ஞை சொன்னேம்*
*வசிட்டனுட னெனநினைந்து*
*செகத் ... ய விசுவாமித்திரன்*
*சோபமெய்தி அழியுமெல்லையில்*
*பொற்சின்னமே ரிஷிகேட்டுப்*
*புகழ்முனியும் மனந்தேறினன்*

*அஃது எவ்வகையோவெனில்*

104 **நன்றி கடந்தாரும் வா[மு]ரமல் நானிலத்தை**
**என்றும் இவன்காக்கும் என்றென்றே—இன்று**
**வழுங்கிற்றே போல ...... .......**
**முழுங்கிற்றே அங்கண் முரசு. (கசா)**

*என்பது*

[உரைப்பாட்டு]

படியடங்கப் புகழோங்கப்
பரிந்து[கு]றை வாராவண்ணம்
குடிமகிழக் கோலோச்சும்
கொற்றவேந்தன் இவன்என்று
மும்முரசும் நின்றுஅரற்ற
முனீசுவரனும் கேட்டருளித்
தன்னுடைய நினைவுகூடிற்றென்று
சந்தோஷத்துடன் யாதுசொன்னான்

105 அடுத்த குணத்தால் அவனிநேர் காக்க
எடுத்த முரசி னிசையால்—கெடுத்த
புகழ்பொருள் [பெற்றுனே] போற்கௌசிக[னு]ம்
[வகிரெண்ணம்] கொண்டான் மகிழ்ந்து. (கஎ)

என்பது

[உரைப்பாட்டு]

நெறிவழிப் புகழ்நெடுக நீதியோங்க நீணிலத்தை
முறைவழு ... மாக ... முரண்டாரான் காக்குமெனப்
படியடைய வீரமுரசு ... பலபடி பொற்சின்னம்
பார்வேந்தன் முன்முழங்க ... ...
[கெடுத்த]பொருள் கண்டார்போற் கிளர்புடையபிரிய[தரனுய்]
குரோதபுத்தியாலே எவ்வண்ண[ம் ஸ்]மரித்தானேவெனில்

106 மிருகம் விடுத்தால் விரை ... யால்
வருவன் இறைவேட்டை வந்தால்—ஒருவழியே
என்வனத்தே கூட்டி இடர்செய்வன் என்றெண்ணித்
தன்வனத்தே போனான் தவன். (கஅ)

என்பது

ககமிருக[ங்களா]ல் லோகமெல்லாங்
கட்டழித்தால் காராளர்
மிகவுஞ்சென்று வேந்தனுக்கு
முறையிடுவர் வேல்வேந்தனும்
தன்னிலத்தோர் முறைகேட்டுத்
தரியானாகி மிருகயாத்திரை
புன்வனத்தினி டைப்போதுவன்
போந்தவனை உபாயத்தினால்
என்னுடைய தபோவனத்தில்
எய்துவித்திடர் செய்குவனென்று
தன்னுடைய ஆசிரமந்
தனிற்புகுந்தான் விசுவாமித்திரன் எ—று

இப்பால் வசிட்டன் யாதுசெய்தான்:—

மதிப்புடைய விசுவாமித்திரன்
வந்தசெய்தியும் போனசெய்தியும்
கதிர்க்குலத்தோர் மகாமுனிக்குக்
கட்டுரைக்க அவன்கேட்டுச்
சிந்தாகுலம் மிகப்பெருகித்
தெய்வசபையிற் புகுந்தவெல்லாம்
மூந்தவே தாம்உரைத்தல்
முறைமையல்லவெனநினைந்து
சிந்தையினால் விசுவாமித்திரன்
தபோவனத்தில் தேர்வேந்தன்
மறந்தும்போகா திருக்கஎன்று
மறைபொருளால் அருள்செய்து
ஆமுனியும் தன்னுடைய
ஆசிரமத்தை யடைந்தானென்றவாறு.

யாககாண்டம் முற்றும்.

நான்காவது

## மிருகயாத்திரைக் காண்டம்

107 நண்[ணித்] தொழுமனனே நாடோறும் நாடோறும்
எண்ணும் கருமமெலாம் ஈடேறும்—தண்ணார்
தவளநிறத் தந்தச் சரிவயிற்று நால்வாய்ப்
பவளநிறத் தந்தி பதம். (க)

*இப்பால் விசுவாமித்திரன் யாகம்[செய்தான்]*

108 வஞ்சினத்தால் வேட்டை வருவித்து வைநுதிவாய்
அஞ்ச[ன]த்தால் கானத் தகப்படுத்தி—மிஞ்சப்
பறைமாத ராலே படுத்தினன் பார்மேல்
முறையால் வழுவா முனி. (உ)

*அன்றியும்*

109 கரந்தனில் நீர்வாங்கிக் கண்மூய்த் [திறப்ப]ப்
பரந்த மிருகம் பறவை—நிரந்தரனைக்
குன்றழியுந் தோளான் குளிர்சரயு நன்னாட்[டைச்]
சென்றழியும் என்றான் சினந்து. (ங)

*என்பது*

*[உரைப்பாட்டு]*

*கமண்டலநீர்வாங்கிக் ... ...*
*கையிற்கொண்டு கண்ணைமூடி*
*அமர்ந்துநெடுந் தியானம்பண்ணி*
*அவனிமீதே தெளித்திடலும்*

*சிங்கம் யானை யாளிபுலி*
*சினக்கரடி முதலாயுள்ள*
*வண்ணமான பலமிருகம்*
*வலியகருடன் ராசாளி*
*வல்லூறு பேராந்தை*
*வால்வலியான் சிம்புள்முதல்*
*எல்லையில்லா மிருகபக்ஷியும்*
*இடைமிடைந்து முன்தோன்றலும்*
*ஆங்கவற்றைத் தாநோக்கி*
*அரிச்சந்திர னிராச்சியத்தை*
*நீங்கள்போகி அழியுமென*
*நெடுந்தவத்தோன் பணிகொடுத்தலும்*
*அந்தமிருகபக்ஷிகள் எங்ஙனம்*
*இராச்சியத்தை அழிவுசெய்தவோவெனில்*

**110** **முளைஉழுவை தின்னும் முளைதப்பி வந்தால்**
**கிளையிரலை நேரே கெடுக்கும்—விளை[வைக்]**
**கிளிமயில்கள் தின்னும் கிழங்குகளைக் கேழல்**
**வெளியுருவ வாங்கி விடும்.** **(அ)**

*என்பது*

[உரைப்பாட்டு]

*விதையடங்க எறும்பிழுத்தும்*
*மிகுந்ததனை உழுவைகொண்டும்*
*முளையடங்கப் பறிபோயும்*
*முகிழ்த்ததனைக் கலைமான் தின்றும்*
*கதிரடங்கக் கிளிதின்றும்*
*மயில்பறித்தும் காயடங்க*

*மதியடங்கிய குரங்குதின்றும்*
*வளர்கிழங்குகளை வராகம்தின்றும்*
*இராச்சியத்துள்ளார் பீடையெய்த*
*மற்றும் எவ்வண்ணம் அழிவுசெய்தவோவெனில்*

**111 தோப்படங்க வேழம் துவைத்தெடுக்கும் சூழ்போகிக்**
**காப்பவரை நாகம் கடித்துயிர்க்கும்—மாப்போய்**
**வழித்ததேன் தாரான் வளநாடு தன்னை**
**அழித்ததே சென்றங் கவை. (ரு)**

என்பது

[உரைப்பாட்டு]

*பொழிலடங்கக் கரியொடித்தும்*
*புனலடங்க முதலைபாய்ந்தும்*
*வழியடங்கப் புலிகரடி*
*நலிவுசெய்து மாடுகொன்றும்*
*ஆங்கவற்றைக் காப்பவரை*
*அரையிருள்வாய் அரவுதீண்டியும்*
*ஆங்கொருவர் இயங்கவின்றிப்*
*போகவின்றி அழிவுசெய்தலும்*
*ஆற்றாத படைசெனம் அவனிபனுக்கெவ்வண்ணம்*
*முறையிட்டனரோவெனில்*

**112 கழிவுசெய லின்றிக் ககமிருக மெல்லாம்**
**அழிவுசெய ஆற்ற தழன்று—குழை[யாற்]**
**பறையிட்டா லித்தடைக்கும் பாய்புனல்சூழ் நாடர்**
**முறையிட்டார் பார்வேந்தன் முன். (சு)**

என்பது

[உரைப்பாட்டு]

ககமிருகத்தால் அழிவுசெயப்பட்டுக்
காப்பதற்கொரு பாங்குமின்றி
அகலிடத்தார் மிகஆற்ருர்
அழுன்றுதங்களில் மிகக்கூடிக்
கொற்றவன்றன் வாசலிலே
*குழைபிடித்துக் கூப்பிடலும்
மற்றவரை முறைகேட்டபின்
மன்னர்மன்னவன் யாதுசெய்தான்

118 என்றுமுறை கேட்டறியோம் இந்தமுறை ஏதென்று
சென்றழையும் என்னச் சிலரோடி—நின்றழைப்ப
மாநாட்டார் வந்தவரை வந்தபொருள் ஏதென்முன்
காநாட்டுங் கையான் கலந்து.

என்பது

[உரைப்பாட்டு]

இரவி குலவேந்தர்
இராச்சியபாரம்செய்த இதுகாலம்
வரலில்லாத அபயசத்தம்
வந்ததற்குப் பொருள்ஏதென்று
தேரரசன் அழையுமென்னச்
சேவைகாரர் கடிதோடி
வாருமென்ன வரவழைத்து
மன்னன்முன்னே நிறுத்துதலும்

* குழைபிடித்துக் கூப்பிடல்—தங்கள் முறையீடு முதலியவற்றைக் கேட்டு முடிவுசெய்யும்படி மரக்குழைகளைப் பிடித்துக் கொண்டு காரியத்தடை செய்து கூப்பிடல்.

*வந்ததுயார் ஏதென்று*
*மற்றவரை வினவுதலும்*
*அந்தமில்லாப் புகழரசன்முன்*
*அகலிடத்தோர் யாதுசொன்னார்*

114 **வேறுகுறை யில்[லோ] மிருகத் திரளாலும்**
**பாறு பறவை பலவாலும்—ஊறும்**
**நறவழிந்த தண்டாராய் நாள்தோறும் நாங்கள்**
**அறவழிந்தோம் என்றார் அவர்.** **(எ)**

*என்பது*

[உரைப்பாட்டு]

*இறைமுறையாற் கேதமில்லை*
*நின்னேவலால் நடுக்கமில்லை*
*மறையோதத் திங்கில்லை*
*மாற்றரசரால் பகையில்லை*
*பக்ஷிமிருகத் தால்எங்கும்*
*பாரடங்க விளைவில்லை*
*வித்தில்லை அதனாலே*
*மிகநொந்தோம் எனச்சொல்ல*
*மற்றவரை முகம்நோக்கி*
*மன்னர்மன்னன் யாதுசொன்னான்*

115 **அஞ்சலினி அஞ்சல் எனக்கூறி ஆரணியம்**
**விஞ்சு கடமா விதமெல்லாம்—துஞ்சப்**
**படைதொடுப்பேன் என்று பரிவட்டம் சூட்டி**
**விடைகொடுத்தான் நாட்டவரை வேந்து.** **(அ)**

*என்பது*

[உரைப்பாட்டு]

வந்துமுறை யிட்டவரை
வரவழைத்து முறைகேட்டபின்
அந்தமிருக பக்ஷிசாலம்
அழிவுசெய்தவோ எனஉரைத்துப்
பே[ப]ர்ந்தவர்க்கு விடைகொடுத்தபின்
பூபாலன் யாதுசெய்தானோவெனில்

116 வேட்டை யவரை வரவழைத்தான் வேந்தனுக்குக்
காட்டில் இனியபல காணிக்கை—கூட்டி
நிறைஞ்சமலர்த் தாரற்கு நேராகக் காட்டி
இறைஞ்சினர் அன்னார் எதிர். (கூ)

என்பது

[உரைப்பாட்டு]

கிராதர்தம்மை அழையுமெனக்
கிட்டிஞ்சனமும் புலித்தோலும்
பராசிலையிற் குறுந்தினையும்
பசுங்கழையில் நறுந்தேனும்
மான்குரங்கும் மரைவாலும்
மதவானையின் பருங்கோடும்
[முள்ளம்பன் றிகளும்] புலியுகிரும்
மொழிந்[திட்ட] மயிற்பீலியும்
காணிக்கை கொடுத்துவேடர்
தலைவர்வந்து காணுதலும்
பூணுற்ற திருப்புயத்தான்
புகுந்தவருடன் யாது சொன்னானோவெனில்

117 வாரும் வலையும் வளையும் மணிவடமும்
சேரும் எனவே செலவிடுத்து—வீரரையும்
கட்டுறுமின் வில்வேட்டை காலமே என்[றுரைத்தான்]
மட்டுறுமென் தாரான் மதித்து. (கஎ)

என்பது

[உரைப்பாட்டு]

வேட்டைக்காரரை வரவழைத்து
விலங்கும்கண்ணியும் பெரும்படமும்
பூட்டும்[கொணர] அவர்தம்முடன்
கூறிஅவரைப் புகவிடுத்து
வேந்தன்சேனையை மிகநோக்கி
மிருகயாத்திரைக்குப் பயணமாமென்று
ஏந்துமணியா சனத்தினின்று
எழுந்திருந்து கோயில்புக்கான்.
பின்னர் யாதுசெய்தான் சத்தியசந்தன்

118 அற்றைநாட் போக்கி அருண வுதயத்தே
மற்றைநாள் மண்டபத்தே வந்தெய்தி—ஒற்றையால்
வில்வேட்டை போக விரையவரு கென்பித்தான்
மல்வேட்ட தோளான் மதித்து. (கக)

என்பது

[உரைப்பாட்டு]

அற்றைஞான்று அருணன்
உதயம் செயுமுன்னே
பொற்புடைய மண்டபத்தே
போர்வேந்தன் புகுந்திருந்து
வேட்டைபோகப் பண்ணுறுவீர்
எல்லீரும் வருகஎன்று

கூட்டமுடன் பொற்காளம்
கோயில்வாச[லிற்] குறிசெய்தபின்பு
வேட்டைத்தலைவர் எவ்வண்ணம்
வந்து ஈண்டினரோவெனில்

119 தழையுடுத்துக் குன்றிமணித் தாவடத்தைப் பூண்டு
குழல்பிடித்துக் [கொம்பூதிக் கொண்டு—கழையிற்]
கடைந்தபேர் அம்பினுடன் கார்முகமும் ஏந்தி
மிடைந்தவே வேடு மிக. (கஉ)

என்பது

[உரைப்பாட்டு]

குன்றிமணி மாலைபூண்டு குழையுடுத்துப் பீலிகட்டி
ஒன்றிய மஞ்சாடி யுடன்மணியும் ஒளிரச்சூடிக்
காந்தள்மாலை கழுத்தணிந்து கடும்புலித்தோல் வயிறுவீக்கி
ஏந்துகுழல் கொம்புகுறித் தெம்மருங்கும் முரைசறைந்து
வந்திருந்தவேட்டைத்தலைவர் எவ்வணத்துநாய்கள்கொண்டு

வந்தாரோவெனில்

120 வாலுஞ் செவியும் மருங்குவயி றுஞ்சிறுத்து
மேலும் உரமும் மிகப்பெருத்துக்—காலும்
நிறைந்த உடம்பும் நெடியகடு நாய்கள்
சிறந்தவே எங்கும் திரிந்து. (கங)

என்று

இவ்வகைப்பட்ட நாய்களில் எவ்வகைப்பட்ட
விருதுடைய நாய்கள் வந்தனவோவெனில்

121 புலிதீரன் சிங்கன் புராந்தகன் யாளி
வலிதீரன் வாராக மல்லன்—நலியுங்
கரிசூறைக் காற்றென்னுங் காட்சியுள நாய்கள்
விருதாக வந்தனவே மிக்கு. (கச)

என்று

இவ்வகைப்பட்ட நாய்கள் வந்தபின் எவ்வகைப்பட்ட தீவகங்கள் வந்தனவோவெனில்

122 கலையும் புலியும் கடமாவும் மாவும்
தொலையும் புறவும் சுவறும்—பலவகையில்
தீவகங்கள் எல்லாம் சினவேடர் கட்டினார்
ஏவகங்கை வல்லான் எதிர். (கரு)

என்று

இவ்வகையான கிராதர்சேனை தவிர்ந்து, இராசசேனை எவ்வண்ணம் திரண்டதோவெனில்

123 கடைபோய தேரும் களிறும் பரியும்
மிடைபோய வேந்தர் பலரும்—நெடிய
வரம்பிற்றேன் பாயும் வளநாடன் சேனை
நிரம்பிற்றே எங்கும் நிலம். (கசு)

என்பது

(உரைப்பாட்டு)

துலங்குமணி நெடுந்தேரும்
சூடுபரியும் சூழியானையும்
இலங்குபடைத் திறல்மறவரும்
எண்ணிறந்த பதாதிவெள்ளமும்
மண்ணுலகம் கீழ்மறைப்ப
வானுலகம் மேல்மறைப்பப்
பண்ணமைந்து புறப்பட்டபின்
பார்வேந்தன் யாதுசெய்தான்

124 கற்புடைய பூங்கொடியும் கந்தனும் மந்திரியும்
பொற்புடைய முத்தின் பொலங்குடையில்—தற்கூட
வண்டேரில் ஏறி மணங்கொள்ளும் நன்னுடன்
திண்டேரில் ஏறினான் சென்று. (கஎ)

அன்றியும்

125 திசைநடுங்கப் பார்நடுங்கத் தேவேந் திரனும்
மிசைநடுங்க நாகம் வியர்ப்ப—விசையா
நடந்ததே வாம்பரித்தேர் நான்முகமு மாகப்
படர்ந்ததே கானிற் படை. (கஅ)

என்பது

(உரைப்பாட்டு)

சந்திரமதியும் உலோகிதாக்ஷனும்
சத்தியகீர்த்தியும் உடனாக
இந்துகுல நிலவெறிக்கும்
இலங்குமணிக் குடைநிழற்ற
வாம்பரித்தேர் மிசையேறி
மகாசேனை புடைசூழத்
தேம்பொதியும் மலர்த்தாரான்
[தெற்குநோ]க்கிப் போந்துசென்று
விரிவனத்தி லெய்துதலும்
வேட்டைக்காரர் யாதுசெய்தார்

126 கனசரிகள் கட்டிக் கயிறுவலை வீசி
வனசரிக ளெல்லாம் மறித்து—நினையா
தரிந்தார்த்து மாமறலி ஆரத் தணிய
விருந்தாற்றிச் சென்றார் மிக. (கக)

என்பது

(உரைப்பாட்டு)

வனசரிகளா யிருக்கப்பட்ட வயம்பெரிய மிருகம் அடங்கலும் நினைவறவே கொன்றுகுத்தி நிருதியுண்ண விருந்தாற்றிச் செல்லுகின்ற மகாசேனையுந் தேர்வேந்தனும் யாதுசெய்தார்

127 அரிகரி யாளி அடற்புலி மேதி
பரிகலை மான்கரடி பற்றிப்—பரிவாரம்
தான்வேறே போகச் சபாருட னேகமலைக்
கோன்வேறே போனான் குறித்து. (உ௰)

என்பது

(உரைப்பாட்டு)

நானுவித மிருகபக்ஷியை நமன்தேசம் புகவிடுத்துப்
பூநாதன் படையெல்லாம் பொங்கமுறக்கான் புகப்போதலும்

விசுவாமித்திரன் யாதுசெய்தான்

128 விடுத்த மிருகங்கள் வேந்தன் பதியைக்
கெடுத்ததுவும் அந்தமுறை கேட்டுக்—கடுத்து
நறுந்தாரான் வேட்டை நடந்ததுவும் எல்லாம்
அறிந்தான் மறைநூ லவன். (உக)

என்பது

(உரைப்பாட்டு)

தான்விடுத்த மிருக ககங்கள்
சரயுராச்சியம் அழித்ததுவும்
தேன்விடுத்த தாரானுக்குச்
சென்றுநாட்டார் முறையிட்டதுவும்
அந்தமுறை கேட்டுவேந்தன்
அமுன்றுமிருக யாத்திரையாக
வந்ததுவும் தான் அறிந்து
மகிழ்வெய்தி விசுவாமித்திரன்

யாதுவினை செய்தானேவெனில்

129 மாய வராகம் படைத்துத்தனை மன்னவன்பாற்
போயவனை இங்கே புகுத்தென்ன—ஆமென்று
மாமுனியை விட்டு வராகந்தான் சென்றதே
ஏமுனியும் தோளான் எதிர். (உஉ)

என்பது

[உரைப்பாட்டு]

வஞ்சனையால் விசுவாமித்திரன்
மாயவராகம் தனைப்படைத்து
வெஞ்சிலையான் அரிச்சந்திரன்
மிருகயாத்திரை யாகவந்தான்
ஆங்கவனுக்கு எதிர்சென்றான்
அழகினாலும் உபாயத்தாலும்
பூங்கழலான் றனைநம்முடைய
தபோவனத்தில் புகுத்துகென
[மற்ற]துவும் உடன்பட்டு
அரிச்சந்திரன் வரும்வனத்தில்
வெற்றியுடன் எதிர்செல்லும்[போது]
வேட்டைத்தலைவர் [தாம்]கண்டு
யாதுசொல்லி ஆச்சரியப்பட்டாரோவெனில்

130 தன்னிறம் பொன்னிறம் தாளின் குரம்நீலம்
முன்னுரம் வெள்ளை முகம்பச்சை—செந்நிறம்
கண்கொம்பு வச்சிரமாங் காட்டேனம் கண்டுகந்தார்
திண்கொம்பின் வேடர் திரள். (உங)

என்பது

[உரைப்பாட்டு]

இவ்வண்ணம் நவரத்னத்தாலே எடுத்தபல உறுப்புமாகிப் பூமிகீண்டுவரும் வராகத்தைப் புனவேடர்கண் டாச்சரியப்பட்டு யாதுசெய்தாரோவெனில்

131 நாய்விட்டு வில்வளைத்து நாடி வலைவீசி
வாய்விட்டுக் கூப்பிட்டு வந்தெய்தி—ஏவிட்ட
கையாரை எல்லாங் கடுமையாற் கொன்றதே
பொய்யாய ஏனம் புரிந்து. (௨௪)

என்பது

[உரைப்பாட்டு]

*வார்வளைத்து வலைதுடக்கி*
*வலியநாய்கள் பாசம்விட்டுப்*
*போர்விளைத்து விற்குனித்துப்*
*பொருப்பதிர ஆர்த்தெழுந்து*
*வந்தவேடர் தமையெல்லாம்*
*வானுலகந் தனிலேற்றி*
*முந்தஉரோமக் காலடித்த*
*சூரிவராகம் தனைவளைத்துச்*
*சிந்தியோடிய [வேடர்திரள்*
*திரண்டுமறைந்]தங்கு யாதுசெய்தார்*

132 ஆங்குவளைந் தோரை அருங்கோட்டாற் கீறிடவும்
ஓங்குசின வேடர் ஒளிநின்று—தாங்குதலும்
வேட்டையால் ஓடி விரைந்தோரை ஒன்றுமல்
தாட்டையாற் குத்திற்றே தான். (௨௫)

என்பது

[உரைப்பாட்டு]

*முதலில்வளைந்த பெருவேடரை*
*சூரிக்கொம்பால் உடல்கீறி*
*யதனிலனந்த பேர்அழலால்*
*அனேகபாஷை மூதலித்துக்*

கொலையஞ்சா வினைவல்லவர்
கூட்டமுடன் சென்றுதாக்கலும்
நிலையொன்று வகையாக
நிணம்பெருகக் குடல்பறித்து
நாற்றிசையும் தானாக
நடந்துகேழல் உயிர்வவ்வி
மூச்செறிந்து கோபமுடன்
முன்புபோல வதிந்துநிற்றலும்

அதுகண்டு கிராதர் யாதுசெய்தார்

133 அந்தகன் நாட்டை அளைய வழிதேடி
வந்தனர்போல் வில்வேடர் வந்தணுகி—முந்தி
வளைந்திருந்த ஆங்கவரும் வல்விசையின் நாயும்
பிளந்தமைந்து விட்டதே பின். (உக)

என்பது

[உரைப்பாட்டு]

வந்துபாராய் இனியென்று
வரிசிலையை மிகவளைத்துத்
தந்தம்மிலே என்னைப்பார்
உன்னைப்பார் என்றுசாற்றிக்
கடும்பிரதிக் கினைபண்ணிக்
காலனூர்க்குப் போவார்போலக்
கொடுஞ்சிலையார் மிகப்பாய்ந்து
குலவிவேடர் செல்லுதலும்
அணுகவந்து தன்மேலே
அவர்கள்சேவகஞ் செய்யவிட்டுத்
தணிவதன்றியே பெருங்கூற்றம்
சலத்துடனே எழுந்தாற்போலே

*வேடர்தம்மை உயிர்கவர்ந்து*
*வேட்டைநாயைக் குடல்பறித்துத்*
*தாடைதன்னில் சுற்றிக்கொண்டு*
*தன்னைத்தானும் அறியாதாகி*
*அடல்கொண்டு வராகம்நிற்றலும்*
*அகப்படாமற் பிழைத்தவேடர்*
*புடைகொண்டு பரந்துகூடி*
*மற்றும்யாது கூறினரோவெனில்*

**134** **மறித்துஞ் சிலரெதிர்ந்து வந்தவரை ஆவி**
**பறித்துண்டு பன்றி பகரக்—குறித்தொருவன்**
**ஓடினான் தங்கோன் உறையுமிடமேதென்று**
**தேடினான் கூடினான் செ[ன்று.]** **(உஎ)**

*என்பது*

[உரைப்பாட்டு]

*இளைத்தெழுந்த சூகரத்தை*
*இனிநாங்கள் விடுவதோவென்று*
*[வளைத்து]வரு புனவேடரை*
*மற்றதுவும் வளைத்துக்கொண்டு*
*[குறட்டதனாற் கொ ...*
*... முடம்பு] தேய்த்தொருவன்*
*ஓடிப்போன செய்தியெல்லாம்*
*சொல்லவென்று ...*
*தேடிச்சென்று மகாராசனைக்*
*கண்டபின்பு யாதுசொன்னான்*

**135** **நெய்காட்டும் வேலோய்! நெடுந்தேர் திருப்புகெனக்**
**கைகாட்டிப் போமவனைக் கைப்பற்றி—மொய்காட்டில்**
**என்புகுந்த தென்ன இறைவன் விரையப்போய்**
**பின்புகுந்த சொன்னான் பெயர்த்து.** **(உஅ)**

*என்பது*

[உரைப்பாட்டு]

கல்லும்முள்ளும் பாராதே
காயமெல்லாம் தழும்புபட
புல்லசையினும் பன்றிபன்றி
யென்றுபுந்தி மிகநடுங்கி
விழுந்தெழுந்திட் டோடிவந்தவன்
வேந்தர்வேந்தே மீளவிடு
செழுந்தேரை என்றுநின்று
செப்பமாட்டான் கைகாட்டி
நிலவேந்தைக் கண்டபின்பும்
தரியாமல் செல்வானைக்
கரம்பற்றிச் சிறந்தகாட்டிடைப்
புகுந்தது ஏதெனக்

கிராதன் யாதுசொன்னான்

136 ஏதுநீ கேட்கின்றாய் இப்போதே இங்குவரும்
போதுநீ என்று புனவேடன்—போத[வே]
நின்றுநின்று வேல்வேந்தே நீள்கா னகத்திடையே
பன்றிபன்றி என்றான் பதைத்து. (உகூ)

பின்னும் யாதுசொன்னான் கிராதன்

137 கூற்றமோ நஞ்சமோ கோவேறி கோபமோ
மாற்றும் உகாந்தமோ வாயுவோ—வேற்றுப்
புனத்துள்ளார் பாவமோ புக்கதென்றோ பன்றி
வனத்திலே வந்ததென்றான் மற்று. (கூ0)

என்பது

[உரைப்பாட்டு]

அந்தகன்றன் பெருஞ்சீற்றமோ
ஆலாலங் கொதித்தெழுந்ததோ

சந்திரமௌலி கடுங்கோபமோ
சண்டவாயு விரைந்தெழுந்ததோ
ஊழியிறுதி முடுகிவந்ததோ
உற்றவேடர் செய்தபாவமோ
ஆழிநீங்கி வடவைவந்ததோ
அறியவொண்ணா தெனும்படியே
இருங்காட்டில் பன்றிதோன்றிற்று
இனி[யென்ன] கேட்கின்றனை
திரும்பவிடாய் தேரைஎனத்
திடுக்கமுடன் ... த்து
இங்கேபன்றி இந்தா பன்றிவந்தது
அந்தா பன்றி வந்தது என்றுசொல்லி
அங்கேநின்ற அவனைநோக்கி அரிச்சந்திரன்
யாதுசொன்னானெனில்

188 ....... .. .... .... ... ........
காட்டுகென வேல்வேந்தன் கட்டுரைப்ப—மீட்டும்
சமன்வாய்ப்புகு ...... ...... ......
...... ...... ருனழித்து. (கூக)

என்பது

(உரைப்பாட்டு)

வேடன்சொன்ன வார்த்தைகேட்டு
மிகமுறுவல் நிலவரும்பிக்
காடுத...... .யைக்
காட்டிப்போது நீஎன்றலும்
சமன்வாயிற் புகுந்துமீண்டுந்
தப்பிவந்தவர் தம்வினையால்
...... சென்றுமீண்டு
அகப்படுவரோ ஆகில்நன்றென

*அழிந்தவனை முகம்நோக்கி*
*அரசர்கோமான் யாதுசொன்னான்*

139 தூரத்தே காட்டிநீ போவென்று சொல்லிவிறல்
வீரத்தே மிக்காரும் வேல்வேந்தும்—சேர
நடந்ததே போதாக நாற்றத்தே கூடி
அடர்ந்ததே பன்றி அதிர்ந்து. (௬௨)

(உரைப்பாட்டு)

*அஞ்சவேண்டாம் தூரத்திலே*
*அந்தாபன்றி எனக்காட்டி*
*மிஞ்சநீதான் மீள்வாயாகெனவேடனையுந் தேற்றிக்கொண்டு*
*மானவீரர் புடைசூழ*
*மலர்த்தாரான் இரதம்நடத்தலும்*
*போனவீரர் நாற்றங்கொண்டு*
*புகுபுகுஎனப் புடைத்ததிர்ந்து*
*கூற்றெனவே சூகரந்தான்*
*குதித்தோடி எதிர்வரலும்*
*போற்றரிய புகழானுடன்*
*புகுந்தவேடர் யாதுசெய்தார்*

140 முழவுடைய வீரர்தமை முன்னமே கொன்ற
அழலுடைய வீரம் அடங்க—நிழலுடனே
பூதலத்தைக் காக்கும் புயத்தான் திருமுன்னே
மூதலித்து நின்றார் முனிந்து. (௬௩)

*அன்றியும்*

141 வில்லம்பு கோலீட்டி வீரவாள் கைக்கொண்டு
வல்லம் புயத்தார் வளைந்தாரைப்—பல்லினாற்
குத்திக் குடர்பறித்துக் கூத்தாடி மாத்தாடி
ஒத்திற்றே பன்றி உடன்று. (௬௪)

[உரைப்பாட்டு]

வேந்தர்முன்னே மூதலித்து
மிகமலைந்து சினவேடர்
ஏந்தியவா யுதத்துடனே
இராஜசேகர னெதிர்செல்லலும்
நொடிப்பளவிற் கொன்றுகுத்தி
நோக்கவொண்ணு வகைசிறலும்
தடுப்பரிய கோபமுடன்
தப்பினவர் யாதுசொன்னர்

142 'பட்டிப் படராதே பார்த்தளி* பார்த்தளி'யென்
றெட்டிப் பெருக உடன்றெழுந்து—கிட்ட
வருமளவும் பார்த்திருந்து வந்தவரை யெல்லாம்
உருவழியக் குத்திற்றே யுள். (௧௫)

என்பது

[உரைப்பாட்டு]

பூட்டுதிறல் வில்வேடர் போகாமற் சிலர்கூடி
மீட்டுமந்த வேந்தர்வேந்தனை வினவியவர் மலைந்திடலும்
கண்ணிமைத்து விழிப்பமு ... மையெல்லாம்
விண்ணிடையிற் புகவிட்டு விளையாடி ...

அரிச்சந்திரன் யாதுசெய்தான்

143 எட்டுத் திசையும் இடித்தங் கெதிர்ந்தவரைக்
கட்டுத் [தெற]லும் கடுந்திறலார்—பட்டதனை
மல்வாங்கு தோள்வீரன் கண்டு மனம்நடுங்கி
வில்வாங்கி [நின்றான்] மிக. (௧௬)

என்பது

தானைவீரர் சாவுகண்டு தரிப்பில்லாத கோபமுடன்
மானவேந்தன் சிலைவாங்கி மற்றியாதுசெய்தானோவெனில்

* இத்தொடர், வேட்டுவர் வழக்கைக் குறிப்பது போலும்.

144 கொப்புங் கணையும் திருத்திக் குழையளவும்
செப்பும் படியே சிலைகோலித்—தப்பாமல்
[வீக்கி]த்தேர் வேந்தன் விடுப்ப வராகத்தைத்
தாக்கிற்றே சென்று சரம். (கூஎ)

என்பது

[உரைப்பாட்டு]

*[திருத்திமூட்டிச்] சரம்தான் திறம்படவே மிகக்கோலி*
*விருத்தமாக வில்வாங்கி வேந்தர்வேந்தன் கோல்விடலும்*
*விட்டஅம்பு சூகரத்தின் மேற்படவும் சூழ்ச்சியால்*

*யாதுசெய்ததோவெனில்*

145 குருதி யொழுகக் குடல்சரிந்து காட்டிப்
பொருதிறலான் கைப்படுமா போலப்—பெருகவே
நின்றுநின்று [குன்றுதொறும்] நில்லாமற் சென்றதே
பன்றியென்று வந்த பகை. (கூஅ)

என்பது

[உரைப்பாட்டு]

*கோத்தஅம்பு நிறந்தழுந்தலும்*
*குருதியுடன் குடல்சரிந்திட்டு*
*ஆற்றலின்றி அழிவதேபோல்*
*அங்கங்கே அடைந்தடைந்து*
*அகப்படுமா போல்நின்றங்*
*கரசைஆசை மிகக்கொளுத்தி*
*மிகப்பெரிய கானிடத்திலும்*
*வெற்பிடத்திலும் சரிவிடத்திலும்*
*நின்றுநின்றுபன்றி எவ்வெல்லை*
*குறுகிற்றேவெனில்*

146 வாளியிலும் வாயுவிலும் கூடா மனவேகச்
சூழி மணிநெடுந்தேர் தோற்றிவா—மேலாம்
அவனிபதி தன்னை அகப்படுத்திப் போ[ய்த்தே]
கவுசிபதி வாழ்கானின் கண். (கசு)

என்பது

[உரைப்பாட்டு]

சாற்றுகின்ற வேகங்களில் சரவேகம் மகாவேகம்
ஏத்தரிய மகாசரத்திலும் இயங்குவாயு வேகாவேகமாம்
ஆங்கதிலும் மகாவேகமாம் மனவேகம் அஃதிசைந்த
ஓங்குமணி நெடுந்தேரும் பின்பொழிய முன்போடி
விசுவாமித்திரன் ... தபோவனத்திடை வேந்தர்வேந்தனை
நிச்சயமே அகப்படுத்தி .... சென்று
மாயமாகிய வராகம்போகலும் மானவேந்தன் யாதுசெய்தான்

147 போன வராகம் புகுந்த தடங்காணுன்
மானவடி வேலான் மனங்கருகி—மேனி
வருந்தி இளைத்து வருங்கா னிடையே
இருந்தடங் கண்டான் எதிர். (சு௭)

என்பது

[உரைப்பாட்டு]

அம்பினுடனே வராகம்போகலும்
அதன்பின்பே தொடர்ந்துவர
.... அடிச்சுவடின்றியே
மாயவராகம் மறைந்துபோயபின்
மிக்கதனைக் காணுத
விடாயினுலும் மெலிவினுனும்
மைக்கதிர்வேல் தடங்கையான்
வருகின்ற தபோவனத்திடை

*புட்கரணி ஒன்றுகண்டான்*
*அஃது எவ்வகையோவெனில்*

148 தாமரையும் வண்டும் சகோரமும் தாராவும்
பூமருவும் நக்கரமும் போதாவும்—காமரமும்
முட்காமார் மீனும் முரிசங்கும் சூழ்கின்ற
புட்கரணி கண்டணைந்தார் போய். (௪௧)

*என்பது*

[உரைப்பாட்டு]

*சங்குகூவ மீன்குதிப்ப*
*சக்கரவாகம் சகோரமெலாம்*
*எங்குமின்று விளையாட*
*இனவண்டி னிசைபாடப்*
*பூமரங்கள் புடைசூழ்ந்த*
*புட்கரணியை அருகுகாண்டலும்*
*மாமன்னனை முகம்நோக்கி*
*மகாமந்திரி யாதுசொன்னான்*

149 கொந்துலவு தண்டாமக் கோவே இளைப்பாற
இந்தவிடம் நல்லவிடம் என்றுரைப்ப—மந்திரியும்
தேங்காவி வார்குழலும் சேயும் தடாகஞ்சூழ்
பூங்காவிற் புக்கிருந்தார்* போய். (௪௨)

*என்பது*

---

* எனம் எவுண்டு சென்றபின், கங்கைக்கரைகுறுகி, வசிட்டரை வணங்க, அவர் இந்திரசபையில்நிகழ்ந்த வஞ்சினத்தைச் சொல்லி, விசுவாமித்திரனால் இன்னும் இடருறும் ஆயினும் பின்னிலை தவறேல் என்றார்'' என்பது—(அரிச்சந்திர உபாக்யானம்,)

(உரைப்பாட்டு)

எய்கணையார் இளைப்பாற
இவ்விடம்நல் விடமென்று
கைதொழுது மகாமந்திரியும்
கட்டுரைப்பக் கேட்டருளிக்
கோமகனும் திருமாதும்
குமாரனும் மகாமந்திரியும்
பூமரஞ்சூழ் தடங்காவிடைப்
பொற்றேரி னின்றிழிந்து

.... என்செய்தான் சத்தியகீர்த்தி

**150 மாவுக்கு நீர்காட்டி வண்கழுநீர் கொய்திட்டுக்**
**கோவுக்குக்கைகொடுத்துக்கொண் டுபோய்த்—தூவியே**
**நன்னீரின் மெய்விளக்கி நாண்மல[ரின் பாய்ப்ப]டுத்**
**மன்னீதி மந்திரத்தார் மன். [தான் (சுகூ)**

என்பது

[உரைப்பாட்டு]

மன்னர்சேனை பின்புஒழிதலில்
மகாமந்திரி எழுந்திருந்து
பொன்னின்மணித் தேர்பூட்டிய
புரவியெல்லாம் விட்டாற்றி
நீர்காட்டிக் கழுநீர்அருப்புடன்
நெய்தல்வாரி முன்பிட்டுக்
கார்காட்டுங் கொடையானுக்குக்
கைகொடுத்துக் கொண்டுபோய்ப்
புனலாடப் பண்ணுவித்துப்
போந்ததற்பின் பூங்காவில்

*அனேகசாதி புட்பத்திஞல்*
*படுக்கையமைப்ப அமர்ந்திருந்த*
*மகாராசன் மற் றவ்விடத்தில்*
*யாதுகண்டாஞெனில்*

151 **கலைபோய் மடங்கலுடன் கண்டுயிலக் கையை**
**மலைபோய் மடங்கல்மேல் வைக்கும்—நிலையா**
**துயிர்க்குங் கிளியுளிய மொன்ருய் உறங்கும்**
**வியப்பொன்று கண்டுவந்தான் வேந்து.** (**௬௪**)

*என்பது*

(உரைப்பாட்டு)

*மிருகபக்ஷிதம்முட் பகையில்லாது*
*விளையாட்டு முறைப்படுத்த*
*நெருங்கிய கானகத்து*
*அழிவில்லாத ஆச்சரியமுற்று*
*மந்திரியுடன் கொண்டாடி*
*மன்னர்மன்னன் மற்றியாதுகண்டான்*

152 **போதெடுத்து நீரெடுத்துப் போக வெனச்சொல்லி**
**மாதவத்தோர் பிள்ளைகள்தாம் வந்தாரைப்—பூதலமன்**
**இந்தவனம் ஆரதென்ருன் என்னக் கவுசிகர்கோன்**
**நந்தவனம் என்ருர் நயந்து.** (**௬௫**)

*எனக்கேட்டு யாதுசெய்தான் அரிச்சந்திரன்*

153 **வல்லான் வசிட்டமுனி மற்றமுனி தன்னெல்லை**
**செல்லாய் எனவுரைத்த சீர்மைதனில்—நில்லாமல்**
**போந்தனமே என்றென்று பூமாதின் தன்மடிமேல்**
**வேந்தன் துயின்ருன் விழி.** (**௬௬**)

*என்பது*

[உரைப்பாட்டு]

*குருவசிட்டன் தன்னருளாற்*
*'கூடவேண்டா' என்றருளிய*
*அருவனத்தில் விசுவாமித்திரன்*
*ஆசிரமம் அடைந்தோம்என்று*
*சிந்தித்தும் தான்நடந்த*
*திருமேனி இளைப்பினாலும்*
*சந்திரமதி திருமடிமேல்*
*தலைவைத்துத் துயிலுதலும்*

*யாதுகண்டானோவெனில்*

**154 காடகத்து வேந்து கனுக்கண் டலறிட்டவே**
**சூடகத்தை வாங்கிச் சுழன்றெறிந்து—பாடகத்தாள்**
**மின்னென்றும் அஞ்சாத வேந்தே! மிகநடுக்கம்**
**என்னென்று கேட்டாள் எடுத்து. (௬எ)**

*என்பது*

[உரைப்பாட்டு]

*அலைகடல்வாய் உலகடங்கலும்*
*அச்சமின்றியே காத்தளித்த*
*நிலையுடைய மகாராசனே*
*நீஅஞ்சுதற்குக் காரணம்என்னெனக்*
*'கண்டனென் ஓர் கனு'என்றக்*
*காவல்வேந்தன் யாதுசொன்னான்*

**155 ஒள்ளிய ஆசனத்தின் றென்னை ஒருமறையோன்**
**தள்ளி யுலகாள்வான் தானாகி—மெள்ளவெனை**
**வெற்பேற்றக் கண்டேன் விழித்தேன் கனுவதனைக்**
**கைப்பற்று மானே கருது. (௬அ)**

*என்று*

[உரைப்பாட்டு]

வேதமுனி ஒருவன்வந்து
விளங்கியதோர் மண்டபத்தில்
சோதிமணித் தூண்துணித்துத்
துலங்கியசிங் காதனத்தில்
என்னை ... வீழநாக்கி
ஏறி அரசன் தானுகிப்
பின்னைநம்மைப் பொருப்பகத்துப்
பெருங்குடுமி யிடைச்சேர்க்கக்
கண்டனென் ஓர் கனு அதனைக்
காரிகை! ஆய்ந்துரை என்ற
வண்டணையும் தாரானுக்கு
மதர்விழியாள் யாதுசொன்னுள்

156 காட்டுங் கனவிற் கவுசிகனே கண்டவனும் [ளாய்
வாட்டுமவன் வல்வினையே வல்வினைவாம்—கேட்டரு
மன்னு!வெற் பேற்றுதலால் மாற்றலரை வென்றசயம்
பின்னுகும் என்ருளப் பெண். (சுகூ)

என்பது

[உரைப்பாட்டு]

கனவிடையிற் கண்டவன் கவுசிகனே யாவன்நம்மை
நனவிடையில் வருத்தஞ்செய்ய ... த்திறு ...
ஓங்குவரை யேற்றுதலால் ஒருவருக்குங் கிடையாத
பாங்காய சிவலோகம் வந்தெய்தும் நமக்கென்று
மன்னனுக்கு நிரூபித்தபின் மற்றியாதுசொன்னுள் சந்திரமதி

157 எனக்கும் மகனுக்கும் எண்ணுகலை வல்லோன்
தனக்கும் ஒழிந்தார் தமக்கும்—உனக்கும்
அடாத துயரம் அடுத்தாலும் செம்மை
விடாதருள்க என்ருளம் மின். (கூ௭)



என்று

[உரைப்பாட்டு]

இவ்வண்ணமே அரிச்சந்திரனும் மகாதேவியும்
தர்மகாரியஞ்சொல்லி மறந்துவிளையாடியிருந்தார்.
இப்பால் ஏவுண்டுபோன பன்றி யாதுசெய்ததோவெனில்

158 ஏவடைந்த பன்றி இருடி இருகமலச்
சேவடியில் நின்று சிலம்பலம்பக்—கூவிப்
புகுந்தபடி யெல்லாம் புகலுதலும் கேட்டு
மிகுந்தெழுந்தான் கோப வினை. (ருக)

என்பது

(உரைப்பாட்டு)

அரிச்சந்திரனு லேவுண்டு
மாயமாக அணைந்தபன்றி
தரிப்பின்றியே விசுவாமித்திரன்
தன்னடியிற் போய்விழுந்து
பொருப்பதிரக் கூப்பிட்டுப்
புகுந்ததெல்லாங் கூறுதலும்
நெருப்பெனவே கோபித்தபின்னும்
யாதுநிகழ்ந்ததோவெனில்

159 அறந்திகழு மேனி அருங்கோப மூச்சிற்
பிறந்தனர் அங்கிரண்டு பெண்கள்—பிறந்தவர்கள்
தூரப்பால் நின்று தொழுது பணியெமக்குத்
தாரப்பா* என்றார்கள் தாம். (ருஉ)

அன்றியும்

---

* தார் அப்பா—தருக தந்தையே! தா, வா என்ற ஏவல்வினைகள் தார் வார் என்றும் அருகிவழங்கும்; 'வந்திக்க வாரென' (பரிபாடல், 20, 70); 'வாரடாவுனக் கியாதுதானர்தம் மகளுடுக்குமோ' (பாரதம், வேத்திர–12) என வருவன காண்க.

160 தவமுனிக்குக் கோபம் சண்டாளன்* என்ற
புவியுரைக்கு மேற்ற பொருளே—குவியும்
முலைமாதர் தாமும் முனிகோபம் தோன்றிப்
புலைமாதர் ஆனார்கள் போய். (௫௬)

என்பது

(உரைப்பாட்டு)

காணரிய கோபமுடன்
கவுசிகர்கோன் மேலுரைத்தலின்
வீணையுடன் இரண்டு மாதர்முனி
விட்டமூச்சி னிடைத்தோன்றிக்
கோபமெனும் சண்டாளனிற்
கூடியதனாற் புலைச்சியராய்த்
தூபநறுங் குழல்மாதர்
தூரநின்று தொழுதிறைஞ்சி
அடியோங்கள் பணிவிடையா
தென்றருளிச் செய்கவென
முடியோங்கு சடையுடைய
முனீசுவரனங்கு யாதுசொன்னான்

---

* கோபத்தைச் சண்டாளன் என்றது, 'அழுக்கா றெனவொரு பாவி' (குறள்) என்பது போன்ற வழக்கு. இது, நாஞ்சினாட்டிற் பயில்வதாம். அரிச்சந்திரபுராணவாசிரியர்,

"தீதிலா மறைக ளன்கும் தெளிவுற வுணர்ந்த நீர்மைக்
கோதிலாக் குணத்தோர்க் கெல்லாம் கோபம் சண்டாள மென்பார்
ஆதலான் முனிவன் மூச்சின் ஆரழற் சிற்றத் தூடே
போதலா வந்த மாதர் புலைச்சிய ராயி னாரே." (சூழ்—10)

என்று கூறுதல் இப்பாட்டுடன் ஒப்பிடத்தக்கது.

161 *அந்தநெடுங் கீர்த்தி அரிச்சந் திரன்என்பான்
... ... ... ... (ருச)
... இசைமடந்தையர் யாதுசொன்னார்

162 அன்பணையும்ஆகம[தெ]ம் ஆடைக[ளின்]அல்லாமல்
மின்பணியும் செங்கதிரால் வெம்பினேம்—நின்கவிகை
தாராய் கமலைச் சகாயா! நீ என்றார்கள்
வாரார் முலையார் மதித்து. (ருரு)

என்பது

(உரைப்பாட்டு)

ஆகத்தி[னெ]ம் ஆடையினும்
ஆபரணத்தினும் கிரணத்தினாலே
மெய்யெல்லாம் மிகவெதும்பினேம்
.... ... ...
[கலை]மல்கிய நின் ...
கவிகைதன்னைத் தரவேணுமென்று
புலைமடந்தையர் தாமுரைப்பப்
போர்வலான் யாதுசொன்னான்

163 ஈடில் எழில்மடவீர்! என்னுடு சேர்ந்தக்கால்
நாடும் பொருளெல்லாம் நல்கலாம்—கோடும்
தடுக்கப் படாததொரு தண்கவிகை தன்னைக்
கொடுக்கப் படாதென்றான் கோ. (ருசா)

என்பது

---

* இதற்கும் முன்:—
"பெடைநடை மடவீர் வாவிப் பெருங்கரை தன்னில் வந்த
படையுடை வேந்தன் பாற்போய்ப் பாடலா லுருக்கி வெற்றிக்
குடையினைக் கொண்மி னல்லாற் கலவியைக் கொண்மி னென்று
விடைகொடுத் திடலு மாதர் விரைவினிற் றெழுது போனார்.

(சூழ்வினை-15.) என்றபடியும் பிறவாறும் அரிச்சந்திரபுராணமுடையார் கூறிய கருத்துள்ள பாடல்கள் இருந்து சுவடியில் விடுபட்டனவாதல் வேண்டும்.

(உரைப்பாட்டு)

.... என்று என்னிராச்சியம் புகும்போது
செவ்வன்னத் துவர்வாயீர்! ....
நாடும்நிதியும் மிகஉமக்கு நல்கலாகும் அதுவன்றிக்
கோடுடைய [கவிகைதன்னை] கொடுக்கப்படா தெனவுரைத்த
மன்னவனை முகம்நோக்கி மங்கையர்கள் யாதுசொன்னார்

164 ஊர்கேட்கப் பேருரைத்தால் ஒக்குமோ உள்வறண்டு
நீர்கேட்க நெய்வழங்கல் நேராமோ—தேர்வேந்தே!
வெங்கதிரோன் தன்னால் வெதும்பி அடைந்தோர்க்குத்
திங்களன்றோ வேண்டுவது செப்பு. (ருஎ)

என்று

இவ்வண்ணம்சொன்ன மடந்தையரைநோக்கி
யாதுசொன்னான் [அரிச்சந்திரன்]

165 இரவிகுல வேந்தர் எழில்மகுடஞ் சூடிப்
புரவலராய் வாழும் பொழுது—மரபாய்
எடுக்கும் கவிகையிது இப்போ தெவர்க்கும்
கொடுக்குந் தகைமையதோ கூறு. (ருஅ)

என்பது

[உரைப்பாட்டு]

[இரவி]வம்சத்தில் வந்தவந்த
இராசாக்களுக்கு முடிசூட்டுநாளில்
அரசுரிமை[யாக] ....
.... ....
ஈந்தநெடுங் குடைநீழ
லிருந்தவர்களே இராசாக்களும்
இந்[த]நெடுங் குடையில்லையேல்
இராச்சியபாரம் அவர்க்கில்லை
இப்படிக்கு மறைமுதலாக
.... கவிகைதன்னை

*தப்பிநீங்கள் கேட்குமது*
*தகாதென்று மறுத்திடலும்*
*மன்னவனை முகம்நோக்கி*
*வல்லிநல்லார் யாதுசொன்னார்*

**166 அளிய ரெனத்தக்கார் ஆரேனும் வேண்டின்**
**எளிய தெவரும் இடாரோ—களியானை**
**மன்னா! கவிகை மருதே யருளென்றார்**
**மின்னும் மருங்குலார் மீண்டு.** (௬௬)

*என்பது*

*[உரைப்பாட்டு]*

*அரிதாகிய பொருளொன்றை*
*அளிப்பதன்றி [யே]எளி[ய]*
*தொன்றைக்கொடுத்தல் பெருமையோ*
*என்றுவேண்டிய மடந்தையரைக்*
*கந்தமலர்த் தாரான் [தன்]*
*கண்ணருளால் யாதுசொன்னான்*

**167 வேண்டுமின் ஆனை குதிரை மிகுசேனை**
**வேண்டுமின் நாடு விழுச்செல்வம்—வேண்டக்**
**கொடாதபேர் சொன்மின் குலக்கவிகை கேட்க**
**அடாதுபோம் என்றான் அரசு.** (௬௭)

*என்பது*

*[உரைப்பாட்டு]*

*வத்துவாகனம் முதலான*
*மகாவிபவம்நீர் வேண்டினாலும்*
*சுத்தமாகக் கொடாதொழியின்*
*தோஷம்[மிகுதல்] நமக்குண்டு*
*மனுகுலத்தோர்க்கு ஆதியாகி*
*வருகின்ற மாக்கவிகையை*

நினைவறநீர் கேட்கின்றது
நீதியல்ல வெனச்சொல்ல
மன்னவனை முகம்நோக்கி
மற்றவ்வனிதையர் யாதுசொன்னார்

168 **பூங்கவிகை யொன்றும் கொடாயாயிற் பொற்புயமேல்**
**தாங்கி எமதுயிரைத் தாவென்று—தீங்கனிவாய்**
**நாவுலரக் கண்பனிப்ப நாணழியக் கூந்தன்மிசைப்**
**பூவுலரக் கைதொழுதார் போய்.** (கூக)

என்பது

(உரைப்பாட்டு)

நிலையுடைய பெருங்கவிகையை
நீயருளா திருப்பையாகில்
இலகுமணி நெடுந்தோளில்
எம்மையணைந் தருள்வாயாகென
நாவறண்டு மெய்வெதும்பி
நாணழிந்து கலைசரிந்து.
காவலன் றன்[னிரண்டு]
கழற்கீழ்ப்பணிந்து நின்றுவேண்டிய
பறைக்குலத்தோர் தமைநோக்கிப்
பார்மன்னன் யாதுசொன்னான்

169 காட்குழல்* வல்லிநீர் காவலரைக் கண்டக்கால்
கேட்கும் புரிசிறனைக் கேட்டவற்றை—[மீக்கொண்டு]†
போவதே யன்றிப் பொருந்தா தனவுரைத்தால்
ஆவதே தென்றான் அரசு. (கூஉ)

அன்றியும்

---

* காட்குழல்—காழ்க் குழல் (காழ்—கறுப்பு). † 'மீட்கொண்டு' என்றும் படிக்கலாம்; (பெற்று) மீளுதல் கொண்டு என்பது இதன் பொருள்.

170 குலத்தியல்போ பாவ குணமோ குறுகும்
நிலத்தியல்போ கால நெறியோ—புலைத்தியர்கள்
இந்நீதி சொன்னார்கள் என்றென் றிடருற்றான்
மன்னீதி வல்லான் மகன். (கஎ0)

*என்பது*

[உரைப்பாட்டு]

*புறம்புநின்று பண்பாடிப்*
*போகாதே வாய்புதைத்துப்*
*பெறும்பரிசி லடைவுபெற்றுப்*
*பேராதே [எதிர்]நின்று*
*உமக்கொவ்வா தனஉரைத்தீர்*
*உங்கள்குலத் தநீதியோ*
*எமக்குவந்த கடும்பாவமோ*
*என்றுமிக மனங்கனன்று*
*புலைச்சியரே போமென்னப்*
*புரிந்துமற்றவர் யாதுசொன்னார்*

171 நாவி நறும்புழுகும் நல்லீயின் தேனதுவும்
கோவின் நறும்பாலும் கொள்ளாரோ—காவலனே!
கற்புக்கு நாங்கள் கடைக்குலத்தோ ரானாலும்
பொற்புக்கு முண்டோ புலை. (கஎக)

*என்பது*

[உரைப்பாட்டு]

*நாவி காட்டிற் றிரிந்தாலென்*
*[நறும்]புழுகை நல்லோர் கொள்ளுவர்*
*மேவியதேனீக் கூட்டிலாயினுமென்*
*மிக்கோர்[கள்] விருப்பஞ்செய்வர்*

ஆவின் முலை இறைச்சியாகிலென்
[அன்று]கறந்தபால் விருப்பம்செய்குவர்
மேவியயாம் புலைத்தியராகிலென்
மிக்களங்கள் யௌவனத்திடைக்
காவலனே! புலையுண்டோ
கன்னியர்க்குக் குலமாவது
உருவமன்றோ எனஉரைத்தலும்
ஒலிகழலான் யாதுசொன்னான்

172 எட்டி பழுத்தாலென் இளநாய் கொழுத்தாலென்
வட்ட எருக்கு மலர்ந்தாலென்—முட்டவே
உம்மழகை நீரே உரைத்தாலுந் தீண்டுவரோ
செம்மை யுடையோர்கள் சேர்ந்து. (கரு)

என்பது

(உரைப்பாட்டு)

காட்டில்எட்டி பழுத்தாலென்
கருஞ்சுவானம் கொழுத்தாலென்
தோட்டெருக்கு மலர்ந்தாலென்
துவர்க்கழுநீர் குளிர்ந்தாலென்
தீண்டவொண்ணுக் குலமுடையீர்
சிறந்தநீங்கள் அழகா[யினெ]ன்
மாண்ட குணமுடை யார்க்கென்று
மன்னர்மன்னவன் அருளிச்செய்தலும்
புலைத்தியர் யாதுசொன்னாரோவெனில்

173 போழகு கண்ணாற் பருகினாய் பேரிசையின்
சீரழகு பாடச் செவிகொடுத்தாய்—நேரே
உரைக்காற்றி நாவால் உரைகொடுத்தா யோடும்
வரைக்காற்றிற் கொண்டாய் மணம். (கசு)

 என்பது

(உரைப்பாட்டு)

கலத்தவை யீந்தும் புலேத்தியரை
கனு[வி]னும்கண்மூக்குச் செவிவாய்என்னும்
நிலேத்தநான்கு புலனுயுள்ள
பயன்களெல்லாம் நிறையத்தந்தனே
சொல்லுத் திறமளித்தும்
தோற்றமுடன் அழகுபார்த்தும்
நல்லிசையின் பாடல்கேட்டும்
[நனி]நுகர்தலால் மணங்கொண்டும்;

[என்று] மற்றும் யாதுசொன்னர்

174 இப்புலன்கள் [காண்கிற்கும்] இல்ல[ராட் கி]ருந்தபுலே
மெய்ப்புலனென் ருற்புலேயாய் விட்டோமோ—ஒப்பரி
பேராசை யானேம் பிழைக்க அறியோம்நீ [யாய்!
தாராய் புயமென்ருர் தாம். (கூஎ)

என்பது

(உரைப்பாட்டு)

மெய்யொன்றினுல் அணேவதன்றி
மிக்கபிரயோசன மெல்லாம்பெற்ருேம்
ஐயோ! ஒரு புலனுக்காகவோ
புலேத்தியராய் அகன்ருேம் இன்று
மாரசரம் படஅழிந்தோம்
மாற்றுகைக்கோர் உபாயங்காணேம்
ஆரஎம்மை அணேத்தருள்வாயென
உரைத்த அவரை முகம்நோக்கி

யாதுசொன்னுன் [அரிச்சந்திரன்]

175 வந்த பரிசிலரை வாரும் இருமென்று
சந்தம் உரைத்ததுவே தாழ்வாக—முந்தை
நடப்பே உரைத்தீர் நறுநுதலீர்! நன்று
விடப்போகு மென்றான் வெகுண்டு. (கூஅ)

என்பது

[உரைப்பாட்டு]

.... ....
ராசாவினாலே உரைசெய்தோ
நாடுகின்றீர் தப்பாகவே
நம்மைநீங்கள் மதியாதே
சொல்லாதன சொல்லுகின்றீர்
சுரிகுழலீர் விடப்போம்என
நில்லாத கோபமுடன்
நீள்கழலான் கோபித்தலும்
ஆங்கவனை முகம்நோக்கி
அணியிழையார் யாதுசொன்னார்

176 எற்றுகிலும் பின்விடோம் யாமென்ன [என்]பின்போய்ப்
பற்றியுமக் கேது பயனென்றான்—உற்று
நிறைகலந்து புல்லியெம்மை நீத்தகன்றா னென்று
முறையிடுவோம் என்றார்கள் முன். (கூகூ)

என்பது

[உரைப்பாட்டு]

அனேகமாகக் கோபித்தாலும்
அரசனானஉன் பின்விடோம்என்று
புனைகுழலார் தாம்உரைத்தலும்
பூபாலன் எதிர்மொழிவான்
என்பின்பு நீங்கள்வந்தால்
ஏதுபயன் நுமக்குண்டெனா

*மன் கலந்த அரிச்சந்திரன்*
*வனத்திடையில் எமைப்புணர்ந்து*
*இப்பொழுது தள்ளிவிட்டான்*
*என்றுமுறை யிடுவோமென*
*அப்பொழுது கோபத்துடன்*
*அரிச்சந்திரன் யாதுசெய்தான்*

**177 கட்டு மணிக்கசையைக் கைவாங்கிக் கால்வாங்கி**
**விட்டு விடாதே மிக[ப்புடைப்பப்]—பட்டுக்**
**கனிக்குங் குருதியுடன் கண்ணீர் நனைப்ப (எ0)**
**முனிக்கு முறையிட்டார் முன்.**

*என்பது*

*[உரைப்பாட்டு]*

*அபகீர்த்தியை விளைவிப்போம்*
*என்றார்அதனால் அரசர்கோமான்*
.... .... *மணிக்கசையைக்*
*கையில்வாங்கி நடந்துசென்று*
*உருவழியும் வண்ணமாக*
*உடம்பெல்லாம்படப் புடைத்ததுகண்டு*
*புரிகுழலார் பதைத்தோடிப்*
*போகிமுறையோ முறையோ என்று*
*முனீசுவரன்முன் விழுந்தரற்றலும்*
*மோனம்நீங்கி யாதுகண்டானெனில்*

**178 தூறு பிடித்த குழலும் [து]டித்தோடி**
**மாறு பிடித்த மணித்துகிலும்—சீறி**
**உறைவிடு கண்ணும் ஒழியாமற் கூறும்**
**முறையிடும் கண்டான் முனி (எக)**

*என்பது*

[உரைப்பாட்டு]

*அரிச்சந்திரன் மணிக்கசையினுல்*
*அடியாற்ருது அழன்ருேடி*
*விரிக்கின்ற முள்ளிடையில்*
*விழுந்துமயிர் துகில்குலையக்*
*குரலிட்டுக் குருதியுடன்*
*கொப்புளமும் தாமுமாக*
*முறையிட்டவர் தம்மைநோக்கி*
*முனீசுவரன் கேட்பஅவர்*

*அங்கு யாதுசொன்ருரோவெனில்*

**179 ஆரென்று கேட்டான் அவரும் அரசன்பாற்** **[னே!**
**சேரென்ருய் மாமுனியே! சென்றணைந்தோம்—காரண**
**உன்பாலர் என்ருேம் உரைத்ததே தப்பாக**
**வன்பால் அடித்தானம் மன். (எஉ)**

*என்று*

*பின்னும் யாதுசொன்ருர்*

**180 அத்தனைக்கு நாங்கள் அறிவிலோம் ஆனலும்**
**சித்தமதற் கானதுநீ செய்யாமல்—முத்திக்கு**
**நல்வித்தாய் எம்மை நரபாலன் பால்விடுத்துக்**
**கொல்வித்தாய் என்ருர் குறித்து. (எங)**

*என்பது*

[உரைப்பாட்டு]

*முறைகொடுத்த கோதைமாரை*
*முகம்நோக்கி முனிந்துநும்மை*
*அறம்இகுத்த பிழைசெய்தார்*
*ஆரென்ன அவருரைப்பார்*

இன்றிந்த வனந்தன்னில்
வில்லா[ளரச] விருக்கின்ருன்
சென்றுநீங்கள் காணுமெனத்
திருவருளாற் சென்றணைந்தோம்
மன்னியஉன் புகழெல்லாம்
மாமுனியே பாடியபின்
கன்னியர்நீர் ஆரென்னக்
கவுசிகன்றன் மக்களென்ருேம்
என்றதுவே தப்பாக
இவுளிபூட்டிய வடம்வாங்கிக்
கொண்டெம்மைப் புடைத்திழுத்தான்
குலமுனியே! நீகோபித்தால்
உன்கையாலே கொல்வதன்றி
உன்னைஅவ மதித்திருப்பான்
தன்கையாலே கொல்விப்[பாயோ]
தம்பிரானே! எனச்சொல்லி
கன்னலன்ன மொழிமாதர்
கண்ணீரால் மாமுனிவன்
தன்னுடைய கழல்கழுவித்
[தவித்]துரைத்தார் என்றவாறு.

மிருகயாத்திரைக் காண்டம் முற்றும்.

ஐந்தாவது

# விசுவாமித்திரப்பிரவேச காண்டம்

181 மன்ற ல[லரால்] வணக்கமும் வாயார
என்றுங் கணபதியே என்றேத்துங்—குன்றாத
வாக்குங்கற் றூனை மறலிபடை வாராமற்
காக்குங்கற் றூனைக் கழல் (க)

182 கானகத்தே வேல்வேந்தைக் கண்டு கவுசிகர்கோன்
தானகத்த வாறே தவறுரையா—ஈனக்
குலத்தோரைக் கொள்கவெனக் கோமான் மறுக்கப்
புலத்தோன் வினைநினைந்தான் போய். (உ)

*இப்பால் விசுவாமித்திரன் யாதுசெய்தான்*

183 வாட்டடங்கண் நல்லார் வருந்தி அழைத்தமொழி
கேட்டசெவி வேறென்றுங் கேளாயைக்—கூட்டமுமக்
காக்குவென் அன்றாகில் அந்த அரசுரிமை
போக்குவென் என்றெழுந்தான் போது. (ங)

*அன்றியும்*

184 கூற்றென்னச் சீறிக் கனலென்னக் கோபித்துக்
காற்றென்னக் கானங் கடந்தெய்தி—ஏற்றரிய
பொன்னூர மார்பன் புகுந்திருந்த சோலையிலே
முன்னூகச் சென்றான் முனி. (ச)

*என்பது*

[உரைப்பாட்டு]

சடைபடைத்த கூற்றுப்போலவும்
சருமம்உடுத்த கனல்போலவும்
நடைபடைத்த விடம்போலவும்
ஞாலமெல்லாம் நடுக்கம்எய்தக்
காலாக்கினி பொங்கிற்றென்னக்
கானகத்தே வருகின்ற
மேலாய முனியைக்கண்டு
வேந்தர்வேந்தனும் துணுக்கென்று
சந்திரமதியை முகம்நோக்கி
யாதுசொன்னான் சத்தியசந்தன்

185 கண்ட கனுநமக்குக் கைப்பலனாய் வந்ததனை
ஒண்டொடியாய்! காணாய் எனவுரைத்துத்—துண்டப்
பிறைசூடும் எங்கள் பிரானிவனே என்றான்
பொறைசூடி நின்ற புயன். (௫)

என்று

[உரைப்பாட்டு]

இவ்வண்ணமே, விசுவாமித்திரன் வரவுகண்டு
மிகவும்அஞ்சிய மனத்தனாகி
பொற்கொடியாள் தனக்குரைத்த
பூதலக்கோன் யாதுசெய்தான்

186 பதறி எழுந்திருந்து பன்மணிகள் வாங்கிச்
சிதறி முனிதாளிற் சேர்த்துப்—புதலுடைய
நென்முடியில் வண்டுறங்கும் நீணீர் வளநாடன்
பொன்முடியைச் சார்த்தினான் போய். (௬)

என்பது

வணங்காமுடியான் வணங்கி .... பாதம் மிகநொந் ததேயென்னக் கைய ... வருகின்ற கோபாக்கினியைப் பார்த்து வேந்தர்வேந்தன் .... யைக் கையில்வாங்கி நடந்துமிக எதிர் சென்று...ளுக மண்ணிடையில் உடம்புவைத்து ... மணிமுடி மேற் கவுசிகனும் உதைக்க .... வேந்தன்ருனும் பதைத்துப் பாதம்பிடித்து தாளிணை உதைத்தால் கன்றுமோ நொந் தென்று ....

187 ... ... ... ...
.... .... .... ....
கும்பீடு கொள்ளநீ என்றென்று கோபித்தான்
அம்பீடு போல வவன். (எ)

என்பது

.... மோ ஒளிர்வேலாய்! எனக்கு நொந்ததுமன் சித்தமெல்லாம் ... காலாக்கினிபோல ... ஞன்சத்தியசந்தன்

188 ஏது குறைநி[ய]மம் ஏது திருவுள்ளம்
ஏதுபிழை ... .... —பாதம்
விடாது கிடந்தானை மேன்மேல் வெகுண்டங்
கடாதே .... .... (அ)

என்பது

உன்னுடைய திருவுள்ளத்துக்கு அடாதபடி யான் செய்ததென் ... றிருந்தான், விழுந்திருந்த மன்னனை முகம்நோக்கி நாமு...

189 [கடத்]தை யழித்துக் கடமாவைக் கொன்று
தட.... ... ... —....ருந்தாய்
மன்செயுந் தோளாய்! மதியா தனசெ....
... ... ... .... (கூ)

என்பது

*தபோவனத்தை மிகஅழித்து தடத் ... தையும் மிருக குலத்தையும் காலழிக்கும்படி ... அனேக உபத்திரவங்கள் செய்தாய் .... இதுதான் நீ செய்யாதனவேபோலக்.... கோபஞ் செய்த முனிபதியை முகம்நோக்கி ...சொன்னுன்*

**190 ஓட்டு பிறவும் உடைத்த பெருந்தடமும்**
**காட்டுமுனி! யென்னக் கவுசிகனும்—[வேட்டைதனில்]**
**முன்னுள் அழித்ததனைக் காட்டினுன் மொய்தாரான்**
**தன்னுல் அழிந்ததனைத் தான். (கஅ)**

*என்பது*

[உரைபபாட்டு]

*[யான் ]அழித்த பெருந்தடத்தையும்*
*ஏவுபட்ட கலைமானையும்*
*முனிவ! எற்குப் ....*
*பிரதானமாய்க் காட்டியருள்கென்னப்*
*பூருவத்தில் அழித்ததடத்தையும்*
*பொய்யாகிய வராகந்தன்னையும்*
*ஏறுபட்ட தெனக்காட்ட*
*இராசராசன் யாது சொன்னுன்*

**191 கண்ணிலே கைபட்டாற் கையைக் குறைப்பாரோ**
**அண்ணலே! என்றன் அறியாமை—எண்ணக்**
**கடவையோ என்றுரைத்துக் காலிலே வீழ்ந்தான்**
**வடவையே போல்வானை மன். (கக)**

*அன்றியும்*

192 *கடல்கொதித்தால் வேறு கலக்கநீர் உண்டோ
உடல்பகைத்தால் வேறுதுணை உண்டோ—படிமீது
தாய்பகைத்தால் வேறு தமருண்டோ தாழ்சடையாய்!
நீபகைத்தால் உண்டோ நிலை. (கஉ)

என்று

[உரைப்பாட்டு]

இவ்வண்ணமே, இரந்துகுறை மிகஉரைத்த
இராசராசனை முகம்நோக்கி
விரிந்தசடை மகாமுனிவன்
வேறுநினைந்தங் கியாதுசொன்னான்

193 புக்கென் வனமழித்த தெல்லாம் பொறுத்தேன்யான்
தக்க இசைபாடச் சார்ந்தாரைச்—சிக்காமல்
என்மக்கள் என்மக்கள் என்னப் புடைத்திழுத்த
வன்மத்தைச் சொல்லென்றான் மற்று. (கங)

என்பது

[உரைப்பாட்டு]

இருந்தடத்தை யழித்ததுவும்
எதுசெய்ததுவும் யான்பொறுத்தேன்
கருந்தடங்கண் மடவார்உன்னைக்
காணவந்த இசைமாதரை
என்மக்கள் என்மக்க
ளென்று அபிதாஇடவே

---

*"வாரி காய்ந்து கொதித்திடின் மாற்றதண்
ணீரி யாவர் தருவர்அந் நீதியிற்
சீரி யாயெனை நீமிகச் சீறிடின்
யாரி யாரஞ்ச லென்பவ ரென்றனன். (சூழ்-72)

என்ற அரிச்சந்திரபுராணப் பாடல்கள் இதனுடன் ஒப்பிடத்தக்கன.

*வன்மத்தினுல் நீஅடித்தது*
*மனமாச்சரிய மல்லவோ என்ற*
*மகாமுனியை முகம்நோக்கி*
*மன்னர்மன்னவன் யாதுசொன்னுள்*

194 **இல்லையெனல் ஆமோ முனியே! இழிகுலத்தோர்**
**சொல்லுமுறை சொல்லாது சொல்லினுர்—நல்லநெறி**
**தாபித்தே காட்டும் தவமுனியே! தாங்காமற்**
**கோபித்தேன் என்ருன் குறித்து.** **(கச)**

*என்பது*

(உரைப்பாட்டு)

*வேதியனே! கீழ்க்குலத்தோர்*
*[வேண்டுவது வே]ண்டாமல்*
*நீதிகெடச் சொல்லுதலால்*
*நில்லாத பெருங்கோபத்தால்*
*அலைசடை.... நான்அசத்தியஞ்*
*சொல்லமாட்டேன் என்ற*
*சிலைவலியான் றன்னைநோக்கித்*
*திவ்வியமுனிவன் யாதுசொன்ஞன்*

195 **இரப்பார் இடமறியார் யாதேனும் கேட்பார்**
**புரப்பார் கொடுத்துநெறி பூண்பார்—உரைத்தால்**
**கொடுப்பாரலை தின்றேற் குறைந்துரைப்பர் அல்லால்**
**அடிப்பாரோ என்ருன் அவன்.** **(கரு)**

*என்று*

*இவ்வண்ணமே சொன்ன மகரிஷியை முகம்நோக்கி யாதுசொன்ஞன் இராசராசன்*

196 மன்கவிகை யும்புயமும் வேண்ட மறுத்தேனே
முன்கலந்து நீத்[தான் முனை ந்தென்று]—பின்பே
முறையிடுவேம் என்றார் முனிந்தேன்யான் என்றான்
கறையிடுவேல் வல்லான் கனிந்து. (கசு)

என்பது

[உரைப்பாட்டு]

அணுகவில்லா இழிகுலத்தவ
ராயிருக்கவும் அஞ்சாதே
மணிநெடுங்குடையை வேண்டினர்கான்
மறுத்திடலும் மதியாமல்
அணிபுயத்திற் கலக்களன்றார்
ஆங்கதற்கும் மறுத்தபின்பு
இணைபுயமேல் இருங்கானில்
எமைக்கலந்தவன் இப்போதுஅகன்றானென்று
முறையிடுவோ மென்றுசொல்லலும்
முனிந்தடித்தேன் அவ்வளவில்
உணர்வுடையாய்! உன்னுடையபேர்
உரைத்துயிர்கொண்டு அகன்றார்என்று
மணமலிதார் வேந்தன்சொல்ல
மகாமுனிவன் யாதுசொன்னான்

197 கொன்றெவருங் கொன்றோம் எனவுரையார் கூசாமல்
நின்றெதிரேசொல்லுகின்[றாய்] நீவசிட்டன்—வென்றியா
உண்டென்ற வன்மையோ என்று [உறவிழி]த்தான்
தண்டொன்றுங் கையினான் றான். (கஎ)

என்பது

(உரைப்பாட்டு)

அற்பமானவர் கேட்டாலும்
அடித்தவர்க ளில்லை என்பர்

இப்பொழுது வீம்பாக
என்னெதிரே எடுத்துரைத்தாய்
உன்னுடைய குருவாகிய
வசிட்டனுரங் கொண்டோஎன்று
மன்னவனை விசுவாமித்திரன்
மனங்கருகிக் கோபித்தலும்
கோபித்தவன் றனைவணங்கிக்
கொற்றவேலான் யாதுசொன்னான்

198 போகா துலந்தாலும் உன்னுடனே பொய்யுரைத்த
லாகா தெனவுரைத்தேன் [அண்ணலே!—நீகோபம்]
பண்ணா தருள்கென்று பாதந் தனில்வீழ்ந்தான்
மண்ணாளுந் தோளான் [மறி]த்து. (கக)

என்பது

(உரைப்பாட்டு)

[வை]யமெல்லாம் அழிந்தாலும்
மகாமுனியே! உன்னுடனே
பொய்யுரைத்த லாகாதென
யான் உரைத்தேன் பொறுத்தருள்கென
ஆராத காதலுடன்
அடியிணைமேற் சென்றுவீழ்தலும்
மாறாத கோபமுடன்
மகாமுனிவன் யாதுசொன்னான்

199 தேய்ப்பன் உனையின்று தேயாமல் வந்துன்னைக்
காப்பவரைக் காண்பேன் எனக்கனன்று—கோப்பரிய
தக்கநால் வேதத்தோன் ருனெழுந்தான் அப்போது
முக்கணான் நிற்பானே முன். (உ0)

என்பது

[உரைப்பாட்டு]

உன்னுடைய பேரரசும்
உன்னுடைய மகாமந்திரியும்
உன்னுடைய சதிசுதரையும்
வேருக்கக் கடவேனென்றும்
.... வேருக்கும்போதில் ....
மாருமல் உனக்காக
வந்தெதிர்வார் உண்டாமாகில்
ஆங்கவர்கள் சக்தியையும்
என்சக்தியையும் அறிவேனென[றும்]
ஓங்குமுனி கோபித்தலும்
ஒலிகழலான் யாதுசொன்ஞன்

200 தப்பனே கஞ்செய்தோம் வந்துன் சரணடைந்தோம்
அப்பனே! நீகாத் தருளென்னச்—செப்பரிய
சந்தனஞ்சேர் தோளானும் தாழ்குழலும் மந்திரியும்
கந்தனும்போய் வீழ்ந்தார் கழல். (உக)

பதி

(உரைப்பாட்டு)

மன்னர்மன்னனும் மகாதேவியும்
மைந்தர்பூபனும் மகாமந்திரியும்
பொன்னடியிற் போய்வீழ்ந்து
புகுந்தபிழை யெல்லாஞ்செய்தோம்
அடியோங்கள் பிழைபொறுப்பா
யாகவென்று சொல்லுதலும்
முடியோங்கு சடை[யுடைய]
முனீசுவரன் அங்கு யாதுசொன்ஞன்

201 வீடுதனைச் சுட்டு விளையாடி னேமென்று
நீடு பதந்தொழுதால் நீதியோ—ஆடல்
அறியா முனியென் றலைப்பீரோ என்றான்
பிறியாத கோபத்தான் பின். (உஉ)

என்று

[உரைப்பாட்டு]

இவ்வண்ணமே மகா இருடி வருத்துதலும்
நிலைதளர்ந்து மனங்குறைந்து
நிட்பிராணனாய்த் தரிப்பின்றிச்
சிலைவ[வளர்]ந்த தடந்தோளான்
யாது சொன்னானெனில்

202 எல்லா ரளவும் தயவுடையாய்! என்னளவிற்
செல்லாத தென்னென்று செப்புதலும்—சொல்லை
மறாதேயென் [மக்கள் வதுவைமணம்] செய்யப்
பொறாதோநெஞ் சென்றான் புரிந்து. (உங)

என்பது

[திவ்யா]கமங்களுக்கு மனுவென்னும் திறன்காட்ட மன்னவனைச் சருவசிவ தயாளுவாய்ச் சாந்தமூர்த்தியாம் திவ்வியமுனியே! எம்மளவிற் கிருபையில்லாதது ஏதென்றுசொல்லி பதிக்கின்ற அடியிணைமேல் அரிச்சந்திரன் பணிதலும் அரசனைநோக்கி வடிவுடைய என்மக்கள் உன்னைமுன்பு பாடிவந்த வல்லியரை வதுவைசெய்கென மன்னவனும் செவிபுதைத்து யாதுசொன்னான்

203 ஆதி யரசன் அநீதி நடந்தாலும்
நீதி நிறுத்தும் நிலையுடையோய்!—தீதாய
இவ்வார்த்தை சொல்வாயோ என்னாச் செவிபுதைத்தான்
செவ்வார்த்தை நேர்காத்த சேய். (உச)

என்பது

[உரைப்பாட்டு]

*மன்னவர்தம் மதத்தினாலே*
*அநீதியாக வந்தாலும்*
*நன்னெறியில் தாபித்து*
*நிறுத்துகின்ற நலமுடையோய்!*
*புல்லென்ற நீதியினாற்*
*புலைத்தியரை மணஞ்செய்கெனச்*
*சொல்லியதென் கன்மமே*
*யெனவுரைத்துச் செவிபுதைத்த*
*மன்னவனை முகம்நோக்கி*
*மகாமுனியும் யாதுசொன்னான்*

204 **என்னுடைய மக்கடமை யான்சொல்ல நீபுணர்ந்தால்**
**மன்னவனே பாவம் வருந்தாகாண்—உன்னுடைய**
**கற்றறிவு சொல்லாதே காரிகையா ரைப்புயத்தில்**
**உற்றணையாய் என்றான் உவந்து. (உரு)**

*அன்றியும்*

205 **தேவும் உபதேசம் செய்வோனும் நன்னெறியும்**
**யாவுமே யானெனக்கொள் இவ்விடத்தே—காவலனே!**
**இப்போதென் வார்த்தை இகழ்வையோ என்றுரைத்**
**முப்போதும் தப்பா முனி. [தான் (உசு)**

*என்பது*

(உரைப்பாட்டு)

*என்னருளாற் பிறந்தவர்கள்*
*என்னுடைய மக்களானவர்*
*கின்னரஞ்சேர் இசைவல்லவர்*
*கிளர்வுடைய ரூபமுள்ளவர்*

208 இந்த வுலகில் இருநீ தியினடந்தால்
வந்தபடி பின்பே வருமன்றி—முந்த
அறிந்திருந்தும் தீநெறியில் ஆ[ழ்]குவரோ என்றான்
மறந்திருந்தும் தோளான் மதித்து. (உகூ)

*என்பது*

*[உரைப்பாட்டு]*

*இந்தலோகம் அநீதிமானென்*
*றிகழாத படிநடந்தால்*
*அந்தலோகத் தணைந்தபடி*
*அணையுமன்றி அருமுனியே!*
*புலைத்தியரை அறிந்திருந்தும்*
*புல்குவரோ அறிவுடையோர்*
*நிலத்தியல்போ ஈதென்றலும்*
*நீள்முனிவன் யாதுசொன்னான்*

209 நீர்க்குநுரை யுண்டு நெடுமுகிற்கு [மஞ்சுண்டு]
பார்க்கும் உவருண்டு பைங்கொடியார்—யார்க்கும்
புலையுண்டால் ... ... ...
நிலையுடைய வேதத்தோன் ... .... (௩0)

*என்பது*

*நீரினுக்கு நுரையுண்டு மேவுற்ற பாருக்கு விழுப்ப மில்லா உவருண்டு ... ப் புலையுண்டு பிரிந்தவிடமேது புலைநீங் கிவை நிரந்தமையால் என்னுடைய .... ஆனார்களென்றும் .... யோவென்ற தவமுனியை முகம்நோக்கிச் சத்தியசந்தன் யாதுசொன்னான்.*

210 இரவிகுல வேந்தர்க் கிசையாத தொன்றை
விரவி உரைக்கின்றாய் மெய்யே—பெரியோர்கள்
சொல்லிற் பயனல்ல சொல்லுவரோ என்றுரைத்தான்
[வல்விற்] பிடித்த மகன். (௩௧)

என்பது

[உரைப்பாட்டு]

*எல்லையில்லாப் பாவத்தை*
*எடுத்துரைத்தால் இசைவேறோ*
*சொல்லிற்பய னல்லாதன*
*நல்லார்சொல்லப் படுவனவோ*
*என்னைஅல்லற் படுத்தாதுனக்*
*கிட்டமானது செய்யென்ற*
*மன்னவனை முகம்நோக்கி*
*மகாமுனிவன் யாதுசொன்னான்*

211 துதிக்கு [முனியுன் வழித்தோன்றல்] தன்னை
விதிக்குங் கொடுஞ்சாபம் மேற்போய்ப்—பதிக்ரசன்
[தானன்றி யேமுன்னாட் சண்டாள]னானவனை
யானன்றித் தீர்க்கவல்லார் யார். (௩௨)

என்பது

(உரைப்பாட்டு)

*.... த்த திரிசங்குதனை ஒருகோபத்தால்*
*நின்னுடைய வசி[ட்டமுனி*
*சண்டாள]னெனெ நிறுத்திவிட்ட*
*எடுப்பரிய நெடுஞ்சாபத்தை*
*யானன்றி அப்போதில்*

விடுக்கவல்லார் உளரோஎன்று
மீட்டும் முனிவன் யாதுசொன்னான்

212 ஆற்றபுலை உங்கட் கடுத்த புலையன்றே
போற்றியுனை நீயே புகழ்வாயோ—ஏற்றிய
இன்வேர் அறிந்தால் இலைபறித்துக் காட்டுவரோ
பொன்வேலா யென்றுரைத்தான் போய். (௧௧)

என்பது

(உரைப்பாட்டு)

தங்கள்குறை யறியாமல்
தாமொருவ ரைப்பழித்தல்
உங்கள் குலத்துக் கொவ்வாதெனை
உன்னை நீயே ...
வேரறிந்தார்க் கிலைபறித்துக்
காட்டவேண்டா வென்றுபின்னும்
யாதுசொன்னான் விசுவாமித்திரன்

213 எந்நாளும் .... .... ....
மன்னு தமக்கிடிக்க மாட்டாரோ—முன்னுளில்
.... .... புணர்ந்த இப்புலையைப்
போக்கேனு .... .... (௧௪)

என்பது

[உரைப்பாட்டு]

அன்னவன் திரிசங்குவின்
அருஞ்சாபம் தனைத்தீர்த்தேன்
என்னுடைய மக்களைச்சேர்ந்த
இப்புலையைத் தீர்க்கமாட்டேனோ

எண்ணமின்றிப் பிறர்தங்களுக்கு
*இறுங்கிடிக்க வல்லவர்கள்
தண்ணருளாய்த் தமக்கவலைத்
தாமிடிக்க அறியாரோவென்
றருள்செய்த முனியைநோக்கி
அரிச்சந்திரன் யாதுசொன்னான்

214 எப்படியே சொன்னாலும் இன்று புலைத்தியரைக்
கைப்பிடியேன் என்று கவுசிகனை—அப்பனே!
என்னை யலைசெய்ய வேண்டா இனியென்றான்
மின்னையலை வேலான் வெறுத்து. (௧௫)

எனக்கேட்ட கவுசிகன் மகாகோபத்துடன் யாதுசொன்னானேவெனில்

215 மங்கையையும் மைந்தனையும் மாறுவித்து மந்திரியை
அங்கங்கு நீக்கி அரிவையர்கள்—தங்களைச்
சண்டாளியரென்ற உன்னையுமச் சண்டாளன்
கொண்டாள வைப்பேன் குறித்து. (௧௬)

என்பது

[உரைப்பாட்டு]

சந்திரமதியையும் லோகிதாசனையும்
தரிப்பின்றியே விலைப்படுத்தி
மந்திரியாகிய சத்தியகீர்த்தியை
மனைதோறும் இரக்கவைப்பேன்
என்னுடைய மக்கள்தம்மை
இகழ்ந்துபுலை மாதரென்ற

*இறுங்கு—சோளம் என்ற தானியம். பிறர்க்கு இறுங்கு இடிக்கவல்லார், தமக்கு அவலிடிக்க மாட்டாரோ என்பது ஓர் பழமொழி.

உன்னையும் அச் சண்டாளனுக்கு
ஆளாக ஒருப்படுத்துவேன்
என்றுமுனி கூறுதலும்
இராசராசன் யாதுசெய்தான்

216 ஈன்றுள் நஞ் சிட்டால்* எவர்பிழைப்பார் இல்லிடமே
சான்றோய்! விழுங்கிற் றரிப்பவர்யார்—ஊன்றவெனை
என்றுங்காப் பாய்நீ இடர்செய்வை யாகிலினி
ஒன்றியெனைக் காப்பவரார் ஓது. (கூஎ)

என்பது

பெற்றதாயே .... மனையேவிழுங்கும்போது
.... உண்டாகுமோவென உரைத்த
மன்னவனை முகம்நோக்கி மகாமுனிவன் யாதுசொன்னான்

217 சவலையுள மென்னுடனே தக்கதோ என்ற
கவலையுடன் நெஞ்சம் கனன்று—தவமுனியின்
மாசாபம் பேணுதலார் வாழ்க்கைபொருந் தாயாகில்
நீசாபம் கொள்கென்றான் நேர். (கூஅ)

என்பது

[உரைப்பாட்டு]

புலைத்தியரைக் கொள்கிற்கொள்
பொருந்தாயாகிற் சாபங்கொள்என்று
சினத்தெழுந்த முனியைநோக்கித்
தேர்வேந்தன் யாதுசொன்னான்

---

"கொஞ்சிப் பேசுங் குழவிசொற் குற்றத்தால்
வஞ்சித் தன்னை வனமுலைப் பாலினில்
நஞ்சிட் டாலதை நாடி விலக்குநன்
நெஞ்சத் தாருள ரோவிந்ங லத்திலே (சூழ்-71)

என்ற அரிச்சந்திரபுராணப் பாடலை இங்கு ஒப்பிடுக.

218 எத்தும் [இரவிகுல] வேந்தர்க் கிழிவாய
வார்த்தை கொடுத்தின்று வாழ்வதினும்—நீத்தரிய
[கோபமே ஒன்றாக்] குணத்தினாய்! நீகொடுக்கும்
சாபமே நன்றென்றான் தான். (உஅ)

என்பது

எத்தும்விடியற் குலத்தோர்க்கிழிவாக வச்சமுற்றானின் வாழ்வதி[னும்] என்னுடைய குல .... வழியே எனக்கமையும் ஞானமுனியே எனஉரைத்தலும் விசுவாமித்திரன் யாது சிந்தித்தானோவெனில்

219 இன்றென் கடுஞ்சூழ்ச்சி தன்னால் [இரவிகுலன்]
நின்ற நிலையும் நெறிப்பாடும்—ஒன்றிச்
சிவனே அறியுமெனச் சிந்தையினாற் கண்டு
தவனெதிரே நின்றான் தளர்ந்து. (உகூ)

என்பது

தெச்சணையும் தேசகாட்டமும் கடுங்கோபமும் நெடுஞ்சூழ்ச்சியும் அச்சமுற அநிதநேயமும் அநேகசாபமும் யான் காட்டவும் நெறிவிடாதவனின் தைரியத்தை யாவராலும் உரைக்கவொண்ணாது சிவனறியு மித்தனையெனச் சிந்தாகுல இருதயனாகி இளைத்தான் விசுவாமித்திரன் என்றவாறு.

விசுவாமித்திரப்பிரவேச காண்டம் முற்றும்.

# இராச்சிய தான காண்டம்

... காலத்தப்ப ... திறலானிளைத்துத் தனக்கொத்த வாதன ... ருளும் பெரும்படையும் நன்றுடும்கொ .... யாதுசெய்தாரேனுவெனில்

220 வேண்டின ... ... ...
ஆண்டகையு மேதென் றருள்கென்ன—மாண்ட
குணத்தோ .... ....கென்று வேந்தன்
மணத்தோளைச் சென்.... .... (க)

என்பது

.... வேண்டியதை மொழிவளவிற் கொடுக்க ... மருதே யீவாயென்று மகாமுனிவன் செ ... கென்று பூமுனியும் புலத்தியரைப் புனத்துச்சென்று .... மலர்க்கையா லுறவணைத்தலும் .... நன்முனி ... மரசு மாநெதியுஞ் செங்கோல் ...ச்சு .... னதொன்றைப் படையேன் யானென்றால் .... மறந்தாலும் அணையாதாரை அணைகவென் றேயுபக .... க் கொண்டதை யெப்படியுங் கொடுக்கமாட்டோம் .... வேண்டினும் ஒருங்குடனே கொடுப்ப .... வனி யாதுசொன்னான்

221 ஏத்தும் அரசுதனை ஈயலாம் என்...
.... .... .... —கீர்த்தி
எடுத்தான் அரசன் இராச்சியத்தை யெல்லாம்
கொடுத்தான் .... ... (உ)

என்பது

.... இழிவுதனைக் கொடுப்பதில் என் னிராச்சியமெல் லாம் ... தப்பாக முனிதானும் எழுந்து எனக்கின்று அரிச்சந்திரன் .... பிரமித்துத் தணலையிட்டுத் தண்டெடுத்து .... பேரரசு மன்னன் நமக்களித்தா .... யில் எல் லோரும் .... பரிபவனம் ... விபவமும் பாத்தியையும் அரிச்சந்திர .... புத்தமிழ்தெழு பானுசிரமாதனிற் போதலும் மிணை சிறந்த பாக்யத்தை யருகடையவடைவேன் எனவுரைக்கச் சிறந்து ... ல் லேமினென்று சொல்ல வேதியரும் அப்படியே குழைலமிட்டு நின்று சம்பிரமித்த .... ப்பால் மற்றும் யாதுசொன்னுன் விசுவாமித்திரன்

222 படையாளா! நீகொடுத்த பாருக்குப் போக
அடையாளம் [நல்கென்ன] ஆங்கே—கொடையோன்
ஒல்குநரை மேனியாய்! உன்றனக் குப்போக
நல்கினரோ என்ருன் நகைத்து. (௩)

என் பது

(உரைப்பாட்டு)

அரிச்சந்திரனே! நீகொடுத்த
அவனிதனக்கு நான்போக
விருப்புடனே அடையாளங்
கொடுத்தென்னை விடுப்பாயாகென
அருள்செய்த முனிதன்னை
அரிச்சந்திரனும் முகம்நோக்கித்
திருவுடைய ராச்சியமெல்லாம்
கொடுத்தவரார் செப்புகென
நகைசெய்த முகத்தனுகி
நன்முனிவன் யாதுசொன்னுன்

223 பொல்லாரை நான்புல்லேன் பூமுனியே நீவேண்டின்
எல்லா அரசும் இருநிதியும்—செல்ல
அளிக்கலாம் என்றதல்லால் ஆர்கொடுத்தார் என்றான்
ஒளிக்குலாம் பூண்டான் உடன்று. (௩)

என்பது

[உரைப்பாட்டு]

புன்னெறியார் இருதோளைப்
புல்லுவதிற் சாம்பிராச்சியமும்
மன்னெறிசேர் பெருஞ்செல்வமும்
கொடுக்கலாம் [என்றமாத்]திரமன்றிக்
குலமுனியே பாருனக்குக்
கொடுத்தவரா ரெனக்கூறிய
தலமுடையான் றனைநோக்கித்
தவமுனிவன் யாதுசொன்னான்

224 போராத வாய்மை பெயர்ந்தாலும் யான்கொடேன்
பாராசை யுண்டாகிற் பாவையரை— நேராக
வான்றருவே போல்வாய்! மணஞ்செய்வை யாமாகில்
யான்றருவேன் என்றான் எடுத்து. (ரு

என்பது

[உரைப்பாட்டு]

பானுவின் குலத்துவேந்தர்
பகிர்ந்துரையார் என்பதனால்
யானிருந்தேன இப்பொழுது
இல்லையென்று
பொய்மொழிந்தா யாமாகிலும்
புவிஉனக்கு யான்றாரேன்

மையுறைந்த கண்ணுரை
மணந்துகொள்வை யாமாகில்
பாரடங்கக் கொடுப்பேனென்று
படர்சடையோன் அருள்செய்தலும்
போரடங்கு தடம்புயத்துப்
பூபாலன் யாதுசொன்னான்

225 கேட்ட செவிபுதைத்துக் கேளேன் இனியுன்னை
நாட்டும் புகழாரும் நன்னாடு—மீட்டும்
கொடுத்தேன் எனக்கேட்டுக் கூசா துரைத்தான்
வடுத்தேய் மனுகுலத்து மன் (சு)

என்று

இவ்வண்ணமே அரிச்சந்திரன் சொல்லக் கேட்டுக் கவுசிகமுனி யாதுசொன்னான்

.... காணினை .... யென்று செப்புவதன் முன்னமே சென்றிரைய .... ன்ன ... யயென்ன விறையோனு மன்னவனே .... அப்பொழுது கொடுத்துநீ பின்பில்லையென்று அழித்துரைத்தாய் இப்பொழுது .... மும்மையைசுவரியமுந் தந்தேனுனக்கென்று தாரையிறை யெனவுரைக்க வேல் வேந்தனும் சிறந்துடைய விபவமெல்லாம் உனக்கவித்தே னெனமுனிவற்கு தக்கணைமூலமாகத் தந்தேன் எனக்குநீ விடைதாவென் றெழில் முனிவனை அடிவணங்கலும் மகாமுனிவன் விடைகொடுப்ப மன்னவன் அங்கு யாது செய்தான்

226 வாரேற மாப்பூட்டி மற்றெழுந்த மூவருடன்
தேரேறிச் சற்றிடந்தான் செல்லுதலும்—போரேறி
வைகாட்டும் வேலானை மாமுனியும் அப்பொழுதே
கைகாட்டி வாவென்றான் காண். (எ)

என்று

[உரைப்பாட்டு]

சத்தியசந்தனும் மகாமந்திரியும்
தானும்அன்றித் தன்னுடைய
விபவமெல்லாம் மகாமுனிக்கு
வஞ்சனையால் மிகக்கொடுத்து
ஆங்கவனால் விடைபெற்றுத்தன்
ஆழித்தேர் மிசையேறிப்
போங்காலை மீட்டும் மன்னன்
போகாத படியாக
விசுவாமித்திரன் தொடர்ந்தழைக்க
வேந்தர்வேந்தன் யாதுசெய்தான்

227 நில்லாது தேரிவர்ந்து சென்றானை நீள்தவத்தோன்
எல்லா நிதியும் எனக்கென்று—சொல்லி
அளித்தாய் உனக்குண்டோ ஆபரணம் என்ன
ஒளித்தாரான் ஈந்தான் உடன். (அ)

என்பது

[உரைப்பாட்டு]

கவுசிகர்கோன் தொடர்ந்தழைப்பக்
கண்டவேந்தன் தேரிழிந்து
தவமுனிவன் பாலணைந்து
சாற்றுகநீ அழைத்ததுஎன்றலும்
மற்றவனை முகம்நோக்கி
மகாமுனிவன் அருளிச்செய்வான்
பூணாரம் தருகவென்று
போர்வேலான் றனக்குரைப்ப
மன்னவனும் தன்னுடைய
வயங்கொளிசேர் பூணாரமும்

*மின்னிடையாள் பூணாரமும்*
*இளங்குமரன் பூணாரமும்*
*மந்திரிதன் பூணாரமும்*
*வாங்கி அவன் கைக்கொடுத்துத்*
*தந்தேன் இனிப் போகின்றேனெனத்*
*தடுத்து முனிவன் யாதுசொன்னான்*

**228 மாடை அணிகலங்கள் வாங்கிக் கொடுத்ததற்பின்**
**ஆடைதனைத் தாரீர் அழித்தென்றான்—ஆடை**
**வழங்குவகை எப்படியோ மாமறையோய்! என்ன**
**முழங்குநகை செய்தான் முனி. (௬௰)**

*என்பது*

[உரைப்பாட்டு]

*[ஆபரணங் கொடுத்ததற்பின்]*
*அரிச்சந்திரா ஈண்டுடுத்த*
*வத்திரங்களும் தாவென்ன*
*மானவேந்தனும் உரைசெய்வான்*
*உடுத்தபுடவை முதலாக*
*அதனைநாங்கள் கொடுத்தக்கால்*
*உடுக்கவேறுண் டோஎன்ன*
*தடுப்பரியதாய் மிக நகைத்துத்*
*தவமுனிவன் யாதுசொன்னான்*

**229 மன்னர் அறிவில்லார் மற்றறிந்தோம் இன்றென்று**
**துன்னம் பொதிந்த துகிலொன்றை—உன்னமல்**
**நாலாகத் தான்கிழித்து நாடாது வீசினான்**
**மேலாகப் போவார்கள் மேல். (௬௧)**

*என்பது*

(உரைப்பாட்டு)

பொற்புடைய வேந்தர்சற்றும்
புத்தியில்லா ரென்கின்றதை
அற்புதமே அரிச்சந்திரன்பா
லறிந்துவிட்டோ மெனநகைத்து
மாலாகியோர் விருத்தப்பிராமணன்
உடுத்தபீறற்சீலையை விரைந்துவாங்கி
நாலாகத் தான்கிழித்து
ஞாலங்காவலன் மேலெறிதலும்

சத்தியசந்தன் யாதுசெய்தானோவெனில்

அடுத்த பழமுறிலை ஆங்கவர்கள் வாங்கி
உடுத்த[கலை] நின்றகலை யோர்க்குக்—கொடுக்க
விடைகொடுத்தான் போனார்கள் மீட்டுமவர் தம்மைத்
தடைகொடுத்து நின்றழைத்தான் தான் (கக)

என்பது

[உரைப்பாட்டு]

நிலையில்லாத பழஞ்சீலையை
நிலங்காவலன் சென்றுடுத்து
விலையுடைய வஸ்திரத்தை
விசுவாமித்திரன் முன்கொடுத்தலும்
கொடுத்தவரை விடைகொடுப்பக்
கூடியவர் போவதன்முன்
தடுத்து அவரை நின்றழைப்பச்
சால்புடையோர் யாதுசொன்னார்

231 ஏதுக் கினியழைத்த தென்று மனநடுங்கி
பாதத்திற் சென்று பணிந்தோனைப்—போதுற்ற
ஏராருந் தாராய்![நீ] யாகத்தே சொன்னபொருள்
தாராய் எனவுரைத்தான் தான். (௬௨)

என்பது

[உரைப்பாட்டு]

அழைத்தமொழி கேட்டபோதே
அறவுமிக மனம்நடுங்கிப்
பிழைத்துவந்தன மென்றிருந்தோம்
பின்பழைத்தபொருள் ஏதென்று
அஞ்சி[யே] அருகுசென்ற
அரசர்கோமான் றனைநோக்கி
மிஞ்சவேநீ வெகுசுவன்ன
யாகந்தன்னை வேட்கின்றநாள்
எனக்களித்த இருநிதியினை
இன்றளித்துப் போ[க]வென
மனக்கருணை யில்லான்சொல்ல
மன்னவன்அங் கியாதுசொன்னான்

232 சற்றறிவு மில்லையோ தாழ்சடையாய்! என்னுடைய
உற்றபொருள் எல்லாம் உனக்களித்தேன்—மற்றதனுக்
[குள்ளேறுங் கண்டாய்மற்]றேண்பொருளு மென்றுரை
கள்ளேறுந் தாரான் கனன்று. [த்தான் (௬௩)

என்பது

(உரைப்பாட்டு)

எம்பெருமான்! அறிவில்லையோ
என்னுடைய சாம்ராஜ்யமும்

ஒண்பொருளும் இரத்தினராசியும்
அடங்கஉனக்கு அளித்தேன் நான்
உனக்குஅளித்த பொருளும்அங்கே
[சிரீ]பண்டாரத் துட்பட்டதால்
எனக்கென்று வத்துஒன்று
வேறுண்டோ தாவென்று
இராசராசன் சினந்துரைப்ப
விசுவாமித்திரன் யாதுசொன்னான்

233 அன்றளித்த வான்பொருளும் உட்படவென் றப்பொழு
தின்றெனக்குத் தாரை நிறைத்தாயோ—நன்றி [தே
அழிவழக்குச் சொல்லுவரோ ஆழ்துயரம் வந்தால்
சுழிவழங்கும் நீர்நாடா! சொல். (கசு)

என்பது

[உரைப்பாட்டு]

பேரரசும் இருநிதியும்
பெருத்துடைய சகலஐசுவரியமும்
தாரைஎனக் கிறைத்தின்று
தருகின்ற அப்பொழுதே
முன்னுனக்குக் கடவியதோர்
வத்துவும்இம் முதலில்எனச்
சொன்னதுண்டோ ஆமாகில்
சொல்உனக்கு விடுகின்றேன்
இல்லைஎன்று அழிவழக்குச்
சொன்னயேல் [இயை]வதுண்டோ
[தரையி]ழந்தார் எல்லாரும்
தப்புவரோ என்றுமிக
நகைத்தமுனி [தனை]நோக்கி
அரசர்கோமான் யாதுசொன்னான்

234 விட்டும் விடாயாகில் மெய்யுணர்ந்தோய்! நாளவதி
கட்டிவிடா யென்றுரைத்தான் காவலனும்—முட்டத்
துாந்தான் ஒருபதுநாட் சொன்னான் அவனி
புரந்தான் தகாதென்றான் போய். (கரு)

என்பது

[உரைப்பாட்டு]

*மீளஇனி யுரைத்தோமாகில்*
*வினைகள்செய்வன் எனஅஞ்சி*
*நாளவதி கொடுத்தருளினால்*
*[நல்]குகின்றேன் எனச்சொல்லலும்*
*மாமுனியும் பத்துநாளையில்*
*வரவேண்டும் எனச்சொல்லத்*
*தாமரையின் சகன்குலத்தோன்*
*தனக்கதனிற் கிடையாதென்ன*
*மற்றவனை முகம்நோக்கி*
*மாமுனியும் யாதுசொன்னான்*

235 இருபதுநாள் என்றான் இதற்கிசையா தென்ன
ஒருபதுநாள் கூட்டி உரைத்தான்—பெருமானும்
நாற்பதுடன் எட்டுநாள் நல்காய் எனமுனிவன்
[காற்]பதுமம் மேல்வைத்தான் கை. (கசு)

என்பது

[உரைப்பாட்டு]

*மற்றுமுனி இருபதுநா*
*ளெனவேந்தன் மறுத்திடலும்*
*குற்றமின்றி முப்பதுநாட்*
*கொடுத்துவேறு [மொழிந்திட]லும்*
*நரபாலனும் நாற்பத்தெட்டு*
*நாளாக நல்களன்று*

*திருவடிமேற் கைவைத்தலும்*
*திவ்வியமுனி யுடன்படவும்*
*யாதுசொன்னான் அரிச்சந்திரன்*

236 **அப்படியே மாமுனிவன் கூற அவ்விதனில்**
**எப்படியே கொண்டணைவேன் எங்கோவே—ஒப்பிக்**
**கொடுத்தபொருள் நின்பாற் கொணர்வேனைக் கூட**
**விடுத்தருள்க என்றுரைத்தான் வேந்து. (கஎ)**

*என்பது*

[உரைப்பாட்டு]

*காவலன்தா னுரைத்தநாள்*
*கவுசிகன்றான் உடன்பட்டபின்*
*போவதற்கும் வருவதற்கும்*
*பொருள்கேட்டங்கு இரப்பதற்கும்*
*மீள்வதற்கும் நாளில்லை*
*எனக்கினித்தான் விதியில்லை*
*என்னுடனே போந்துன்றன்*
*இருநிதியம் ஒப்புக்கொள்ள*
*ஒருவனைநீ நல்கஎன்றங்கு*
*ஒளிர்வேலோன் வணங்கிநிற்றலும்*
*முனிவரிற் பிரதானனாகிய*
*முனீசுவரனும் யாதுசொன்னான்*

237 **உன்னேவல் இத்தனைநாட் செய்தாரை உன்னுடனே**
**என்னேவலராக யான்விடுத்தால்—உன்னுடனே**
**ஒன்றாகக் கூடி ஒளி[ப்பின்] எனதுடைமை**
**நன்றாகும் என்றான் நகைத்து. (கஅ)**

*என்பது*

[உரைப்பாட்டு]

கோளரவின் வாய்ப்பட்ட
குறுநரிபோல் ...
கேளாய் அரிச்சந்திரனே!
... ...
இத்தனைநாளும் உன்சேவைக்
காரரா யிருந்தாரொழியச்
சுத்தமாக என்னுடைய
சொற்கேட்பார் சிலரில்லை
அளித்தவரை எனக்காளாகக்
கூட்டிவிட்டால் அருநிதியம்
ஒளித்துவிடில் எனக்குஅத்தம்
ஒழிகைநிச்சயம் ஆகுமென்று
சிரித்தமுனி தனைநோக்கித்
தேர்வேந்தன் யாதுசொன்னான்

238 **மற்றவரை யன்றி மறையோரை நல்கென்ன**
**நற்றவனும் வேதியனை நல்கினான்—கொற்றவனே!**
**சொன்னநாள் தன்னிற் கொடாதபேர் சூளுறுகை**
**என்னென்னக் கேட்டான் இறை.** **(௨௩௦)**

என்பது

(உரைப்பாட்டு)

என்மனித்தராய்ப் பின்பிருந்தாரை
என்னுடனே விடுக்கவேண்டாம்
உன்மனித்தராய வேதியரில்
ஒருவரைநீ நல்கவென்று
உரைப்பக்கேட்ட முனிஆங்கு
அவனோடும் உரைசெய்வான்
பெருநிதியம் சொன்னபடி
பெறுதபோது பிரதிக்கினை
ஏதென்னப் பார்வேந்தனும்
[இப்]பிரதிக்கினை பண்ணினான்
அஃது எவ்வகையோவெனில்

239 தாய்தந்தை சொல்மறுத்தார் தங்குலத்தைப் பேணுதார்
வேதந் தனைப்பழித்தார் வீழ்நரகில்—போதம்
விடாதே விழுவேன் மிகுபொருளந் நாளிற்
கொடாதே விடிலென்றுன் கோ. (உ௩௯)

என்பது

[உரைப்பாட்டு]

தந்தைதாய்சொல் மறுத்தாரும்
தங்குலத்தைப் பேணுதாரும்
வெந்திறல்அரசர் களத்துடைய
விட்டுமீண்ட பெரும்பாவியும்
சாமவேதம் பழித்தாரும்
சகாயவோரம் பண்ணினாரும்
[காம]மேவிக் கன்னியரைக்
கட்டழித்த பெரும்பாவியும்
பஞ்சமா பாதகரும்
பரநாரியை உகந்தாரும்
தஞ்சமில்லாக் கடுஞ்சொல்லரும்
தன்மாகிதம் பண்ணினாரும்
எடுத்தகோயில் இடித்தாரும்
இழித்தகுளம் உடைத்தாரும்
அடுத்தவரைக் கெடுத்தாரும்
ஆவினைச்சென் றுதைத்தாரும்
குருவாக்கியம் மீறினாரும்
கோப்பிராமணரைப் பிழைத்தாரும்
ஒருவார்த்தை மொழியாதாரும்
உதையராசியிற் புணர்ந்தாரும்
புகுதும்நர கிடைப்புகுவன்
பொருள்தன்னை நீகொடுத்த

*பகுதிதன்னில் கொடேனெனில்எனப்*
*பார்வேந்தன் பாஷைசொல்லலும்*
*மற்றவனை முகம்நோக்கி*
*மகாமுனிவன் யாது சொன்னான்*

**240 ஆ[ற்]றாசு நீகாத்த அந்நாட்டில் எய்தவிடேன்**
**வே[ற்]றாசு நாட்டில் விரையப்போய்—ஏ[ற்]ற**
**பொருளெல்லாம் நல்கென்ற போதுமுடன் பட்டான்**
**அருளெல்லாம் நீங்கா தவன். (உக)**

*என்பது*

*[உரைப்பாட்டு]*

*இத்தனைநாளும் உன் இராச்சியமாய்*
*இப்போதென் இராச்சியமான*
*இத்தரணியில் நீவேண்டினால்*
*[இங்க]மைச்சர்களும் பரிவாரமும்*
*மண்டலத்தி லுள்ளோரும்*
*மன்னவன் வந்தான் என்று*
*பண்டாரம் உனக்களித்துன்*
*பாஷையெல்லாம் முடித்திடுவர்*
*நான்பகுதிகட்டிய .... லரியதனங்*
*கொடுப்பாயாகென .... முடன்பட்டபின்*

*லோகிதாக்ஷன் யாதுசொன்னான்*

**241 இம்மன்னன் ஆளா இராச்சியமும் இவ்வுலகில்**
**அம்மா இலையென் றவலித்தான்—செம்மை**
**உடையோனும் தன்குடைக்கீழ் [ஒ]ப்பாத நாடு**
**கடைபோகப் பார்த்துரைத்தான் காண். (உஉ)**

*என்பது*

[உரைப்பாட்டு]

*அரிச்சந்திரன் தான்காவாத*
*அகலிடத்திற் கொண்டுவந்தே*
*விரித்தபொருள் தருகின்றேனென*
*விரகறியா துடன்பட்டான்*
*அவன்ஆளா இராச்சியந்தான்*
*அகலிடததில் இல்லைஎனத்*
*தவமுனிவன் எழுந்திருந்து*
*சந்தோஷித்துக் குணலையிடலும்*
*பூபாலனும் திகைப்பெய்திப்*
*புறம்பான இராச்சியமிங்*
*காவதேதென நினைந்தவன்*
*எவ்விராச்சியம் நினைந்தானோவெனில்*

**242** **காட்டும் புனற்கங்கைக் காசி வளநாடும்**
**[கூ]ட்டும் புகழேம கூடமுந்தான்—நாட்டுக்குள்**
**என்காவல் அல்ல எரியார் நுதல்விழியோன்**
**தன்காவல் என்றுரைத்தான் தான்.** (உங)

*அன்றியும்*

**243** **பத்தர் இருக்குமிடம் பண்டிதர்கள் சேருமிடம்**
**உத்தமர்கள் எல்லாம் உறையுமிடம்—முத்தி**
**கொடுக்குமிடம் பங்கயப்பூங் கோயிலாள் நீங்கா**
**தடுக்குமிடம் கண்டாய் அவை.** (உச)

*என்பது.*

(உரைப்பாட்டு)

*ஆதியுக மழிந்தாலும்*
*அழிவில்லா திருக்கப்படுவது*
*வேதியரும் இருஷிகளும்*
*கற்றோரும் விரும்பப்பட்டது*

சிவபத்தர் சங்கோசையும்
சிவபூசையும் திருந்தப்பட்டது
தவமிக்க சருவதீர்த்தமும்
தன்னிடத்தே அடங்கப்பட்டது
திருவாழும் ஏமகூடமும்
காசிஎன்னும் திருநகரியும்
விருபாக்ஷனும் விசுவேசுவரனுமலது
வேறுஉடையார் சிலரில்லை
என்குடைக்கீழ்ப் பணியல்ல
இருஷீசுவரனே! எனக்கூறி

மற்றும் யாதுசொன்னான் அரிச்சந்திரன்

**244 இனியேம கூடத்துள் எய்தநாள் இல்லை**
**முனியே! மொழிந்தமுத லெல்லாம்—பனியேறு**
**பாசிக்கே சங்குறங்கும் பைம்புனல்சூழ் நாடென்னும்**
**காசிக்கே சென்றளிப்பேன் காண். (உரு)**

என்பது

[உரைப்பாட்டு]

மாமுனியே நீகொடுத்த
நாளினவ திக்குள்ளே
ஏமகூடந் தனிற்போகி
[யத்]னம்பண்ண நாளில்லை
காசிமா நகர்புக்குக்
கடுகவேஉன் தனமெல்லாம்
பாஷைகெடா வகைகொடுப்பேன்
பணித்தருள்க விடையென்ற
மன்னர்மன்னனை முகம்நோக்கி
மகாமுனிவன் யாதுசொன்னான்

245 ஆனால் வருகென் றருந்தவத்தோன் போகவிடப்
போனான் அரசர் புரந்தரனும்—போனேன்
நிலைதுளக்கம் இல்லாத நீதியெல்லாங் கண்டு
தலைதுளக்கி நின்றான் தவன். (உசு)

அன்றியும்

246 இவனிலைமை இப்படியே எண்ணாமல் விண்ணோர்
அவைநடுவே ஏதுரைத்தோம் ஐயோ—சிவசிவா
என்னாவல் அற்றா லினியே தெனவேறே
உன்னா வழைத்தான் உடன்று. (உஎ)

என்பது

(உரைப்பாட்டு)

கற்றதெல்லாம் விசுவாமித்திரன்
கடுவினையாற் சோதித்தாலும்
மற்றும்நிலை தவறாதே
மன்னர்பிரான் நின்றசெய்தியைக்
கண்டுபின்னை விசுவாமித்திரன்
கனக்கஉள்ளே பிரீதனாகிக்
கொண்டவினைக் கொடுமையினால்
கோடிகோடி சோதித்தாலும்
தப்பும்வகை யறியாத
தைரியவான்என் றறியாது
அப்பொழுதே வசிட்டனுடன்
அமரர்கோமான் திருமுன்பே
எண்ணாத பாவையினைக்
கொடுத்தோமே என்றறிந்து
புண்ணார்ந்த நெஞ்சனாகிப்
புலம்பியுட னேதெளிந்து

*மற்றுமொரு நினைவுகண்டு*
*மன்னர்மன்னனை வரவழைப்பக்*
*கொற்றவேந்தன் மீண்டுவந்து*
*குறுகினான் அஃது எவ்வகையோவெனில்*

**247 விட்டும் விடாத விதியோ இவனென்று**
**மட்டு விடாத மலர்த்தாரான்—கிட்டத்**
**தழைத்தபூ ணஞ்சடையாய்! சங்கரனை ஒப்பாய்!**
**அழைத்தபடி ஏதென்றான் ஆங்கு. (உஅ)**

*என்பது*

(உரைப்பாட்டு)

*சகலசேமமும் சருவசேனையும்*
*சாம்பிராச்சியமும் தரணிகாவலும்*
*மிகவிடுத்தபின்பும் விடாததொரு*
*விதியோவிந்த ...*
*இட்டிகையா விட்டமதிள்*
*... ....*
*வானேறிட வந்த....*
*மதில்போல இருந்தபடி*
*தேனாறுசெ... வேல்வேந்தனுக்குக்*
*காரிகையாள் யாது வெனில்*

**248 பூழி மதகரியைப் பூங்கொடியாள் தன்கணவன்**
**தாழி திரித்ததனைத் தான்காட்டி—மேழி**
**திரித்தபொருள் .... .... ....**
**... ...ருளம் மின் (உகூ)**

*அன்றியும்*

**249 அரும்பிய கொங்கை யுடன் ஆ ... ....**
**... யுடன்பார்த்த செய்தி—பெருந்தகைக்குக்**
**காட்டா வித.... .... ....**
**[கேட்டாள்] துவர்வாய்க் கிளி. (கூ0)**

*அன்றியும்*

250 காதலுடன் .... .... ...
போது தனையெறிந்த .... — ....
.... ... ... ....
... .... ... (௫௧)

.... *கையகழன்றான் என்றவாறு.*

*பங்கவயலிற்பட்ட .... காலெறிந்தோடுஞ் சோலையிலாழ் குலநாட்டைச் சேர்ந்து வருகின்ற தேர்வேந்தன் .... டி*

251 .... .... .... ....
.... .... .... — ....
.... .... .... ....
கரும்பு தனக்குரைத்தான் கண்டு. (௫௨)

*என்பது*

*எங்கும் மலர்ப்பெ .... செங்கதிர் வேற்கண்ணியுடன் தேர்வேந்தன் புகுந்தபின்பு க .... வண்ணமே காட்டினனே வெனில்*

252 நீராட .... ... ....
காரார் குழலாடன் கைதாலும்—கோ....
நீங்க .... .... ....
பாங்குடைய மானே பகர். (௫௩)

*என்பது*

.... *னேவெனில்*

*நின்றபெரும் பார்மகளும் நீணிலத்தில் ... யே கூட வரமகளும் கூடலாம் போன .... .... திண்டேரேறிப் போவதும் நியாயமல்ல ... புகல்வதுனக் கடைவுமல்ல நான் .... நாட்கழிப்பது நீதியல்ல சூழிமணி நெடுந்தேர்ஏறித் தொல்முனியே நடக்க[வென்று] மற்றியாது சொன்னன் அரிச்சந்திரன்*

253 போதுடனே தேரேறிப் போதுவையே யாமாகில்
தீதில்நெடுந் தேரும் சிவபதமும்—ஈதெல்லாம்
.... ... ...
நீதந்த தொக்கும் நினை (௩௪)

... பின்னும் மாதவத்தோன் யாதுசெய்தான்

254 மன்னன் மறுத்திடலும் மாதவத்தோன் தேரேறி
மின்னும் பெருஞ்சேனை மெய்காப்பத்—தென்னென்று
[தே]னேக்கி வண்டிரங்கும் தெண்ணீர் அயோத்திநகர்
தானேக்கிப் போனன் தவன். (௩௫)

என்பது

(உரைப்பாட்டு)

வயவேந்தன் தேரேற
மாட்டோமென்று மறுத்தபின்பு
செயவேந்தன் கெசதுரக
சேனையெல்லாம் புடைசூழ
ஆழிமணித் தேரேறி
அயோத்தியாபுரி தனைநோக்கி
வாழிமுனி விசுவாமித்திரன்
வழிக்கொண்டு போனபின்பு

அரிச்சந்திரன் யாதுசெய்தான்

255 மாமுனிதான் வைத்த மறையோன் உடனேகப்
பூமுனியுஞ் செங்கால் புவிபொருந்தக்—காமர்
கரித்திரளை யொப்பாரும் கற்புடையாள் தானும்
பெருத்திளைந்துச் சென்றார்கள் பின். (௩௬)

என்பது

(உரைப்பாட்டு)

அரிச்சந்திரனும் சந்திரமதியும்
அரிதான லோகிதாசனும்
விரித்தபுகழ் மந்திரியும்
உடனுக வெய்யகாட்டினில்
பூவடிகள் நிலம்பொருந்தப்
புதியமுகம் வியர்வரும்ப
மேவரிய விளக்கமுடன்
விசுவாமித்திரனை முன்புகொண்டு
போனார்களென்றவாறு

என்றிவ்வண்ணமேசென்ற மகாராசனும் விசுவாமித்திரனும் எவ்வெல்லை குறுகினரோவெனில்

256 காடு [பலகடந்து] ... ...
[நாடு] பலவும் நடந்துபோய்—பீடழிந்த
மன்னவனும் .... .... ....
பொன்னகரி சென்றணைந்தார் போய். (கூஎ)

என்பது

[உரைப்பாட்டு]

கடந்த... ....
கலங்கிச்சென்ற வேல்வேந்தனும்
தடம்பெரிய தேரேறி
முன்பு .... யும்
காடும்நாடும் பலகடந்து
கனகமதில் புடைசூழ்ந்த
நீடுபுகழ் அயோத்தியாபுரியை
நெறியுடன்சென் றணைந்திடலும்
திருநகரி [மாசெனங்கள்
அனைவருமென்ன செய்தாரோவெனில்]

257 ஆர்க்கும் அணிமுரசம் கொட்ட அயோத்தியுளோர்
ஏற்கும் படியே எதிர்கொண்டார்—தேர்க்குள்
வருவானைக் கண்டு மயங்கினர் தங்கள்
பெருமானைக் கண்டார்கள் பின். (௩அ)

அன்றியும்

258 மங்கையுடன் கோமானும் மந்திரியும் பின்னாக
அங்குமுனி காவல் அருகாகத்—துங்கப்
... .... ...வளமை காணார்
அயர்த்தார் அழிந்தார் அவர். (௩௯)

என்பது

[உரைப்பாட்டு]

*நிசசாளத ...*

*நெடுநகரிச் சனமெல்லாம்*

*முரசறைந் துடனோடி*

*[முழு]மணித்தேர் தனைப்பார்த்துத்*

*தங்கள்வேந்தனைக் காணாமல்*

*தாயைக்காணாத கன்றுபோல*

*எங்கெங்கும் புகுந்தோடி*

*எல்லாரையுங் கடந்துமேற்போய்*

*.... ....*

*சடக்கெனவே விட்டுக்*

*கதிர்கண்ட [தாமரை]போலக்*

*காவல்வேந்தன் வரவுநோக்கி*

*எதிர்கொண்ட நகரிசனம்*

*இராசராசனும் பெருந்தேவியும்*

*நன்குமகனும் மகாமந்திரியும்*

*நானிலத்தே ....*

*இன்னல்நோக்கிப் புகுந்தபடி*

*ஏதென்றங் கறியாதிருந்து....*

*யாது சிந்தித்தாரோவெனில்*

259 இரதமெலாம் மாமுனியை ஏற்றியதி ....
....மோ என்னத் தளர்வார்—பெரிதும்
இளைத்தோடி வந்தே [எதிர்கொண்ட மக்கள்]
வளைத்தோடிக் கண்டார் மனு. (உயக)

என்பது

.... காணவேணு மென்று
கிருபாமூர்த்தி தான்செய்ததோ
கிளர்வினையால் முடிந்ததோஎனத்
தமக்குள்ளே தளர்வாரும்
தளர்வாரை ஆற்றுவாரும்
எமக்குள்ள கடுவினைதான்
இப்படியாஎன்று சொல்வாருமாக
வழிநடந்துவந்த அரசர்கோமானை
எதிர்கொண்டு சினேகமுடன்
நகரிசெனங்க ளெல்லோரும்

யாதுசெய்தாரோவெனில்

260 கண்டவர்கள் காணிக்கை கட்டினார் கௌசிகற்கு
மண்டலங்க ளெல்லாம் வழங்கினேம்—கொண்டுபோய்
அங்கே இடுமென்ன வேந்தன் அதுகேட்டுச் [ய்
சங்கேதம் பண்ணினார் தாம். (உசுக)

என்பது

[உரைப்பாட்டு]

மனமகிழ்ந்த நகரிசனங்கள்
மன்னர்மன்னவன் அடிவணங்கிக்
கனகமுடன் நவரத்தினராசி
காணிக்கை எடுக்கலுற்றலும்
மற்றவரை முகம்நோக்கி
மகாராசனும் அருள்செய்வான்

கொற்றமெல்லாம் விசுவாமித்திரனுக்குக்
கொடுத்துவிட்டோம் அப்பொழுதே
அவனுக்கே காணிக்கைகொடுப்பீ
ராமின்களென்று அரசன்சொல்லலும்
செவிசுடப் பட்டார்போற்
சினத்தெழுந்து கோபித்த
[அந்]நகரிச் செனங்களைநோக்கி
அரிச்சந்திரன் யாதுசொன்னான்

261 என்னையே நீர்வேண்டின் யான்புரிந்த மாமுனிவன்
தன்னையே வேண்டல் தகுமென்று—முன்னவர்தம்
பூணிக்கை நீக்கியே பொன்முனிபாற் கொண்டுபோய்க்
காணிக்கை ஏற்றுவித்தான் காண். (சஉ)

அன்றியும்

262 காரமரும் நீண்ட கடிவாயில் விட்டகன்று
தேரமரும் வீதி செலப்போகி—ஆரணநூல்
முற்கோலும் மாமுனியும் சூரிவேற் கையானும்
பொற்கோயி லுட்புகுந்தார் போய். (சங)

என்பது

[உரைப்பாட்டு]

கடிவாயில் பலகடந்து
கனகதோரணம் மிகநிரைத்த
கொடியோங்கிய மறுகுநீங்கிக்
கோயில்புகுந்தார் என்றவாறு.

அப்பொழுது யாதுசெய்தான் விசுவாமித்திரன்

263 போன தவமுனியும் பொன்மண் டபத்தேறிச்
சேனையுடன் சிங்கா தனத்திருந்து—வே...
... .... .... ....
.... .. .. (௨௬௩)

*வேந்தர்வேந்தனை முகம்நோக்கி விசுவாமித்திரன் யாது சொன்னான்*

264 மாடமும் மாநிதியும் மாசே னையுநகரும்
[நாடறிய உள்ளவெலாம் நான்தருவன்—சூடகக்கை
என்மக்கள்] தம்மை இனியணைவாய் என்றுரைத்தான்
வன்மக் கடுநெ[ஞ்ச வன்.] (௨௬௫)

*என்பது*

*(உரைப்பாட்டு)*

*[வளமிகுந்த] திருநாடும்*
*மகாசேனையும் பொற்கோயிலும்*
*அளவிறந்த வத்திராபரணங்களும்*
*பரிகரமும் அடங்கவிட்டு*
*[அற்பனைப்] போகாதே*
*அரசர்கோவே! என்மக்களை*
*இப்பொழுது புணர்கில்உனக்கு*
*இவையெல்லாம் கொடுப்பன்என்ற*
*விசுவாமித்திரன் தனைநோக்கி*
*வேல்வேந்தன் யாதுசொன்னான்*

265 [ஆர்த்தி] அரசும் உயிரும் அழிந்துபோம்
கீர்த்தியப கீர்த்தி கெடாவென்னும்—வார்த்தை
அறிந்துவி[டீர்] என்னை அழித்தழித்துச் சொல்[லல்]
மறந்துவிடீர் என்றானம் மன். (௨௬௬)

*என்பது*

(உரைப்பாட்டு)

*ஆர்த்தியுடன் தேடிய*
*ஐசுவரியமும் அழிந்துவிடும்*
*கீர்த்திஅப கீர்த்திஎன்னு*
*மிரண்டுங்காண் கெடாஎன்பது*
*அறிந்தும்நீர் இப்படியே*
*அருளிச்செய்வ தழகல்லவென்ற*
*அரிச்சந்திரன் தனைநோக்கி*
*அருள்முனிவன் யாதுசொன்னான்*

266 வீட்டு முதல்தரினும் வேல்வேந்தே உன்னரசைக்
காட்டிக் கொடு[க்கக்] கடவையெனக்—கேட்டுப்
பணித்தணியும் தாரானும் பண்டார மெல்லாம்
தனித்தனியே ஒப்புவித்தான் தான். (சுஎ)

*என்பது*

*விசுவாமித்திரன் ஒப்புவிக்கச்சொல்ல* வேல்வேந்தன் *ஏப்படிப் பண்டாரமெல்லாம் ஒப்புவித்தானோவெனில்*

267 இதுசேனை ச[து]படை சதன்ன சாலை
இதுபொன்னின் சாலை இதுதான்—புதிய
பணிச்சாலை மற்றைப் பரிகாத்தார் வாழும்
மணிச்சாலை என்றானம் மன். (சுஅ)

*அன்றியும்*

268 இதுரதச் சாலை இதுகனகச் சாலை
இதுசத்ர சாலை இதுதான்—புதிய
கறைதந்த வேல்வலவர் காவலர்கள் எல்லாம்
திறைதந்த செம்பொற் றிரள். (சுகூ)

*அன்றியும்*

269 ... ... பரிவார வெள்ளம்
இதுசேனை வீர.... .... —....
.... .... .... ....
.... ... .... (௬௰)

பிரானுக்குப் பூமகுடஞ் சூட்டுமிருஞ்சேனை மாத ரிவா....ன்றன் கொற்றமணித்தேர் குதிரை யொன்றொழியா வண்ணம் உடன்.... படுத்தி,

270 வேக விடையோனை ஒப்பாய் இனிஎனக்குப்
போகவிடை தாவெனப் ....— ....
.... .... ... ....
... .... .... (௬௧)

என்றிவ்வண்ணமே செல்வமும் சாம்பிராச்சியமும் சகலசேனையும் உடன் ... திவ்யமுனியை உடன்படுத்தித் தேர்வேந்தன் விடைகொண்டு சிரீ[காசி]பதியை நோக்கிச் சந்திரமதியும் லோகிதாக்ஷனும் சத்தியகீர்த்தியும் உடனாக அந்தமில்லாப் புகழ்கொண்ட அரிச்சந்திரன்றான் போயினான் என்றவாறு.

இராச்சியதானகாண்டம் முற்றும்.

ஏழாவது

# காசியாத்திரைக் காண்டம்

271 தீதுவர வொட்டாது செம்மை நெறிசேர்க்கும்
காதற் பொருளெல்லாங் கைகூடும்—சோதி
விரிமுகத்தா மக்கடவுள் மெய்யருளாற் றந்த
கரிமுகத்தான் செய்ய கழல். (க)

272 பூம்பாயுஞ் சோலைப் புனல்நாடு கைவிட்டுத்
தேம்பாயுந் தாரான் தெரிவையர்கள்—தாம்பாடும்
தேசிக்கே வண்டு தியங்குந் தடம்பொழில்சூழ்
காசிக்கே போனான் கலந்து. (உ)

அன்றியும்

273 போவாய் எனவே விடைகொண்டு பூமுனியும்
வேவாளும் பின்பே விடச்சென்றான்—[பூவாழ்ந்து]
மாமறுகும் தாரான் [மணிக்கோயில்] விட்டகன்று
பூமறுகி னுட்புகுந்தார் போய். (ங)

என்பது

(உரைப்பாட்டு)

விடைகொடுத்த விசுவாமித்திரன்
வேவாளாகப்
புடைகேட்க வேணுமென்று
பின்புபோதப் போர்வேந்தன்
பொலன்கொள்மணிக் கோயில்விட்டுப்
பூபாலனும் மற்றைமூவரும்

இலங்குகொடி நெடுமறுகி
வேய் ... கொண்டுபோகலும்
இதுகண்ட நகரிசெனம்
எவ்வண்ணம் வந்தாரோவெனில்

274 **கண்கள் புனல்சொரியக் காந்தி முகங்கருகப்
பண்கொள் துவர்வாய் பதஞ்சிவப்ப—விண்கொள்
கதிர[டர்த்]த வான்பயிர்போற் கால்தளர வந்தார்
பதியிருந்தார் வேல்வேந்தன் பால்.** (ச)

என்பது

[உரைப்பாட்டு]

விரிவுடைய ராச்சியத்தையெல்லாம்
விசுவாமித்திரன் தனக்களித்துப்
பரருடைய இராச்சியந்தேடிப்
பார்வேந்தன் புறப்பட்டு
சந்திரமதி யுடனுகத்
தன்குமரன் ...
மந்திரியை யுடன்கொண்டு
மாக்கோயிலைப் பின்பிட்டுப்
போகின்ற னெனக்கேட்டு
[பு]ரிசெனங்க ளெல்லாரும்
வாய்கருக முகங்கருக
மனங்கருக உடல்கருக
நடையிழந்து விழுந்தெழுந்து
நகரிசெனம் பின்பிடித்துப்
புடைகெழுதோள் வேந்தனிடைப்
புகுந்தவர்க ளெவ்வண்ணம்
குறுகிப் பிரலாபித்தாரோவெனில்

275 நம்பினவர்க் கிப்படியோ ஆவதுநீ நல்வேந்தே!
தம்ப மினிநமக்கார் தா[மாவார்]—செம்பதுமச்
செம்முகத்தாய்! என்று திசைகேட்ப மோதினார்
தம்முகத்தே தங்கரத்தாற் றும். (ரு)

*அன்றியும்*

276 வாரணியும் மாந்தோல் மறையவனும் பார்புரப்பான்
ஆரணியம் போவான் அரசனும்—தாரணியில்
எம்மானை விட்டிங் கியாமாம் இனிதிருப்போம்
அம்மாநன் றென்றார் அழுது. (சா)

*அன்றியும்*

277 கந்தன் துயரும் கருங்குழலாள் தன்துயரும்
எந்தையெதிர் நோக்குவான் எப்படியோ—மந்திரிதான்
ஆற்றுவான் எப்படியோ அண்ணல் துயர்கண்டால்
மாற்றுவா ரில்லா[தே] மன். (எ)

*அன்றியும்*

278 தருமத்தின் வேரே! சகத்துயிரின் தாயே!
கருணைப் பெரிய கடலே!—திருமடந்தை
வாழ்வே! துணிந்து வனம்போக யாஞ்செய்த
தாழ்வேதுண் டென்றார் தளர்ந்து. (அ)

*என்பது*

[உரைப்பாட்டு]

*உன்னை நம்பி இருந்தவரை*
*ஓம்பாமல் அகன்றுபோமது*
*மன்னவனே! உனக்குநீதியோ*
*என்றென்றே வருந்துவாரும்*

எங்களுக்குயார் தம்பமினி
　　என்றுகலுழ்ந்து ஏங்குவாரும்
தங்கள்கரங்கள் முகம்புடைப்பாரும்
　　தளர்வாரும் ...
மறையவனும் அரசாள்வான்
　　மன்னவனும் வனம்போவான்
குறையில்லை தென்பாரும்
　　குவலயமேல் வீழ்வாரும்
அழுவாரும் தொழுவாரும்
　　அடியிணைமேல் விழுவாரும்
வேந்தனிரு தாளிணைகள்
　　விழிநீரால் கழுவுவாரும்
சந்திரமதி [பெருந்துயரைத்
　　தணிக்க]வல்லனோ அமைச்சனென்பாரும்
இந்நிலைமை காண்பதில்யாம்
　　இறக்கைநன் றென்பாரும்
கருணை[யின் சாகரமோ]
　　கழன்றுபோவ தென்பாரும்
அருநெறியின் பெருஞ்செல்வமோ
　　அகன்றுபோவ தென்பாரும்
பல்லுயிருக்கும் பெற்றதாயோ
　　ப[ற]ந்துபோவ தென்பாரும்
தொல்லுலகின் நிதிதனைத்
　　தோற்றுவிட்டனம் யாமென்பாரும்
ஆதரவாம் பெருஞ்செல்வமோ
　　அகன்றுபோவதென்று அரற்றுவாரும்
மாதவர்தம் குணநிதி[யோ]
　　மறைந்து போவதென்பாரும்
ஆதிதிருக் குலம்சேரும்
　　அயோத்திதனில் [ஆர்ந்த]திரு

*பீறுற்ற கானஞ்சேரப்*
*போவதேனை விடுவாரும்*
*எண்ணமின்றி வந்தவினைக்*
*கேதுசெய்வோ மினியென்பாரும்*
*கண்ணுமில்லையோ பாவியந்தக்*
*கவுசிகனுக் கென்பாரும்*
*முனிவனல்ல காணுமவன்*
*மூர்க்கன்காணு மென்பாரும்*
*தனியேயின்று விடலாமோ*
*தார்வேந்தனை யென்பாருமாக*
*இப்படியே நகரிசெனம்*
*ஏகமாகப் பிரலாபித்தலும்*
*ஏதமிக்க மகாசேனை*
*எவ்வண்ணம் பிரலாபித்ததோவெனில்*

**279** **இவ்வளவும் பொய்யென் றிருந்தோம் இனிவனஞ்சேர்**
**வவ்வளவோ வேந்தன் அருளென்று—செவ்வண்ண**
**வேலிடையிற் கையோழிந்து வேல்வேந்தர் வேந்தன்ற**
**காலிடையில் வைத்தார்கள் கை.** **[ன் (கூ)**

*என்பது*

[உரைப்பாட்டு]

*இத்தனைபோதும் விளையாட்டோ*
*சோதிப்போ என்றிருந்தோம்*
*மெத்தெனவே அரசர்கோமான்*
*வனம்போகை மெய்யாய்விட்டதேனை*
*அரசர்தங்கள் ஆயுதத்தை யெறிந்து*
.... ....

280 தேடிப்பின் பற்றித் திருவடிமீ தேவீழ்ந்து
வீடுவிட்டு மாளிகையின் மேற்போந்து—நீடும்
நடைகுறைந்து நல்ல தவங்குறைந்து வேதக்
கிடைகுறைந்து வாழ்வ[ற்ற] கேள். (௱)

*அன்றியும்*

281 தோலுடைக்குப் பட்டுடுத்துச் சூட்சந்* தருங்கையில்
வேல்பிடித்து வேடமெல்லாம் விட்[டொழிந்து]—நூல்
பாப்பிலே† யன்றிப் படையாண் டிருக்கைக்கு [பிடித்த
மூப்பிலே தீட்போ§ முனி[க்கு]. (௱க)

*அன்றியும்*

282 அரியிருந்து வாழிடத்தே யஞ்சாமற் சென்று
நரியிருந்து வாழுமோ நாட்டீர்—விரிசடை
பற்றீ ரெனவுரைத்தார் பக்கத்தே போதுகின்ற
ஒற்றுளன் கேட்டான் உழன்று. (௱உ)

இவ்வண்ணம் ... *சருவசேனமும் பரிபவம்பண்ணு கிறதை ஒருவரும் தன்னை ... விசுவாமித்திரன் யாதுசொன் னன்*

283 என்வனத்தைக் கட்டழித்தாய் ஏனந் தனைக்கொன்றாய்
நின்மனத்துக் கானற்போல் நீவைதாய்—உன்மனித்தர்
நின்றுரை வைவித்தாய் நீகொடுத்த பேராசைப்
பொன்றுமற் கைக்கொள்வாய் போந்து. (௱ங)

என்பது

---

* *சூட்சம்—தருப்பைப் காப்பு நாணுமாம்.*

† *பாப்பு—பிராமணத்தன்மை.*

§ *தீட்பு—ஒழுக்கத்தில் உண்டான வடு, இழிவு.*

[உரைப்பாட்டு]

முன்னம்நீயென் வனந்தன்னை
முறித்தெறிந்தழிவுசெய்தாய்
பின்னையந்த வனந்தனில்
மிருகமெல்லாம் பிடித்துக்கொன்றாய்
நின்மனத்துக் காறுபோல்
நீயிழிவாகப் பரிபவித்தாய்
இப்படி .... ச்சாறு
இவரைக்கொண்டு சொல்விப்பரோ
அப்பொழுதே நீவேண்டினால்
அரசடங்க யான்கொடேனோ
ஒப்புக்கொள்ளாய் உன்னுடைய
இராச்சியத்தை எனஉடன்ற
விசுவாமித்திரன் மொழிகேட்டு
வேந்தர்வேந்தன் யாதுசொன்னான்

284 சொன்னமொழி கேட்டுந் துணுக்கென்று பின்னோக்கி
அன்ன முனிவன் அடிபணிந்து—பின்னே
எழுந்தருளி வந்நாயோ எங்கோவே! என்றான்
கொழுந்தி[ணை ந்த] தாரான் குறித்து. (கசு)

அன்றியும்

285 வெறுக்கக் கடவ வி[னையபி]லார் சொல்லைப்
பொறுக்கை பெரியோர் புகழ்காண்—ஒறுக்கை
ஒழியாய் எனவே உருத்தமுனி நெஞ்சம்
அழியாமல் ஆற்றினான் ஆங்கு. (கரு)

என்பது

[உரைப்பாட்டு]

வேவாளாக உடன்வந்த
விசுவாமித்திரன் கோபத்தை

வாய்வார்த்தை[யாற்] கேட்ட மன்னன்
மனம்நடுங்கிப் பின்னோக்கி
எந்தாய்!கோவே! பின்பேசி
எழுந்தருளி இருதாளும்
நொந்தாயோ எனமொழிந்து
நுடங்கிஅடி யிணையில்வீழ்ந்து
மற்றவன்றன் கோபமெல்லாம்
மாறும்வகை இத[மூடனே]
சி[ற்றறிவோர்] செய்தபிழை
திருவுள்ளத்திற் கடுக்கலாமோ
என்றுசொல்லி இரந்துரைத்தலின்
எழில்முனிவன் கோபமாறி
நின்றவனை முகம்நோக்கி
நிலங்காவலன் யாதுசொன்னான்

286 உன்னுடைய மாநேதியத் தொன்று குறையாமல்
என்னுடனே போந்தங் கெடுப்பானை—நின்னுடைமை
பூட்டிவிடாய் முந்நூல் புரளுந் திருமார்பா!
கூட்டிவிடாய் என்றான் குறித்து. (கூ சுஉ)

என்பது

(உரைப்பாட்டு)

அருந்தவனே யான்கொடுக்கும்
அருத்தமெல்லாம் வாங்கிநிற்குத்
தரும்படியே அருள் ... தண்டக்காரன்
